44. From the foregoing you will see that the Saiva Sidhanta or any part of our belief was enslaved out of the Aryan system and it remains the same as in the days of yore, before the time they [Aryans] entered India, but there is no doubt that though the compromises I have referred to and other causes a good deal of Aryan paint has been put upon our articles to make them appear as Aryan commodities. As we have already seen every department of our literature was flooded with sanskrit thought and language. In the place of (கடவுள்) Kadavul Ooyir (உயிர்) and Venai (வினை) we have now Pathy (பதி) Pasu [பசு] and Pasam [பாசம்] We have the Adwitha doctrine as well as they and so on. Though we have been in a great whirlpool we have escaped from being sunk. Perhaps it may not be out of place for me to explain the difference between the Adwitha of the Aryans and our own. The latter is different from the other, which is the Adwitham of the Vedandists as taught by the great Sankaracharariar in a very important point. It is also different from the Divitham of Mathuvachariar or the Vishishta Divitham of Ramanujachariar. The goal of the Vedandists and that of the Sidhandists is one and the same, *viz*., the Supreme Being. The soul of Vedandists

become absorbed in God or the universal soul and looses its individuality. But it is not so with the soul of the sidhandists. No doubt their soul becomes one with God, but at the same time it is distinct from him that it may continue to express its eternal gratitude for the state of Supreme Bliss in which He is pleased to place it in order that it may adore him. Thus these facts also go to show that our ancestors were not indebted to the Aryans for our religious truths. I have not said anythiug about the doctrines preached by Madavachariar and Ramanujachariar beyond stating that they are different from ours as I consider them to be of much later origin in the Dravidian country.

45. Perhaps you may dread the consequences of the conclusions arrived at by me, as our religion becomes a religion without the basis of the Vedas and as you may therefore forfeit the title of Hindu according to the definition proponded by Mr. Justice Sathasiva Iyer. I have only given you a historic retrospect of our religion. It is not my object to prevent you from accepting the vedas as a revelation or to disturb your faith in any other way. It is our duty to accept truth wherever it may be found.

46. Ladies and Gentlemen:—I regret that this paper has run to this length. I must close it. I shall do so after recapitulating what I have said and after an exhortation. I have told you how ancient is your lineage, how time honored is your civilisation, how early your ancestors attained pre-eminence in maritime trade, how they endeavoured to cultivate motherland to the best advantage, how early their literature attained a polished state, how they laid other nations under obligation by increasing their vocabulary and how they rendered a number of Indian languages capable of being written; I have also told you how sublime and pure was the ancient Faith of the Dravidians, how it became corrupt by means of compromises

and concessions, how they treated their brethren and how we are treating them at present. I again ask you to think seriously of the past and see what your forefathers have done. Past glory is always inspiring you must set their laudatory actions before you as models and follow in their footsteps. I repeat that under the urges of the British Rule you need not trouble yourselves about securing political privileges. That matter may be safely left in their hands and that your attention may be directea to more important matters that you may raise yourselves again in the scale of nations and win back the departed glory of the bye-gone days. There can be no doubt that the securing of material advantages should be our foremost object. The paternal Government under which we live holds out Facilities for trade by means of Railways, Steamers and banking laws, encourages agriculture by means of experimental Forms, and Co-operative credit Societies and in many other ways. You have only to take advantage of them and work your way. But there are matters in which the state is unable to help you and these you have to help yourselves. The Government is doing its best to impart Secular education amongst the masses. but it is possible for it either to give religious education or moral instruction on a religious basis. There are matters which should be undertaken by yourselves in order to raise yourselves as a nation. Year after year we may meet under the auspices of the Saiva Sabai talks on for days and then disperse without doing anything useful. In order something effective may be done, the Sabai has framed rulers and formulated certain proposals. Every one of you should interest yourself in the matter and do your mite. In teaching your religion you should lay aside all the learned commentaries and the halo of mystecism that have been woven round this Sidhanta doctrines and the technicalities that have been spun around them. It will be selfish for philosophers alone to go to Heaven. Humbler individuals also ought to reach that goal. The few simple doctrines

pertaining our Faith ought to be inculcated in a language consistant with their simplicity. In order to teach morality to the young of our race the best of intellects have been racking their brains to discover or to create the best moral class books. As far as the Tamilians are concerned there can be no difficulty in the direction. We have the following graduated series and their fellows cannot be found in any other language in such numbers, *viz*:—

(1) ஆத்திசூடி (Athisodi)
(2) கொன்றைவேந்தன் (Konray Vendan)
(3) வெற்றிவேற்கை (Vetti Vetkai)
(4) வாக்குண்டான் (Vakundan)
(5) நன்னெறி (Nannari)
(6) நல்வழி (Nalvazhi)
(7) நீதிநெறி விளக்கம் (Needineri Velakam)
(8) நாலடியார் (Naladiar)
(9) திருக்குறள் (Thirukural)

There are such excellent series that but for the invocation stansas at the beginning of every work excepting the last three they could be regarded as cosmopolitan and accepted by all religionist I am aware that they are used in most of the missionary institutions after expungeing the objectionable stansas referred to by me. I would again entreat you to go to the help of mother Tamil. She is in great danger. She is about to loose the position which She held for years in the public estimation. As I have already submitted that but for the kind patronage of the Government and the University it must have become a dead language by this time. I should also draw your attention to the condition of the immense property which our ancestors had bequeathed for religious and charitable purposes. There is a good deal of malversation and mismanagement on the part of the individuals entrusted with them. As there are other gentlemen to speak on the subject at length I shall only say that it is your duty to set matters right.

47. I have already mentioned to you the caste system. It is not every one of you that is conversant with the manner in which it presses hard upon certain sections of the community. It is not an easy matter to do away with the existing distinctions in one day. But it is possible by a proper organisation to remove gradually the hardship to which the unfortunate creatures are subjected. I may illustrate what I say by an illustration or two. When the lower classes go to the temples for purposes of worship they are unnecessarily kept out at long distances. Some in-human people are not satisfied even with such sacrifies on their part. They think that they would be polluted unless the poor people kept themselves away at a still further distance Inspite of all this ill-treatment I have found them more God fearing than their tormentors. I think that it is our bounden duty to study the authorities that brought into existence such practices and take steps to remove them gradually. In the Tanjore District well to do people of the Shanar caste and others of that stamp have access into our temples. In the Madura District they are permitted to pull the car. In the Tinnevelly District the practice is different. There cannot be one law for one place and another for another place. A good deal of the ill-treatment to which these unfortunate people are subjected is due to local prejudices. I reiterate that we should study these questions and make amends for the past. This Saiva Sabai has made the necessary rules to work in the divition and it it is the want of Funds that has prevented it from taking active steps in the matter. Here I cannot help mentioning to you the latest appeal made by the Bishop of Madras for funds to convert these classes to Christianity. For my part I should wish them to become christians than being treated in the cruel manner we treat them at present. We do not show these people that kindness which we show to our dogs. As long as these unfortunate beings stick to their ancestral Faith we extend to them this in-human treatment, bnt the moment they embraces

christianity or become a respectable Government official we change our attitude. But they cling to their ancestral religion so stead fastly that it is with great pang they ever give it up. I remember that during the Anti-Shanar riots about ten years ago one whole village of Shanars embraced Islamism in one day seeking the protection of the Mahomedan community, but when the crisis was over they relapsed into Hinduism on the third day.

48. I next refer to the condition of converts to other religions from our religion and I am done. Perhaps you have noted that the condition of some of them is most pitiable. For some reason or other they embrace christianity remain in that fold for some months and then become desirous of rejoining their ancestral religion and the bosom of their family. I have come across many such cases and sympathised with their wishers But in the existing state of the society nothing can be done to help them at present. But in older times such people were taken back without much ado. One of our greatest Saints appear was a convert Jainism, and after he became a reconvert to Saivaism he had to pay the penalty for his act by undergoing persecution at the hands of the Pallava King. Manikavasakaswamy converted a large number of Buddhists at Chithamberam and before that he reconverted a large number of Hindus who had embraced Christianity of the Syrio-Romo-Church about the middle of the third century A. D. in Malabar This latter fact is not found in the Vethanur Puranam or any other life of the saint. but is recorded in the Christian church history of that country. It is also a historical fact that Thirugnana Sambanda Moorthy converted a large number of Jains to Saivaism. In the face of these facts it is impossible to assign any cogent reason for the practice not being in force at present. To my knowledge I know that certain stray cases of reconversion have taken place in this District as well as in Travancore, but they did not attract public attention at the time.

49. Brother Dravidians I again apologise to you for my inordinately long address, I beg you to consider all that I have submitted and bestow your earnest thought at least on some of them which strike you to be deserving of consideration. It is only in that way you can regenerate the nation and raise it from its fallen position. In this exhorting you I should not be considered to set class against class. Throughout this paper I have referred to our Aryan brethren. In doing so, I have not done so in an unfriendly spirit or in a disrespectful way. It is impossible for me to do so. I am aware that they are a set of highly intellectual people and I have the best of friends amongst that community. In case any harm has been done by the Aryans to our ancestors the present generation of them or their nearest predecessors cannot be held responsible for the action of their ancestors. I had to speak of them in referring to certain well known historical facts and I have taken particular care not to offend their feelings. Again I vividly remember the memorable words of His Imperial Majesty our Emperor, delivered to the 315 Millions of his subjects in this Vast Empire, through the corporation of Bombay on the eve of his departure from our shores during the early part of this year. Any man with any feeling would not in the face of those words be guilty of the least harm to any section of his country men. The words to which I refer are as follows:—

"It is a matter of intense satisfaction to me to realise how all classes and creeds have joined together in the true hearted welcome which has been so universally accorded to us. Is it not possible that the same unity and concord, may for the future govern the daily relations of their private and public life? The attainment of this world indeed be to us a happy outcome of our visit to India."

50. These are words which should be held by all right thinking Indians with that sanctity and veneration with which we look upon a passage from our Sacred Literature.

For in the first place it has come from our Emperor who is the father of his people. In the next place he has shown himself as such by his intense love towards the people over whom he rules. Thirdly you know that according to our ideas a king has in him a factor of Divinity. Fourthly he is the greatest Emperor that ever ruled over India and who is personally known to his subjects. Lastly the British nation, as a nation (whose representative he is) has conferred on as the greatest boon. Holding so as I do these views I cannot be expected to set one class against another. I am aware that certain people think that one of the objects of the Saiva Sabai under whose auspecies we have met is to spite the other classes and to induce the Dravidians to form themselves into a distinct and independent community from the rest of the Hindus I have the honor to be a member of that association and the rest of my brethren have given me credit for the part I have taken in recognising it after its continued existence of twenty six years. As I am thus familiar with its affairs I am in a position to assure you that such an object is far from them. It is the intention of the members of the Sabai to better themselves and their brethren Dravidians, religiously. morally, educationally and socially without tresspassing upon politics and to wipe out all the internal distinctions and differences between the different sections of the community .and convert them into a healthy and harmonious hole. This is what the different important classes throughout India are doing at present and there can therefore be no room to find fault with us in a work of self help. It is only when all the great communities are in a position to effect internal reforms in the direction pointed out by me, the entire population of India can become an united nation in order to give effect to the paternal wishes of our August Sovereign.

உ

திருக்குற ளாராய்ச்சி.

மகிமைபட நாவலோடுடைய மாட்சி மிக்க அவைத் தலைவரும் அவையோரும் வீற்றிருக்கின்ற இப் பேரவைக்கண் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பர் நல்லோரென்னுந் துணிபு பற்றி என்சிற்றறிவிற் கெட்டியவாறு ஆராய்ந் தமைத்த திருக்குற ளுரை விசேட்டங்களுட் சிலவற்றை யெழுதுகின்றேன். குற்றமுள தாயிற் களைந்து குணமேகொண்டு மகிழல் கற்றோர்கடன்.

முன்னம் பலருரை காணினு முதற் பாவலர் நூலை
இன்னம் பலருரை காணுமியல்பிற் றிது பெய்ய
சொன்னம்பல மென்னவிற்சில சொல்வல்லிது மாண்பார்
பொன்னம்பல நாமன்முதற் புலவீர் நனிகொண்மின்.

நல்லான் வரையினுந் தெய்வந் தனைக் காதலில்லார்
கல்லார் பணிவார் பணியார் பொருளுடல் செய்பார்
வல்லார் மதியின் மொழியாயினுஞ் சுவைபவே மான்
சொல்லாரிசையாற் றலைக்கொள்ப வெவ்வன் சொல்லுபேலார்.

இச் செய்யுள் அவையடக்கமெனப் பெயர்பெற்று நான்குவகைப் பொருண்முடிபு வேறுபாடும் இருபத்தொருவகைச் சொன்முடிபு வேறுபாடு முடைத்து.

இனி யீண்டெழுது மவற்றுட் சில முன்னர்ப் பத்திரிகைவாயிலாகவும் பிரசங்க வாயிலாகவும் என்னால் வெளிவந்தன வாயினும் அவையும் ஈண்டுத் தொடர்புபட வெழுதத் தொடங்கினமையாற் கொள்ளப்பட்டன. புனருக்தமாயின் அவற்றை நீக்கி யேனைய கற்றோ ராராயற்பாற்று.

இனித் திருக்குறளின் மாட்சி முதலாயின சொல்லப்புகின் இவ் வவையின்கண் எனக்கென்று நியமித்த காலத்துள் அடங்காவென்பது தேற்றமாதலின் அவற்றை விடுத்து நூலாராய்ச்சியுட் சிலவே தொடங்குகின்றேன்.

இப்போது வழங்குகின்ற திருக்குறட் பரிமேலழகருரையில் இயல்களும் குறளின் முறையும் ஆசிரியர் திருவள்ளுவனார் கருத்துக்கு மாறாயின வென்பது என்முதலாவது கொள்கை. அதனைமுற்கூறுவேன்.

இறையனாரும் சங்கப்புலவரும் திருக்குறளைத் திருவள்ளுவர் வாயாற் கேட்டுச் சிறப்புப் பாயிரமாகப்பாடிய வெண்பாக்களே திருவள்ளுவமாலை யாம். இதனை முதற்கவி பாடிய முக்கட்பெருமான் என்பது முதலாய ஆன்றோர் வாக்காற் கண்டுகொள்க. இதனால் திருவள்ளுவமாலை பிரமாண நூலெனவே கொள்ளப்படும். அன்றெனிற் நல்லாடன் முதலிய நூல்களும் ஆன்றோ ராட்சியும் பிரமாணமல்ல வெனப்படும். ஆதலின் திருவள்ளுவமாலை யாவரானுங் கொள்ளற்பாலதே. அங்ஙனம்கொள்ளு மிடத்து அத்திருவள்ளுவமாலையில் வள்ளுவனார் தம் வாயாற் கேளாதன வெல்லாங் கேட்டு என்றமையாற் சங்கப்புலவர் குறட்பாவை வள்ளுவர் வாயாற்கேட்டே அவர் கருத்தறிந்து பாயிரங்கூறினா ரென்பது போதரும். போதரவே திருவள்ளுவமாலையாகிய அப்பாயிரத்துக்கு மாறாக யாவரே யாயினும் எக்காரணம்பற்றிக் கூறினும் அஃதாசிரியர் கருத்தன்மையின் அது கோடற் பாற்றன்றென்பதே துணிபு.

திருவள்ளுவமாலையில் தொடித்தலை விழுத்தண்டினார்.

அறநான்கறி பொருளேழொன் றுகாமத்
திறமூன்றெனப்பகுதி செய்தென்றார்.

இதற்கு மாறின்றியே எறிச்சலூர் மலாடனாரும் போக்கியாரும் மோசிகீரனாரும் கூறினார்.

இவ்வாறாகக் காமத்துப்பாலை ஈரியலாக்கியும் பொருட்பாலை மூவியலாக்கியும் அறத்துப்பாலை ஈரியலாக்கியும் உரைகூறின் அது வள்ளுவனார் கருத்தன்றென்பது தேற்றமே. இஃதன்றி வள்ளுவனாரும் படைகுடி கூழமைச்சு நட்பரணாறு மென்று ஆறங்கங்கூறி அவற்றை விரித்துரைக்குமிடத்துக் குடி யென்னு மங்கத்திற்கும் பதின்மூன்றதிகாரங் கூறினார். இங்ஙனமாக உரையாளர் குடியியலை ஒழிபியலென மாற்றியும் படைகுடி என்புழிக் குடி யெனற்கு ஆகுபெயரெனக் கொண்டு நாடெனப் பொருள் கூறியும் அரணியல் அதிகாரமிரண்டனுள் ஒன்றனை ஆகுபெயராற் கொண்ட நாட்டிற் கேற்றியும் பொருள் கூறின் அது கொள்ளற் பாற்றோ. ஆசிரியர் கருத்தன்மை மேற்காட்டியவாற்றாற் பெறப்படுதலிற் கொள்ளற்பாற்றன்றென்பதே தேற்றம்.

இனி மதுரையி லிப்போதுள்ள தமிழ்ச்சங்கத்தில் தருமர் முதலிய ஏனைய உரையாசிரியருள் ஐவருரை கிடைத்திருக்கின்றன. அப்

பிரதிகளை நோக்குமிடத்து அவர்கள் கொண்ட குறள் முறையும் பரிமேலழகர் கொண்ட குறள் முறையும் வேறு வேறென்பது புலப்படும். எங்ஙனமெனிற் பெரும்பாலும் ஓரதிகாரத்தில் ஒருவர் முதற் குறளாகக் கொண்ட ஒருகுறளை மற்றொருவர் ஐந்தாவது குறளாகவும் பின்னொருவர் ஏழாவது குறளாகவும் ஏனையோர் ஆறாக எட்டாக மற்றொன்றாகவும் வைத்துரை கூறுமாற்றாற் கண்டுகொள்க.

ஈண்டுக் கூறியவும் பிறவுங் கொண்டு நடுவு நின்று ஆராய்வார்க்கு வள்ளுவனார் கருத்துக்கு மாறாகவே உரையாளர் இயலையும் தூபட்பா முறைவைப்பையு மாற்றினரென்பது புலப்படுமாதலின் விரியாது இம்மட்டினிறுத்தி மேற்சொல்கின்றேன்.

இனி,

அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுலகு.

என்னும் பாட்டை உரையாளர் தலைமை பற்றி வந்த எடுத்துக் காட்டுவமையாகக் கொண்டு உலகத்துக்குத் தலைவன் ஆதிபகவனென்றும் உவமையில் எழுத்துக்களுக்கெல்லாம் அகரவெழுத்துத் தலைமையாதல் போலவென்றுங் கூறினர். இது கருத்தாயின் உபமேயத்தில் ஆதிபகவனும் உலகம் பலவற்றுள் தானுமோருலகமாக எண்ணப்பட்டு ஏனைய உலகங்களுக்குத் தலைமை பெறல்வேண்டும். அங்ஙனமின்மையின் உவமையில் மட்டும் அகரவெழுத்துத்தானு மோரெழுத்தாக எண்ணப்பட்டுத் தலைமை பெற்றது கூடுமோ. இவ்வாற்றான்உவமம் வழுவாயதுதோன்றும். அன்றியும் காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுளுக்கு உண்மைகூறப்பட்டதென்றார்க்கு எழுதப்பட்ட எழுத்துக்களுக்கு எழுதப்படாத பிறிதொன்றே தலைமையாதல் வேண்டுமென்பது போதரும். இதுவன்றி இப்பாட்டாற் கடவுள துண்மை கூறப்பட்டது என்றுங் கூறினர். அவ்வுண்மை உவமையணியாற் பெறப்படுமோ. காட்சி கருதுதல் முதலாய அளவை களானன்றோ பெறப்படல் வேண்டும். இதனை ஆராயின் அவ்வுரை ஆசிரியர் கருத்தாகாமை பெறப்படும். பின் ஆசிரியர் கருத்தென்னையோ வெனிற்கூறுவேன்.

எழுத்தெல்லாம் எனின் எழுதப்படு மியல் பினவாய அகரமுதலாகச் சொல்லப்பட்ட எல்லாவெழுத்துக்களுமென்றே பொருள் கோடல் சால்புடைத்து. எழுதப்படு மியல்பின யாவெனின்? மக்களாற் சொல்லப்பட்டுச் செவிப்புலனாகின்ற வைகரி வாக்கிலுள்ள அகரமுதலிய எல்லா அக்கரங்களும் அஃறிணையியற் பெயராதலின் எழுத்தெனினும் எழுத்தின் பன்மை யுணரப்படுமாயினும் வைகரிவாக்கின் அகரத்தையுங் கோடற் பொருட்டு எழுத்தெல்லாமென்றார்.

அகர முதல என்புழி எழுதப்படாததும் செவிப்புலனாகாததும் ஆகிய பராவாக்கிலுள்ள நாதமாகிய அகர மென்றே கொள்ளவேண்டும். எழுதப் படுவதாகிய செவிப் புலனாகும் அகரத்தைக் கொள்ளலாகாது. அகரமென அடையின்றிக்கூறவும் எழுதப்படுமெழுத்தாகிய அகரத்தை விடுத்து எழுதப்படாத அகரமெனவுரைப்பது எவ்வாறெனின்? பின்னர் எழுதப்படுவது என்னுங் காரணத்தை யுட் கொண்டு எழுத்தெல்லாம் என்றதனால் முன்னர்க் கூறியது எழுதப்படாத அகரமென்பது தானே போதரலானும் அன்றியும் உவமையடை உபமேயத்துக்கும் உவமேயத்துள்ள அடையை உவமைக்குங் கூட்டுதல் அணிநூல் வழக்காதலின் அவ்வாறே ஈண்டும் ஆதிபகவன் என்னும் உவமேயத்தின் அடையாகிய ஆதியை உவமையினுங் கூட்டி ஆதி அகரமெனக் கோடல் வழக்காதலானும் அவ்வாற்றான் நாவீர்த வரை அகரத்திற்கும் ஆதியாகிய பரா வாக்கிலுள்ளதும் சொல்லப் படாததும் செவியாற் கேட்கப் படாததும் அறிவாலுணரப்படுவதுமாகிய அகரமென்பதுதானே போதருமென்க. இவ்வாற்றான் உதாரணமும் பொருளும் மாறுபாடின்மை காண்க. இவ்வுவமை அணிகுறித்து வந்ததன்று. கருதுதல் அளவைக்கண் வந்த திருட்டாந்தவுறுப்பென்க. இதன் விரிவெல்லாம் முன் பத்திரிகை வாயிலாக வந்தமையின் இம்மட்டி னிறுத்தி மேற்செல்வேன்.

இனி, மலர் மிசை யேகினான் எனற்கு அன்பரது நெஞ்சமாகிய மலர்மேற் சென்றவன் என்றும் வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும் என்னுஞ் சூத்திரப்படி எதிர் காலத்தாற் சொல்லாமல் இறந்தகாலத்தால் ஏகினானென்றது அன்பர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் அவ் விரைவுபற்றியென்றுங் கூறினர். அச்சூத்திரம் எதிர்கால வினையையாவது நிகழ்கால வினையையாவது விரைவுபற்றி இறந்த காலமாகக் கூறல் வழக்கென்றதன்றி முக்காலத்தினு மொத்தியல்பொருளை விரைவு பற்றியாவது வேறுகாரணம் பற்றியாவது இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் வேண்டுமென்று கூறிற்றிலது. அங்ஙனமாக அச்சூத்திரத்தை ஆதாரமாகவைத்து உரையாளர் அன்பரது உள்ளக் கமலத்தின்கட் செல்வானென்றும் விரைவுபற்றிச் செல்வானைச் சென்றானென்று கூறினரென்றுங் கூறுவதெவ்வாறு பொருந்தும். இனிப் பொருந்துமாறெங்ஙனமெனின்? உள்ளத்தைத் தாமரை யென்பது போலவே ஏனைய ஆதாரங்களையும் தாமரை யென்பது யோகநூல் வழக்காதலானும் கடவுள் இயல்பாகவே அந்நூலிற் சொல்லிய மூலதார முதலாய ஆறாதாரங்களையும் கடந்தவன் ஆதலானும் மலர்மிசையேகினான் எனற்கு ஆறாதாரமாகிய ஆறு மலர்களுக்கு மேலுள்ள ஆயிரத்தெட்டிதழ்க் கமலமாகிய நிராதார வீட்டில் அநாதியே சென்றவனெனிற் காலவழுவின்மை கண்டு கொள்க.

இன்னும் கடவுள் வாழ்த்தில், பொறிவாயி லைந் தவித்தான் எனற்கு பொறியை வாயிலாகவுடைய ஐந்தவாவினையு மறுத்தானென்றார். கடவுளுக்கு நம்மைப்போன்று பொறியை வழியாகவுடைய ஐந்தவாவுண்டோ. இருந்தன்றோ அவித்தல்வேண்டும் அன்றியும் அவித்தல் முளையா வண்ணம் வேவ வைத்தலெனப்பட்டு அடக்குதல் எனப்பொருள் பயக்கு மன்றி அவா வறுத்தலெனப் பொருள்படுமோ. அடியாரது காட்சியிற் கடவுளுக்கு ஐம்பொறி உண்மை பெறப்பட்டதெனின் அஃது அருள் வடிவன்றி மாயா வுருவ மன்றே. அன்றியும் ஆரியவேதமும் தமிழ்வேதமும் கடவுள் கண்ணின்றியும் காண்கின்றான் காதின்றியும் கேட்கின்றானென்று ஐம்பொறியின்றியே யைம்பொறியுணர்வு முடையனென்று முழங்குகின்றனவே. இவ்வாற்றாற் கடவுளை ஐம்பொறிகளை வழிகளாகவுடைய ஐந்தவாவினையும் மறுத்தானென்பது பொருந்தாமைகண்டு கொள்க. இனிப் பொருந்துமாறு யாதோவெனிற் சொல்வேன்.

கடவுளுக்கும் ஐந்தறி வுண்டு ஆன்மாக்களுக்கும் ஐந்தறி வுண்டு. கடவு ளறிவு பேரறிவு பொறியாகிய வழியின்றியே யமைந்தது. தானே யுணரு மியல்பிற்று. இயற்கையென்ப. ஆன்மாக்க ளறிவு சிற்றறிவு பொறியாகிய வழியை யுடைத்து; உணர்த்த உணருமியல் பிற்று; செயற்கையென்ப.

அவித்த வித்து வடிவாற் குறைபாடின்றேனும் முளையாமை போலக் கடவுளுக்கும் நீத்தார்க்கும் ஐந்துணர் வுண்மை பெறப்படினும் அவாவின்மையின் முளையா. நீத்தார் ஐந்துணர்வை அநாதியே அவியாது இடையே அவித்தவர். கடவுளோ அநாதியே அவித்தவன். நீத்தார் அளவுபாடுடைய அறவடிவர். கடவுளோ அளவுபாடில்லாத அற வடி வுடையவன். இவையே நீத்தாருக்குங் கடவுளுக்குமுள்ள பேதம். இது நோக்கியே திருவள்ளுவனார் நீத்தாரை அந்தணரென்போர் அறவோரென்றார். கடவுளை நீத்தாரின் விசேடித்தற்பொருட்டு அறவாழியந்தண னென்றார். இவ்வாறே நீத்தாரை ஐந்தவித்தானாற்ற லென்புழி அடையின்றி ஐந்தவித்தானென வாளா கூறினார். கடவுளைக்கூறுமிடத்து அந்நீத் தாரி னின்றும் விலக்கி விசேடித்தற் பொருட்டுப் பொறி வாயில்லாத ஐந் தவித்தா னென்றார். இவ்வாற்றா னென்னையோ பேதமெனின்? நீத்தார் பொறியை வழியாகவுடைய ஐந்துணர்வுடைய ராதலின் அவ்வுணர்வை அவாவின்கட் செல்லவிடாது அவித்தவரென்றும், கடவுள் ஐம்பொறி யின்றியே அறியும் ஐந்துணர்வுடைமையின் அவற்றை அநாதியே அவா வின்கட் செல்லவிடாது அவித்தவனென்றும் பொருள்படுமாறு கண்டு கொள்க.

பொறி வாயில் ஐந்து எனப்பிரித்து ஐம்பொறிகளை வழியாகக் கொள்ளுதலில்லாத ஐந்துணர்வெனப் பொருள்கூறுக. இது வன்றிப் பொறியாகிய வழி இல்லாத ஐந்துணர் வெனினு மமையும்.

இனி,

ஐந்தவித்தானாற்ற லகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங்கரி.

என்புழித் தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்ற லுணர்த்தினு னாகலின் இந்திரனே சாலுங்கரி யென்றார் என்றார். அவித்தவனதாற்றல் சாபத்தான் மட்டும் அமையாது அநுக்கிரகத்தாலு முணருமியல் பிற்று.

றீத்தார்க்கு இருவகை யாற்றலுமுண்மை; ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும் எண்ணிற் றவத்தான் வரும் என்னுங் குறளானறிக. இங்ஙனமாகச் சாபமாத்திரைக்கே கரிகூறி ஏனைய அநுக்கிரகத்துக்குக் கூறாமை குன்றக் கூறலாம். அன்றியும் சாபமே ஆசிரியர் கருத்தாயின் ஐந்தவியாது சாபமெய்தினர் எண்ணிலராதலின் இந்திரனுங் கரியென்பர் அல்லது இந்திரன் கரியென்பார். இந்திரனொடு ஏகாரம் சாலும் என்ற இரு சொற்பெய்து கூறார். சாப மெய்தினருள் இந்திரன் உயர்ந்தோனாகலின் அவ்வாறு கூறினாரெனின்; அவனினுஞ்சிறந்த பிரமனுஞ்சாப முறலின் ஏகாரமும் சாலும் என்பதும் பயனில் சொல்லாம். பின் யாதோ பொருளெனிற் கூறுவன்.

ஐந்தவித்தான் ஆற்றல் ஐந்தவித்தானது சாபம் அநுக்கிரகமென்ற இருவகை யாற்றலுக்கும் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி. அகன்ற விசும்பிலுள்ளார்க் கரசனாகிய இந்திரனொருவனே அமையுஞ் சாட்சி. எ—று.

இந்திரன் சாபமெய்தி அச்சாபப் பயனை ஆயிரங்கண்ணாகுமாறு அநுக்கிரகமும் பெற்றமையாற்சாபமொன்றே பெற்றாரினின்றும் அநுக்கிரகமொன்றே பெற்றாரினின்றும் பிரித்தற் பொருட்டு இந்திரனே கரியென ஏகாரமிட்டுக் கூறினர். அங்ஙனமாயின் இந்திரனே என ஏகாரமேயமையும், சாலும் என்பது வேண்டாவெனின்; இந்திரனே போலச் சாபமும் அநுக்கிரகமும் பெற்றாரும் வேறு சிலருளராதலான் அவரினும் இந்திரன் சிறந்த சான்றென வுணர்த்தற் பொருட்டு இந்திரனே சாலு மென்றார். இந்திரற்குச் சிறப்பென்னையோவெனின்; ஒருவன் சாபத்தால தொழுநோயுற்றான். அவனே அநுக்கிரகத்தாற் பொன்மேனிபெற்றான். அவன் சாபாநுக்கிரகம் இரண்டும் பெற்றானாயினும் அநுக்கிரகத்தாற் பொன்மேனி பெற்ற வழிச் சாபத்தாலெய்திய தொழுநோயில்லை. இவ்வாறு இந்திரனொழிந்த வேனையோர்க்கு அநுக்கிரக முற்றவழிச் சாபங் காணலரிது. இந்திரனே ஆயிரங் கண்ணாக அநுக்கிரகம் பெற்றவழியும் சாப நீங்கிலை

னாகி இரண்டு முடையனாகின்றான். இச்சிறப்பு வினைபோர்க்கின்மையின் இந்திரனே சாலுங்கரியென வகாரத்துடன் அமைவுங் கூறினார். எத்தலை யயர்ந்தோராயினும் இறந்தாரைச் சான்றுகூறின்; அச்சான்று வலியுடைத்தாகாமையான், இந்திரனென அடையின்றிக் கூறின் இறந்த இந்திரருள் ஒருவனோவென்று மயங்குப வெனக்கருதி அதனையொழித்து இப்போதிருக்கின்ற இந்திரனென வலியுறுத்தற்பொருட்டு விசும்புளார் கோமானாகிய இந்திரனென்றார். ஒருவன் எப்பிழை பொறுப்பினும் தன்னில்லாட்கிழைத்த பிழை பொறான். முனிவரோ ஐந்தவித்தாராதலின் அதனைப் பொறுத்ததேயன்றி அநுக்கிரகமுஞ் செய்தார். இது தோன்றற்பொருட்டே வேறு பெயர் கூறாது ஐந்தவித்தானெனக் காரணப் பெயர் கூறினார். ஒன்னார்த்தெறல் உவந்தாரை யாக்கலென்னும் இரண்டு மடங்கற்பொருட்டு ஆற்றலென அஃறிணை யியற்பெயர் கூறினார்.

இனித் துறந்தார்க்குத் துவ்வாதவர்க்கு மென்புழித் துறந்தாரைக் களைகணானவராற் றுறக்கப்பட்டா ரென்றார். துறந்தார் பெருமை துணைக்கூறின், துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி, துறந்தார் படிவத்தராகி, துறந்தாரிற் றூய்மையுடையார், துறப்பார் மற்று துப்புரவில்லார். துப்புரவில்லார் துவரத்துறவாமை, முதலாய பிறவிடத்தெல்லாம் உடன்பாட்டினும் எதிர்மறையினும் துறத்தலை நீத்தற்பொருள்படவே ஆசிரியர் கூறியிருப்ப ஈண்டுமாத்திரம் துறக்கப்பட்டாரெனப் பொருளுரைத்தல் பொருந்தாது. வழக்கின்மையின் இச்செய்வினை செயப்பாட்டுப் பொருளும் பயவாது. ஆதலின் ஈண்டும் நீத்தாரென்றே கோடல்வேண்டும். கொள்ளின் முற்குறளின் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை யென்றமையால் நீத்தாரும் அடங்கினராக ஈண்டுக் கூறல் புனருத்த மாமெனின்; அற்றன்று; என்னை? ஆண்டு மூவரென்றது ஆச்சிரமத்தாரை. ஈண்டுத் துறந்தாரென்றது இருவகைப் பற்றும் நீங்கினரை. இத்துறந்தார் நான்குவகை ஆச்சிரமத்துள் ஒன்றுபற்றியும் நிற்பார் பற்றாதும் நிற்பார். ஆதலின் இவர் ஆச்சிரமத்தாருள் அடங்காரெனக் கருதியே ஆசிரியர் இயல்புடைய மூவர் துறந்தாரென வேறுவேறு கூறினார். அன்றியும் நீத்தார் பெருமை கூறு மதிகாரத்துள் மனைவி மக்களுடன் கூடிய கௌதமரை ஐந்தவித்தானெனக் கூறுமாற்றானுந் துறவும் சந்நியாசமும் வேறென்பது துணியப்படும்.

இனி,

தக்கார் தகவிலரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

என்னுங் குறளில் எச்சத்தால் எனற்கு நன்மக்கள தன்மையானும் இன்மையானும் என்றவுரை மிருதிக்கருத்துக் கிணங்கியதென்று

கூறுவாருள ராயினும் அநுபவத்திற் பெரும்பாலு மாறுவதாக ஐயநிகழ்கின்றது. அன்றியும் உரைப்பிரமாணத்தை நோக்குமிடத்துக் காசிப முனிவர்க்கு இரணியனும் அவன் மைந்தப் பிரகலாதனும் பிறந்தமை ஆராயுமிடத்து இக்க மாறுபாடு தோன்றும். இதுவல்லாமற் பல பெரியார் புத்திரப்பேறின்றி ஞானத்தால் வீடுபெற்றமை புராணங் கூறுகின்றது. இதற்குஞ் சமாதானம் வேண்டும். இனி, ஆசிரியர் கருத்து ஆராயுமிடத்து எச்சமென்றென் னென்னுங் கொல்லோ என்புழியும் இசையென்னும் எச்சம் பெறுவிடின் என்புழியும் புகழையே எச்சமெனக் கூறினாரென்பது தேற்றம். அன்றியும் ஆசிரியர் ஒன்று உலகத்துயர்ந்த புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில் என்றாராகலின், எச்சமென்பது பொன்றாது எஞ்சி நிற்கும் புகழுக்கே சிறந்த பெயராவதன்றித் தானிறபுழி எஞ்சுவோராயினும் பொன்றுமியல்பினராய மக்களுக்கு அத்துணைச் சிறப்பின்மையு மாராயத்தக்கது. ஆதலின், தக்கார் தகவிலரென்பது அவரவர் புகழுண்மையானும் இன்மையானுங் காணப்படுமென உரை கூறிற் பொருந்துமோவென கற்றோராய்தல் கடன்.

இனி,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

என்புழி மருந்தெனினும் சாவா மருந்தென்பதுதானே போதரும். ஆதலிற் சாவா மருந்தெனல் மிகையாம். விளங்கற்பொருட்டுக் கூறினாரெனின் இன்னதீங் குண்மையிற் சாவா மருந்தாயினும் வேண்டற்பாற்றன்றென ஏதுக்கூறல்வேண்டும். அங்ஙனமின்றிச் சாவாமருந்தெனினும் எனிற் பொருட் சிறப்பின்மை கருதற்பாலது. ஆசிரியர் ஒத்ததறியானை செத்தாருள் வைக்கப்படுமெனவும், உலகத்தாருண்டென்பதில்லென்பானை அலகையா வைக்கப்படுமெனவும், இன்னுஞ் சிலரை வேறுவகையானும் நிந்திக்கின்றார். அதுபோலவே ஈண்டும் விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாம் எனக்கொண்டு, விருந்தின்றியுண்டபகல் நோயேயுரனுடையார்க்கு என்று பிறருங் கூறினாராதலின், அங்ஙனமுண்டல் சாதலோடொக்குமென வுரைத்து, அக்காரணத்தால் அவ்வுணவு அமிர்தமாயினும் வேண்டற்பாற்றன்று எனவுரைத்தல் பொருந்துமாயிற் கொள்க.

இனி,

அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

என்னுங் குறளில் மறத்திற்கு மஃதே துணை எனற்கு வினை மறத்திற்கும் அவ்வன்பே துணையென்றும் ஒருவன் செய்த பகைமை

பற்றி மறஞ்செய்தவழி அன்புசெய்ய அது நீங்குமென்றும் அதனால் மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார் மறத்திற்கு மஃதே துணையென்றாரென்றும் துன்பத்திற் கியாரே துணையென்புழிப் போலவென்றுங் கூறினார். முன் அன்புடைமை எனற்குத் தொடர்புடையார்கட் காதலுடையனாதலென்றுரை யெழுதிய பரிமேலழகர் ஈண்டுத் தொடர்பில்லாத பகைக்கண் அன்புசெய்ய மறநீங்குமென்றார். இது முன்னொடுபின் மலைவாதல் காண்க. இனி அறத்திற்கே அன்பு சார்பென்ப என்று முன்வாக்கியத்தில் அறத்திற்கே என்புழி நின்ற ஏகாரத்தால் ஏனை மறத்தை நீக்குதற்கும் என்னும் பொருள் அமைகின்றது. எங்ஙனமெனிற்; கண்ணன் பாண்டவர்க்கே துணை எனின் அவ்வேகாரத்தாற் சுயோதனாதியரைக் கொல்லுதற்கும் அவனே துணையென்பது தானே போதரும். ஆதலின் அறத்திற்கே யன்பு சார்பென்றார் மீண்டும் மறத்தை நீக்குதற்கும் அஃதே துணையெனல் வேண்டா. ஆதலின் ஆசிரியர் கருத்து இது வன்று. மற்றென்னையோவெனிற் சொல்வேன்.

அன்பிற்குமுண்டோ வடைக்குந் தாழார்வலர்
புன்கணீர் பூசறரும்.

என்புழித் தம்மாலன்பு செய்யப்பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார்கண் புல்லிய கண்ணீரைப் பொழியும் என்றதனால் அன்புடையார் தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்குத் துன்பஞ் செய்யாரென்பதும் தானே போதரும்.

போதா மக்களைத் தாய்தந்தையரும் மாணாக்கரை உவாத்தியும் தவறு கண்டுழித் துன்பஞ்செய்யக் காண்கின்றோம். தந்தை தன் மகனை உவாத்தி யடிப்பக்கண்டும் அவன்கண் புல்லியகண்ணீர் பொழியக் கண்டிலேம். இவ்வாற்றாற் புன்கணீர் பூசறரும் என்றது உபசாரமோ வென மயங்காமைப் பொருட்டும் ஈன்றோர் மக்களையும் உவாத்தி மாணாக்கரையும் அரசன் குடிகளையுந் திருத்தற்பொருட்டும், மருத்துவன் நோயுற்றாரைப் பிணி தீர்தற்பொருட்டுந் துன்புறுத்தலும் அன்புபற்றியேயென விளக்கற்பொருட்டும் அறத்தை அறநிலையறமெனவும் மறநிலையறமெனவும் இருவகைப்படுத்து அறநிலை அறத்துக்கே யன்பு சார்பென்ப வறியார் மறநிலையறத்திற்கும் அஃதே துணையென்றார் ஆசிரியர். அறநிலையறமாவது பிறவுயிர்க்கு இன்பஞ்செய்தலால் வரும் அறம். அஃதாவது உண்டி உடைகொடுத்தல் முதலாயவற்றான் வருவது. மறநிலையறமாவது பிறவுயிர்க்குத்துன்பஞ் செய்தலால் வரும் அறம். அஃதாவது பிரம்பாலடித்தல் சத்திரமிட்டறுத்தல் முதலாயவற்றால் வருவது.

இனி மறம் என்பது அறத்தின் மறுதலையாகிய பாவத்திற்கே பெயராமெனின்; மறமானமாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே யெமப்படைக்கு என்புழி அப்பொருள் பயவாது வேறுபொருள் பயத்தல் காண்க. அறம் பொருள் இன்பமென்பன அறநிலையறம் மறநிலையறம் அறநிலைப்பொருள் மறநிலைப்பொருள் அறநிலையின்பம் மறநிலையின்பமென ஆறுவகைப்படலு நோக்குக. இவ்வாற்றான் மறநிலையறத்திற்கும் அன்பு துணையாமெனச் சொல்லல் இன்றியமையாமை என்பதூஉம் அறத்தின் மறுதலையாகிய மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையெனின் அறத்திற்கே என்னும் ஏகாரத்தால் அப்பொருள் பெறலின் மீண்டுங் கூறல் குற்றமாமென்பதூஉம் விளக்கப்பட்டது.

இனி,

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

என்புழி இவ்வுவமம் உறழ்ச்சி யுவமமாதலின் உவமான உவமேயங்கட்குள்ள பொதுத்தன்மையும் உவமையினும் விசேடமாக அமைந்த உவமேயத்தின் சிறப்புத்தன்மையும் விளக்கல்வேண்டும். இவ்வாறே நிலையிற் றிரியாதடங்கியான் றோற்றமலையினு மாணப்பெரிது என்னுங் குறளில் மலைக்கும் பெரியார்க்கும் பொதுத்தன்மையாகிய நிலையிற் றிரியாமையும் மலைக்கின்றிப் பெரியோர்க்கே யமைந்த சிறப்புத்தன்மையாகிய அடக்கமும் ஆசிரியராற் கூறப்பட்டமை காண்க.

இவ்வாற்றான் ஈண்டுக் காலத்தின்கட் செய்த நன்றிக்கும் ஞாலத்துக்கும் பொதுத் தன்மை யாது ஞாலத்திற்கின்றிக் காலத்திற்கே யுரிய சிறப்புத்தன்மை யாதென ஆராயின் இப்போதுள்ள உரைகளால் விளங்கவில்லை. அது விளங்காவிடின் அக்குறளுரை பயனின்றாம். ஆதலின் ஞாலத்தினும் அந்நன்றி அளவினாற் பெரிதோ கனத்தாற் பெரிதோ மற்றொன்றாற் பெரிதோ என ஆசங்கை நிகழுமன்றே. அது நிகழாது குறளின் உண்மைப்பொருள் விளங்கற்பொருட்டு எழுதப்புக்கன்.

ஞாலம் ஆகுபெயர். ஞாலத்தின் நன்றியென்பது பொருள். இஃதுவமை: காலத்தின்கட் செய்த நன்றி உவமேயம். இன் உறழ்ச்சிப் பொருளின்கண் வந்த உவம உருபு. இக்குறள் உறழ்ச்சி யுவமத்தொகையாதலிற் பொதுத்தன்மையும் உவமையினு மிக உவமேயத்துக்கமைந்த சிறப்புத்தன்மையும் உரையாளரால் விரிக்கற்பாலன. உண்டி முதலாயின அளித்தலானும் தாங்குதலானு மோம்புதல் காலத்தின்கட் செய்த நன்றிக்கும் ஞாலத்தின் நன்றிக்கும் பொது. ஞாலம் ஒருவனுக்கு இறுதி வந்த எல்லை உதவுவதில்லை. தன் பருவ நோக்கிய யுதவும். அடுத்

முயன்றாலும் ஆகுநாளன்றி யெடுத்த கருமங்களாகா—உயர் மரங்களெல்லாம் பருவத்தலன்றிப் பழா. என மூதுரை கூறலு நோக்குக. இறுதி வந்த எல்லைக்கட் செய்த உதவியே காலத்தினாற் செய்த நன்றியாகின்றது. இச்சிறப்பு ஞாலத்துக்கின்மையின் ஞாலத்தின் மாணப் பெரிதென்றார்.

இனி,

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

என்னுங் குறளில் தீயவை தீயினு மஞ்சப்படுமென்றார். அஞ்சப்படுவது யாதுபற்றி யென்பார்க்குத் தீய பயத்தலால் எனக்காரணமுங் கூறினார். இவ்வாறு ஆசிரியர் கூறியிருப்ப அதனைவிடுத்து பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கின்மையின் தீயினுமஞ்சப்படுவதாயிற்று என உரையாளர் பிறிதொரு காரணங்கூறல் பொருந்துமோ. ஆசிரியர் பிறவியைக் கடலினும் பெரிதெனக்கருதிப் பிறவிப்பெருங்கடலென உருவகஞ் செய்தவிடத்துக் குறளாற் காரணமறியப்படாமையாற் ஆண்டுக் காரணகாரியத்தொடர்ச்சியின்றிக் கரையுளதாய் நிற்கின்ற கடலினும் காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருகின்ற பிறவி பெரிதாமெனத் தாமொரு காரணங் கருதிக்கூறல் பொருந்தும். இவ்வாறு பரிமேலழகர் காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலிற் பிறவிப்பெருங்கட லென்றாரெனக் கூறலுங் காண்க. ஈண்டு ஆசிரியர் தீயவை தீயபயத்தலான் எனக் காரணங் கூறியிருப்ப அதனைவிடுத்துப் பிறிதொரு காரணங்காட்டல் பொருந்தாதென்பது தேற்றமே. அற்றாயின் தீயபயத்தல் தீக்கும் தீவினைக்கும் ஒத்ததாகலின் தீயினுமஞ்சப்படும் என மிகுதிகூறல் சாலாதேயெனின், தீயவே தீயபயத்தலான் என்வே பாடமிருத்தல் வேண்டும். இவ்வாறே பரிமேலழகர்க்கு முன்னுள உரையாளருங் கொண்டனர். இதனை மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஏட்டுப்பிரதிகளாற் கண்டுகொள்க.

இதன்பொருள்.

தீயதியவே பயத்தலால்—தீவினை துன்பமொன்றையே தருதலால் தீயவே—அத்தீவினையொன்றே தீயினும் அஞ்சப்படும்—இன்பமுந் துன்பமும் தருகின்ற தீயினுமஞ்சப்படும். எ—று.

குளிர்கொண்டார்க்குக் காய்தலானும் குமரகண்ட முதலாய நோய்கொண்டார்க்குச் சுடுதலானுந் தீ இன்பஞ்செய்தல் கண்டுகொள்க. தீயதியவே பயத்தலால் என்பதன்கணுள்ள ஏகாரத்தால் உவமையாகிய தீ தீயவற்றோடு நன்றும் பயக்குமெனப் பொருள் கொள்ளப்பட்டது. தீயவே தீயினுமஞ்சப்படுமென்ற ஏகாரத்தால் தீவினையொன்றே தீயினுமஞ்சப்

பாம் பகைகடன் சினமுதலாயின தீயோடொப்ப அஞ்சப்படுமெனவுங் கொள்க.

காலங்கருதி இம்மட்டினிறுத்தி இச்சபையையுஞ் சபையாரையுஞ் சபைத்தலைவரையும் நீடூழிகாக்கவென, எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

எழுமையு மேமாப்புடைத்து.

எழுபிறப்பிலும் காவற்றுணையாய் வரத்தக்கது யாது என்பதே எடுத்தாளக்கருதிய பொருளாம். பிறவா யாக்கைப் பெரியோனுகிய ஈசனே ஒழிந்த எவ்வுயிர்க்கும் பிறத்தலிறத்தல் இயல்பாம். பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது என்ற பொய்யாப்புலவர் வாக்கைத்தழுவியே கூறினர் கூலவாணிகர் சாத்தனார். பிறப்பிற்கு வித்து இச்சை. வினையின் வந்தது வினைக்கு விளைவாயது யாக்கை. பண்டும் பண்டும் பல்பிறப்புளது என்பர் சான்றோர். தார்வென்தொட்டு இயற்கையாயுள் நூலாசிரியர் பலரும் இஃதுண்மையென்றனர். மணிவாசகப்பெருமானும்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்க்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.

என்று வருந்தியுள்ளர். பலவகைப்பிறப்பும் எழுவகைக்குட்பட்டன என்பர் பெரியோர். அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவாம். இவ்வெழுவகைப் பிறப்பிலும் மனிதப்பிறப்பே யுயர்ந்ததாம்.

எப்பிறப்பாயினும் ஏமாப்பொருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை— அறநெறிச்சாரம்.

மாந்தர் பிறப்பெய்த யாதவமே வேண்டுமெனச்
சாந்த மறை தேர்ந்து சாற்றிடலான்— குசேலர்வெண்பா.

இப்பிறப்பாகிய பேராழியைக் கடத்தற்குத் தக்க புணை அறவாழியந்தணன் தாள் சேர்தலாம். காடு திரிந்து காடு கடந்து ஆடை விழித்து முண்டிதஞ்செய்து ஊணிழந்து யாக்கை வெறுத்தல்—இவற்றால்

பிறப்பு நீங்காது. பற்றற்றானைப் பற்றுதலே வழியாம். இல்லறவொழுக்கினின்று பற்றுக்களைந்து பற்றிலானை யடைதல் சிறப்பாம். இவ்வுண்மை அறநூலோர் எங்கணும் வற்புறுத்துவர்.

பஞ்ச காவியங்களென்று பெயர் பெற்ற சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்தனுள் ஒன்று மணிமேகலை. அதன் தலைவி, கோவலனென்ற வணிக புத்திரனை வலைப்படுத்திய பரத்தை மாதவியின் மகள். காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழாக் காலத்தில் ஆடல்பாடலில் வல்ல தாயு மகளும் வரவில்லையென்ற வூரலர் பொறுத அன்னார் பாட்டியாகிய சித்திராபதி வயந்தமாலையை யனுப்பக் கோவலன் கொலையுண்டபின் தானும் மகளும் துறவிகளானமை கூறுக வென்றுகூறித் தன்துயரத்தை அறவணவடிகளிடம் முறையிட்டனள். அப்பொழுது

பிறந்தோருறுவது பெருகிய துன்பம்
பிறவாருறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோருறுவது அறிக

என்று அறவணவடிகள் மாதவிக்கு உபதேசித்தனர்.

இல்வாழ்க்கைச் செல்வன் புதல்வன். தொல்குடியின் மக்கட் பெறலின் மனைக்கிழத்தி என்றார் ஆன்றோர், தம்பொருளென்ப தம் மக்கள் என்றார் நாயனாரும்,

மக்களை யிங்கில்லாதவர்.

பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்
றென்னுடையரேனு முடையரோ.

என்றனர் புகழேந்தியும். பதியிழந்தாம் பாலனைப் பெறப் புத்திரயாகஞ் செய்தனர் பல் வறையரென்று புராண விதிகாசங்கள் பறையறையும். தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாற் றீருமென்பர் சாஸ்திரிகள். தான தருமங்க ளாற்றித் தந்தை தாயரைத் தீவினைப் படுகுழிக்கரை எற்றுபவர் புதல்வராம்.

இந்திரனோ டாசனத்துப் பாண்டு வினிதிருப்ப
மைந்தனறஞ் செய்தான் வடமலையே.

அறிவும் நற்குணமும் வாய்ந்த புதல்வரன்றி ஏனையோரால் பிழை பெரிதாம் என்பது திண்ணம். மாண்ட மக்களைப் பெறநோற்றல் பெற்றோர் கடனும். முந்தை யருந்தவத்தாலன்றி யடைவரோ மக்கள். தவப்பயனாய்ப்பிறந்த பிள்ளைகளால் பீடும் பெருமையும் பெருகும். அறிவும் பண்பும் அமையும். பிறவித்துன்ப மிழப்பர். இறவா வின்ப மெய்துவர் இதுபற்றியன்றோ!

மென்மொழி

செம்மைய வரு மகப்பெறாத்தீமையோர்க்
கிம்மையு மறுமையு மின்பமில்லையால்.

என்று கூறினர் நைடதவாசிரியர்.

மாதவமே செய்தாலும் மாமறையே தேர்ந்தாலும்
ஏதமிலா நல்லறமே என்றாலும்—பூதலத்தோர்
மைந்தரடையாராகில் வானுலகந் தான் சேரார்
முந்தை மறை சொல்லு மொழி.

என்றனர் நீதிவெண்பா வாக்கியோர்.

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

என்றனர் செந்நாப்போதார்.

பல்லார் பயன் றுய்ப்பத் தாம் வருந்தி வாழ்வரே மேன்மக்களாம். இடுக்கண் களைவதாம் நட்பு. இத்தகைய நட்பினர் தொடர்பு அமிர்தம். சிறந்தொருவர் செய்த நன்றுள்ளுவர் சான்றோர். துன்பத்துட் டுப்பாயார் தொடர்பு மறவற்க. நாழி கொடுப்பவற்கு என்று முறுதியே சூழ்க. இவையனைத்தும் ஆன்றோர் கூற்றாம். நன்றி மறத்தல் நன்றன்று. செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை.

ஆலங்கிடக்கு மனத்தார்க்கொரு நன்றி யம்பிலிட்ட
கோலங் கிடக்குங் கிடக்குங் கண்டாய்—குறையாதகுண
சீலங் கிடக்கு மனத்தார்க் கொருநன்றி செய்யில் வெகு
காலங் கிடக்குங் கண்டாய் வணிகா செந்தில் காத்தவனே.

இவ்வாறு சொக்கநாதப் புலவரும் குணசீலரே நன்றி மறவாதவர், குணஹீனரோ நன்றி யுணராதவர் என்று சாற்றியுளர்.

இடக்கருக் கிடுக்கண் வந்தால்
அகற்றுத லென்போ லென்னில்
விடங்கொள் தேழ் நெருப்பில் வீழ்ந்தால்
எடுத்து விட்டவனைக் கொட்டும்.

என்றார் நீதிநூலார்.

காளகண்டன் கருணையை வியவாத சைவருளரோ? தேவர்களும் அசுரர்களும் போர்புரிந்து வருகையில் தங்களுக்கு மரணமணுகா வண்ணம் அமிர்தபானஞ் செய்யக்கருதி திருமாலை வணங்கிநிற்க அவனருளால் மந்தரமலையை மத்தாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைய வாசுகி வருத்தம் பொருமல் விஷத்தைக் கக்கியவுடன் இருதிறத்தாரும் சிவபெருமானைச் சரணடைய அவர் தேவரைக் காத்தற்பொருட்டுக் கடுகிக் கடுவையுண்டு கண்டத்தில் நிறுத்தினர். பெயக்கண்டு நஞ்சுண்டமைவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர். ஆதலால் கண்ணோட்டமுடையார் நாகரிகமுடையார். செய்நன்றி யுள்ளாதார் மிலேச்சராவர். விழுமந் துடைத்தலாகிய பெருங்கருணையை என்றுமுள்ளுவர் மேலோர். பெருங்கருணைக்குப் பாத்திரமாதல் எம் கடனும். எழேழு பிறப்பிலும் செய்நன்றி மறவார் செந்தண்மை பூண்டொழுகியோர். இதுபற்றியே திருவள்ளுவ நாயனாரும்

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

என்று செய்நன்றிச்சிறப்புக் கூறினர்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல். கதங்காத்துக் கற்றடங்கல் வல்லுனரைக் காணச் சமயம்பார்க்கும் தருமக் கடவுளென்பர். அடக்கம் அமரருள் வைக்கும். அடக்கமுடையார் அறிவிலர் என்றெண்ணிக் கடக்கக்கருதுதல் தவறும். இப்பிறப்பில் கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண் நிற்றலும் ஒருவனுக்கெய்துமாயின் மக்கட்பிறப்பிற் பிறிதில்லையென்பது உறுதி. அடங்காமையோ ஆரிருளுய்த்துவிடும்.

கற்றறிவு, குலமேன்மை, கருணை, பெரும்
புகழ், செல்வங் கைம்மாறென்று
சுற்றுறவுங் கொடை சீர்மை யொழுக்க
மருந்தவ நியம முறையின் கேண்மை
மற்றெதிரிலாத் திண்மை வாய்மை மிகுந்
தூய்மைகுண வனப்பியாவும்
பெற்றிடினும் அடக்கமில்லாப் பெருமிதத்தா
லித்தனைக்கும் பிழையுண்டாமால்.

அடக்கம் பலவகைப்படும்:— வாயடங்கல், நெஞ்சடங்கல் செய்கையடங்கல்; இவற்றின் பயனைக்கூறும் வெண்பா இஃதாம்.

வாயினடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கையடங்குதல் திப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்சமடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்.

வீடடைதல் ஐம்பொறி யடக்கலா லாம். பத்துப்பாட்டிலொன்றாகிய மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் தலையாலங்கானத்திற் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி, நீ வெற்றிப்பிரதாபத்தை யொழி. பேரின்பத்தை நுகர், ஐம்பொறிகட்கு முன்னிற்பனவாகிய இந் நுகர்பொருள்கட்கு நின்னொடு என்ன வுறவு, நின்னிடத்துண்டாய மாயையை அடு என்று நற்புத்தி கூறியவிடத்து இவை வரும்.

வானன் வைத்த விழு நிதி பெறினும்
பழிநமக்கெழுகவென்னாய், விழுநிதி
ஈதலுள்ள மொடிசை வேட்குவையே
யன்னாய், நின்னொடு முன்னிலை யெவனோ
கொன் ஒன்று கிளக்குவன், அடுபோரண்ணல்
கேட்டிசின், வாழி, கெடுக நின் அவலம்.

ஆமையானது அபாயம் வருமென்றஞ்சி நான்கு கால்களையுந் தலையையும் தன் ஓட்டின் கீழடக்கிக் கொள்ளுமாறு அறிவு படைத்த மனிதன் தன்னிடம் பாவஞ் சேராதிருத்தற்பொருட்டு மெய், வாய், கண்,

மூக்கு, செவி என்ற ஐம்புலன்களின் வழியாய் ஐம்பொறிகளையுஞ் செல்லவிடாமல் அடக்கவேண்டும். பொறிவாயிலைந்தவித்தான் என்பது கடவுளைக் குறிக்குமன்றோ. அடக்கமுடையாருக்கு ஆகாததொன்றில்லை. இவராற்றலுக்கு இந்திரனே சாலுங்கரி என்று தமிழ் மறை கூறும். இவ்வண்ணம் இம்மையில் கிரகஸ்த தருமத்தை நடாத்தி மனத்தைக் கடிவாளமிட்டுக் கைவசம் வைத்திருப்போருக்குப் பொன்றுங்காற் பொன்றாத் துணை இஃதன்றி வேறில்லை. இதனையே மாதாநுபங்கியும்,

ஒருமை யுளாமை போலைந் தடக்கலாற்றி
னெழுமையு மேமாப்புடைத்து.

என்று சிறப்பித்துக் கூறியுளர்.

கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை என்றார் நீதிநெறி காட்டினோர்.

கற்புக்கரசியாகிய ஆதிரையின் கணவன் சாதுவன் கப்பலுடைந்து கடலில் மிதந்து நாகர்மலையையடைந்து நாகர் குருவிற்குப் பிறப்பின்வகை யறிவுறுத்தியாண்டு,

உடம்பீண் டொழிய உயிர் பலகாவதம்
கடந்துசேட் சேறல் கனவினுங் காண்குவை
யாங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையிற் புகுவது தெளிநீ.

என்று கூறியுளார். உயிர் கூடு விட்டுக் கூடுபெறுந்தோறும் கல்விப்பயன் கூடவே செல்லுமாதலால் உயர்கல்வி யுண்மையறிதல் நன்மை. கேடில் விழுச்செல்வம் கல்வி. கல்வியே மம்மரறுக்கு மருந்து. இம்மை பயப்பதும் அதுவே. மேலும், நண்ணும் மறுமைக் கணிகலங் கல்வி என்றார் நல்லாதனார். கல்வி கரையில, கற்பவர் நாள் சில வாதலின் ஆராய்ந்து அமைவுடைய கற்கவேண்டும். மடங்கொன்று அறிவகற்றுங் கல்வியே பெரிது.

அஃதுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூ லோதுவ தெல்லாம்.

நிகைவென்று பொன்றுங்காற் றுணையாகா. கல்லாதவர் குருடரெனின் ஞானக்கல்வி கல்லாதவர் பிறவிக் குருடராவர். நல்லம் பாமென்னும் நடுவுநிலை எய்தாதவர். கொடிறும் பேதையும் கொண்டது விடா, என்றவாறு கற்றிலார் யானை கண்ட குருடர் போன்று வீண் வாதஞ் செய்வர். மெய்ப் பொருளை யறியார். வாலறிவன் றாள் தொழுலே கற்றதனாலாய பயனென்பாரேல் இல்வாழ்க்கையிலிருந்து இல்லறம் வழுவாது செய்து உயர்ஞானவழியை நாடுபவர் வீடடைவர். சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில்,

ஓதியவேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை.

ஆதாவது வேதாகமங்களை யோதிணுலன்றி பிறவியாகிய சிறை (துவாரமில்லாத கீழறை) யினின்றும் போகமாட்டார் என்று கவுந்திஅடிகள் சாரணர் கூறியது காண்க. இக்கருத்தையே உத்தர வேதமும்.

ஒருமையுட் டான் கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப்புடைத்து.

என்று பறை சாற்றுகின்றது.

ஆகவே. சித்தில்லாகிய இவ்வுடம்பை விட்டு வுயிர் நீங்கி யாத்திரை செய்யும் பொழுது அதற்குத் தக்க வழித்துணையா யீடேற்றுவிப்பன நான்காம், இவை கற்றறிந்த பிறரால் பழிக்கப்படாத பண்புடைய மக்களுடைத்தாதல், துன்பந் துடைத்தவர் தொடர்பை என்றும் நினைத்தல். இம்மைக்கும் உம்மைக்கும் தம்மையுடைமை தலை. என்றவாறு ஐம்பொறியடக்குதல், உணர்ச்சி மிகுதியால் ஞானக்கண் திறக்குங் கல்வி கற்றலுமாம். ஆதலால்,

பிறவாவின்பம் பெறவே யுள்ளுவர்
சிறவா மாண்ட சிறுவரைப் பெறுதல்
இறவா நன்றினை யென்றும் நினைத்தல்
அறவா றறிந்த வடக்க முடைமை
உறவா ரடியினை யுய்க்குங் கல்வி
மறவா தாளும் மனத்திடம் வைப்பரே.

SOCIAL REFORM.

CHAIRMAN, LADIES AND GENTLEMEN,

I cannot exactly express myself when I behold my position in your midst. It speaks more of your sincerity than of my worthiness or greatness, I certainly thought that the Secretary perhaps committed a mistake when he selected me as one of the speakers. Yet, dear friends, let me assure you that I am very grateful to you for giving me a chance to speak out to my worthy countrymen. What I have desired for a long time to say and join my voice with those who call aloud for my country, my motherland, for my people whom I love and pray for both day and night.

Let us now consider what are the weak points of our Indian nation and what are the reforms we can bring in to increase our happiness to make us stronger, to enable us to run life's race along with the other civilized nations of the world. As Social Reformers I request you, you patriots, to enter our homes in your imagination. Look at the mothers. the queens of our homes. Their inborn, inherited virtues are all they have to show you. They silently complain and say 94 P.C. of us are uneducated: have you no mercy on us? We want to do our best for you, and the sweet children. But you have left us in ignorance. Please send us the light, we shall shine for you. The light of knowledge which you have receiv-

ed so abundantly; we too are in need of it. Oh hear our prayers!! They speak all in one voice without opening their lips. Then comes a band of innocent company. The would-be-fathers are our would-be-statesmen and warriors, the builders of our nation. Please listen to them, for they also whisper into your hearts and souls. Gentle men, Elders.! Please train for us educated wives. Educate our mothers. Please edit books and magazines for us also. Now we are more than neglected. Oh do care for us, make our young lives happier, our school rooms brighter. For we want to shine for India-our motherland. Teach us love. Teach us all about God. We want to live in love. Our little maidens then directed their dark eyes to you and said, please, neglect us not. We want to become wise, very wise wives and mothers. Now Gentlemen! I leave you to select your reply to them. yourselves.

Leaving our homes, let us consider leisurely how the farmer, the daily labourer gets on, one fourth of our 300 millions does not get sufficent food 67 P.C. or more of them are illiterate; we have entrusted them with the art of winning our bread from the soil. While in other countries as America, they have machines used for anything and everything; with us our precious hands answer every call. Once I visited one of the many betel-leaf gardens of the Tanjore District. There I learnt for the first time how very difficult it is to water the plants. It is not possible to use some pump or some such contrivance for the purpose. The richest nay, the most educated, of our landlords leave their farms in the hands of the gentlemen pariah coolies and wonder the produce of his land is decreasing every year. Can he not bring in new methods? Methods which are less expensive and more productive. He can, but he will not. The Government have been trying to help us in this direction as for as my meagre knowledge goes journels on the subject are

not wanting. Still we are adopting the methods used by our grand father's grand father when he was 7 years old. Though this may appear to be a disgression, I say, plenty has to come in before peace can reign. A hungryman is an angryman. Go and speak to the farmer about educating his son. What has he to answer. He says போங்கப்யா, குடிக்க கூழில்லை கட்டக் கந்தல் இல்லை படிப்பு வேணுமாம். If I send my son to be a cow herd, he will bring an anna a day. What will your education give me? Is he not right? Hence I beg of you, Gentlemen, who are anxious for the improvement of your society to see that the foundation of your work is strong before you ever think of its superstructure. See that your ladies are properly educated· that the girls receive that sort of training which whould fit them for their future life as wives and mothers. The household goddesses in whose hands lies the happiness, even the future of the child, the comfort and everything of the lord of the house, the refuge of the helpless and the sick, the inspiring agent of the strong and the brave. Make your schools brighter and more attractive. Make the teacher's profession more attractive so that the select of the land may offer their services to that profession.

Now as it is the case is very different. Give some education to the farmer. Improve his condition. Take care of him neglect him not. Because his fortune is ours.

Now let us pass on to consider our society our merry making parties. There again we do not enjoy one tenth of the pleasures we can enjoy. Whether it is a humble party at home or a grand feasting occasion. At home where the ladies of the household ought to be in the society of the men to learn of them, to ennoble them and to sweeten the happy hours of rest after the day's heavy work outside, are kept in the kitchen or some where about it. The same affair comes on a larger scale on grand

பின்பு அந் நன்னாசி மதுரையை நீங்கி மேற்றிசையின் மலை நாட்டடைந்து அதிலுள்ள திருச்செங்குன்றென்னு மலைமேலேறி ஒரு வேங்கை மரத்தி னீழலிற் றங்கி - மதுராபதித் தேவதை கூறிய படி பதினாலாவது தினத்தில் அங்கே தேவ வடிவத்தொடு வந்த கோவலனைக் கண்டு களித்து அன்புடன் விமானத்தின் மேலேறித் தேவர்கள் போற்றும்படி சுவர்க்க மடைந்தார். நன்னாசி இவ்வாறு கணவனோடு விமானமேறிச் சுவர்க்கம் புக்கது கண்ட வேட்டுவ மகளிரும் வேடர்களும் இவ் வதிசயத்தைத் தம் நாட்டரசனுக்குத் தெரிவிக்கவேண்டி - தனது தேவி வேண்மாளோடும் தம்பி இளங்கோவடிகளோடும் பேராற்றங் கரையின் மணற்குன்றில் வீற்றிருக்குஞ் சேரன் செங்குட்டுவனைக் கண்டு கூறினார்கள். அதுகேட் டவ்வரசன் அதிசயிக்க-அங்கு வந்திருந்த மதுரைத் தமிழாசிரியர் சீத்தலைச்சாத்தனார் - கோவலன் மதுரையிற் கொலையுண்டதையும் அங்கே நன்னாசியால் நடந்தவற்றையும் பிற நிகழ்ச்சியையுங் கூறக்கேட்டுத் தன் பத்தினியின் வேண்டுகோளால் நன்னாசியாகிய பத்தினிக் கடவுளைத் தம் நகரிற் பிரதிட்டை செய்து விதி வழாது நித்திய முதலிய பூசைகள் செய்வித்து இன்புற் றிருந்தான். இவன் மட்டுமோ இவ்வாறு பூசித் தின்புற்றானெனில் - ஆரிய மன்னரும் மாளவ வேந்தரும் - இலங்கை அரசன் கயவாகுவும் - அம் மலை நாட்டடைந்து இப் பத்தினிக் கடவுள் சந்நிதியுற்றுப் பல்லாற்றுந் துதித்துப் பணிந்து நின்று - எ கற்புத்தெய்வமே! இந் நாட்டினர் செய்யும் பூசை முதலியன வேற்றுக்கொண்டு இவர்க் கருள் புரிந்து வருதல்போல் எங்கள் நாட்டினும் யாங்கள் செய்யும் பூசை முதலியவற்றை யேன்று கொண்டு எங்கட் கருள்செய வேண்டுமென்று பிரார்த்திக்க அவர்கட் கவ்வாறனுளை புரிந்தும்-கொங்குமண்டலத் தரசரும் சோழநாட் டரசன் பெருநற்கிள்ளியும் தங்கள் தங்கள் நாட்டில் இவ் வம்மையாரைப் பிரதிட்டை செய்து வழிபட அவர்கள் நாடும் அவர்களும் செழித்தோங்கி வழர்தர வருள் புரிந்தும்-இன்னும் தன்னை வழிபட்டவர்கள் வேண்டிய வேண்டி யாங்கெய்தி யின்புற்று வாழ்ந்தமையும் பிறவும் இந் நூலாராய்ச்சியிற் காணப்படுகின்றது. அன்பர்காள்! இக் கற்புத் தெய்வத்தின் குணக்கடலை யாராய்ந்து புகழ்தற்கு எத்தனை நாவிருப்பினு மமையுமோ - தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை யென்றற் றொடக்கத்துச் சுருதிகட் கிவரன்றோ இலக்கிய மாகின்றார். இம் மகாபத்தினியின் செய்கையால் பெண் மக்கட்குக் (கற்பென்னும்) நாயகன் சொற் கடவாது நிற்றலே-எல்லாப் பெருமையையும் எல்லாப் புகழ்மையையும்-எல்லாத் தெய்வத்திறத்தையும் எல்லாச் சாபாநுக்கிரக சத்தியையுந் தருதற் கைபமுண்டா - இவர் மக்கள் யாக்கை பெற்றவரா யிருந்தும் இப்போதும் நம் நாட்டிற் பலவிடங்களில் உள்ள ஆலயங்களில் தெய்வ

மாக வணங்கி வாழ்த்தப்படுதற்குக் காரணம் இவரது ஒழுக்கமேயன்றே -
இதனால் ஒழுக்கம் விழுப்பந்தரு மென்பதறிந்து அதனை யுயிரினும் ஓம்பி
னோர்க்கிப் பெற்றித்தாம் பெருநலன் அனைத்தும் ஒருதலையாகக் கிடைத்
தல் திண்ணமென் றறியக் கிடக்கின்றதன்றே - ஆதலால் ஆண் மக்களாயி
னும் பெண் மக்களாயினும் தங்கள் தங்களுக்கு விதித்த ஒழுக்க வழியி
னிற்பின் - அவர்கள் எப் பெரும்பேற்றையும் பெறலாமென்பது இதனாற்
கிடைத்தது. நாயகன் சொற் கடவாத நன்மணி யிவரால் பெண்கட்கு
ஒரு பெருமையுங் கிடையாதென்பார் மதமறுக்கப்பட்டது. புகழ்க்கடற்
படி வப் பொற்கொடி யிவரால் - நாயகன் தன் ஒழுக்க வழியிற் பிழைப்பி
னும் நாயகி தன் ஒழுக்க வழியிற் றவறுதற்றால் எந் நலனு மொருங் கெய்
தப்பெறும் என்பது பெறலும். தவத்தினற் கொழுந்தாந் தன்மையுமிவ
ரால் பெண் மக்கட்குந் தமுண்டென்பது கிடைத்தது. தேவர்க டுதிக்குந்
தேவிய ரிவரால் தேவரு மூவரு முனிவரு மேவருந் தம் மனைவருந் துதிக்
கற்பாலார் பெண் மக்களென்பது தணியக் கிடந்தது. இத்தனையுங்
கூறியவாற்றாற் கிடைத்த திரண்ட பொருள் யாதெனில் - கண்ணகி
கோவலனிருவரும் புகார்ப்பட்டினத் தவதரித்த வணிக மரபின
ரென்பதுவும் - இவ்விருவரும் ஆரம்ப காலத்தில் இல்லியலிற் பிழை
படாது வாழ்ந்தாரென்பதுவும், இவரில கோவலனேர் கணிகை வயிற்
படர்ந்தும் கண்ணகி யிவ் வொழுக் கிறவா தாற்றா ரென்பதுவும் பொரு
ளற்று வறுமை யுற்று அக் கோவலன் அக் கணிகையிற் றீர்ந்து மனைவயிற்
போந் தாற்றன கூற - அவ் விருவரும் மதுராநக ருற்றாரென்பதுவும் -
செழியனாற் கோவல னிறந்தது கேட்ட கண்ணகியார் மதுரையைத் தீக்
கிரையாக்கி மலைநா டடைந்து - பதினாலாவது தினத்தில் சுவர்க்கத்தி
னின்றும் தேவ வடிவத்தொடு வந்த தன் நாயகனுடன் விமானமேறிச்
சுவர்க்கம் புக்காரென்பதுவும் இவரிற் கண்ணகியாரின் தெய்வக் கற்பியற்
றிறந் தெரிந்த வரசர் பலரும், தத்தமூர்களி லாலயங் கட்டுவித்து அவற்றி
லிவ் வம்மையைப் பிரதிட்டை செய்து வழிபட அவர் வேண்டிய வேண்டி
யாங் கெய்தப்பெற்று வாழச் செய்தன ரென்பதுவும் பிறவுமாம்.

ஒழுக்கம்.

ஒழுக்க மென்பது அறஞ்செய விரும்பு யென்பது முதல் மனுதர்ம சாஸ்திரம் வரையுள்ள விதிகள் அடங்கியது.

இவ் விதிகள் பொதுவாய் ஒவ்வொருவருடைய உலக வாழ்க்கை விருத்தியையும் பொதுஜன நன்மையையும் உத்தேசித்து ஏற்படுத்தப்பட்டவை என்று நாம் நினைக்கிறோம். அல்லது இவ் விதிகளை யனுசரிக்கின். இவை மோக்ஷத்திற்கு காரணமானவை யென்று நினைக்கிறோம். அல்லது ஐரோப்பிய சாஸ்திரிகள் சிலர் சொல்லுகிறபடி இவை மனித இயல்பில் ஏற்பட்ட குணங்களால் உண்டாக்கப்பட்டவை; அவைகளின்படி நடக்க இயல்பாகவே எண்ணம் தோன்றுகின்றது யென்று சொல்லலாம். அல்லது பின்னும் சில சாஸ்திரிகள் சொல்லுகிறபடி மனிதர் தேகமானது ஒருவித விருத்தியால் யேற்பட்டது. அதாவது அணுவிலும் அணுவா யிருக்கும் சிறு பிராணிகளி லிருந்தும் பெரிய பிராணிகளுண்டாயின. அவைகளி லிருந்தும் அதற்கும் பெரிய பிராணிகளுண்டாயின. ஆக கடைசியாய் அனேகவித அவயவங்க ளடங்கிய மனித தேகம் உண்டாயிருக்கின்றது. அதைப்போலவே அதாவது தேகமானது விருத்தியடைந்து எவ்வாறு வித்தியசப்பட் டிருக்கின்றதோ அவ்வாறே அத் தேகத்தின் தொழில்களும் விருத்தியடைந்து வித்தியாசப்பட் டிருக்கின்றன சில அணுக்கள் மாத்திர மடங்கிய தேகத்தையுடைய கீழ்ப்பிராணியான ஒரு பிராணி சில தொழில்களைத் தான் செய்யும். இன்னும் சில அணுக்க ளடங்கிய இதற்கு மேலான ஒரு பிராணி இதைவிட கொஞ்சம் அதிகத் தொழில்களைச் செய்யும். இவ்வகையாய்ப் படிப்படியே அதிகப்பட்டு எவ்வளவோ கோடி அணுக்க ளடங்கிய பிராணியான யானையானது அனேகவித அவயவங்க ளடங்கிய தேகத்தை யுடையதால் அனேகவித தொழில்களைச் செய்யக் கூடியதாய் மிருகங்களுக்குள் மிகுந்த புத்தியையுடையதா யிருக்கின்றது. சில அணுக்க ளடங்கிய ஜலவாசியான ஒரு பிராணியின் ஆயுசானது சிலமணி நேரங்கள்தான். அதற்குள் பிறப்பு, வளர்ப்பு, இருப்பு, இறப்பு, யெல்லாம் முடிந்துவிடுகின்றது.

இப் பிராணிகள் கோடி கோடியாய் விருத்தி யடைந்தும் யெவ்வளவு சீக்கிரம் விருத்தி யடைகின்றனவோ அவ்வளவு சீக்கிரம் இறந்தும் விடுகின்றன.

நாம் வியாதியஸ்தர்களுக்கு கொடுக்கிற காடலிவா ஆயில் (God liver oil) யென்ற யெண்ணெயை யெந்த மீனுடைய ஈரலிலிருந்து யெடுக்கிறோமோ அந்த மீனில் ஒரு மீனானது 10 லெக்ஷம் முட்டையிட்டாற்றான் இரண்டு மீனாவது தேறி முட்டையிடும் பருவத்தை யடைகின்றது.

இம் மீன் செய்கிற தொழில் யெல்லாம் மூன்றுதான். இரை தேடுவதும் தனக்கு சத்துருவாக யிருக்கும் மீன்களைக் கண்டால் அவைகளுக்கு அகப்படாமல் ஒழித்துக்கொள்வதும்; முட்டையிடுவதுந்தான். தேகவிருத்தியை யடைந்த யானையானது தொழில் விருத்தியையும் அடைந்து அநேக தொழில்களைச் செய்கின்றது. பார்வையாலும் மோப்பத்தாலும் தன் உணவை அதிக தூரத்திலிருந்தறிந்து தனக்கு உபகரித்துக்கொள்ளுகிறது. பகைவர்களைக் கண்டால் வெகு புத்தியோடு தப்புகின்றது. அல்லது எதிர்த்து சண்டை செய்துதான் முடியவேண்டுமானல் கொம்புகளாலும் துதிக்கையாலும் தன் கனத்த கால்களாலும் சண்டை செய்கின்றது.

இதைத் தவிர தன் தேகத்தின் சௌக்கியத்திற்காக துதிக்கையால் ஜலத்தை உறுஞ்சி தன்மேல் சிதறி ஸ்நானம் செய்கின்றது. துதிக்கையால் மரங்களில் சிறு கிளைகளை முறித்துக்கொண்டு அவைகளால் ஈக்களை விரட்டி தன் தேகத்தை உபாதிக்காமல் செய்துகொள்ளுகின்றது. பின்னும், பலவிதமாய் வீரிடுகிற தொனிகளால் தன் கூட்டத்தைச் சேர்ந்த மற்ற யானைகளுக்கு அபாய முதலியவற்றைத் தெரிவிக்கின்றது. பிராணிகளிலெல்லாம் உயர்ந்த பிராணி மனிதன். மனிதனிலும் தாழ்ந்த நாகரீகமில்லாத மிலேச்சனிருக்கின்றான். விசேஷ நாகரீகம் பெற்ற உயர்ந்த ஜாதி மனிதனிருக்கின்றான். இந்த நாகரீகம் பெற்ற மனிதனுடைய தொழில்கள் கணக்கினுள் ளடங்கினவையல்ல. இவ்வளவு தொழில் வித்தியாசத்தை யடைந்த மனிதனானவன் நல்லொழுக்கத் தேர்ச்சியையும் வித்தியாசத்தையும் மேற்சொன்ன விருத்தியின் பொருட்டுத் தானடைகின்றா னென்று சில சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் நாம் இங்கு சொல்லப்போவது அவ்விதமல்ல,

மனிதனிடத்திலே உள்ளடங்கி அநேக சக்திகள் இருக்கின்றன. இச் சக்திகளை யறிந்து அவைகளை விருத்தியடையச்செய்து அதிலிருந்தும் கிடைக்கும் பேரின்பத்தை யடைய இவ்விதிகள் ஏற்பட்டனவென்று சொல்ல முயலுகின்றேன்.

உலகத்தில் சரித்திர மூலமாய் அறியக்கூடிய பூர்விக ஜாதிக்காரர்களின் மதங்களின் முக்ய கொள்கைகளேயும் அவைகளுக்கு ஆதாரமாயிருந்த இரகஸ்ய சாஸ்திரங்களேயும் அந்த சாஸ்திரங்களே அப்பியசிக்க அவர்கள் அத்யாவஸ்யமாய் நினைத்திருந்த ஒழுக்கத்தையும் கவனிக்கப் புகுவோம்.

சுமார் 6000-ம் வருஷங்களுக்கு முன் யெகிப்து தேசத்தில் யெகிப்தியர் யென்னும் ஜாதிக்காரர்களிருந்தார்கள். அவர்களுடைய பாஷையானது அநேக காலமாய் அழிந்துபோய் சமீபமாய் சுமார் 80, 90 வருஷங்களுக்கு முன் வெகு புத்திநுட்பத்தோடு ஆராய்ச்சி செய்த டாக்டர் யெங் (Dr. Young) சம்போலியன் (Champollion) இவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் பலவகையாய் யெழுத்துக்களைச் சேர்த்து வார்த்தைகளாக்கி அவ் வார்த்தைகளுக்கு அருத்தங்கள் இன்னவையென்று கண்டு பிடித்தார்கள்.

இவ்விதம் கண்டு பிடித்தது எளிதுதானென்று நாம் நினைக்கலாம். அவ்விதமல்ல.

அப் பாஷையி னெழுத்துக்கள் தற்காலத்தில் விளங்கும் யெழுத்துக்களைப் போலல்லாமல் காக்கை குருவிபோலிருக்கும். அவைகளைப் படத்தில் காண்க.

இப் பாஷை சுமார் 2000-ம் வருஷம் வரை விவரிக்கப்படாமலிருந்து மேற்சொன்னவர்களின் பெரும் முயற்சியால் தற்கால பாஷைகளை யெவ்வளவு சுலபமாய் வாசிக்கவும் அருத்தப்படுத்தவும் கூடுமோ அவ்வண்ணம் இப் பாஷையை வாசிக்கவும் அருத்தப்படுத்தவும் சாதகமாயிருக்கின்றது. அவர்கள் பூர்வீக காலத்தில் கட்டிவைத்த பிரமிட்டுகள் யென்னும் கட்டிடங்கள் இன்னும் அழிவு பெறாமல் இருக்கின்றன. அவைகள் எவ்விதம் கட்டப்பட்டன, எவ்விதம் அழிவு பெறாமலிருக்கின்றன வென்ற விஷயங்களை நம்மால் அறியக்கூடாததாயும் நமது ஆச்சரியத்துக்கு உரித்தனவாயும் இருக்கின்றன. இக் கட்டிடங்கள் நான்கு மூக்குள்ள ஒரு பெரிய சரல் குவியல் போலிருக்கின்றன. இவைகளில் பெரிய பிரமிட்டானது உயர்ந்த வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டது. 30 அடி நீளச்

னுக்கும் குறையாத கற்பலகைகளை 1300 மைல்களுக்கு அப்புறமிருந்து கொணர்ந்து கணக்காய் சதுரித்து நயமாய் மெதுவிட்டு வெகு நுட்பமாய் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. அதனடிவாரம் சுமார் 11 ஏக்கர் விஸ்தீரணம் இந்த சம சதுரமான அடிவாரத்தின் ஒவ்வொரு பக்கமும் 765 அடி நீளமிருக்கின்றது. இதன் உயரம் 500 அடி. இந்தக் கட்டிடமானது நாள் ஒன்றுக்கு லெக்ஷம் வேலையாட்கள் வீதம் 20 வருஷம் வேலை செய்து முடிக்கப் பட்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகள் கட்டப்பட்டிருக்கும் கணக்கு இன்னும் வெகு விநோதம். இவைகளின் பட்டங்கள் கொஞ்சம்கூட விலகாமல் நான்கு திக்குகளையும் குறிக்கின்றன. தற்காலத்து திசைகாட்டும் கருவியால்கூட இதைத் திட்டமாய் குறிக்கிறது எளிதல்ல. இவைகளின் ஒவ்வொரு பக்கங்களின் விஸ்தீரணம் அதன் உயரத்தை ஒன்றோடொன்று பெருக்கினால் கிடைக்கும். இதன் நாலு பக்கங்களின் அடிவாரத்தின் நீளத்தைக் கூட்டிவரும் தொகை அதின் உயரத்திற்கு எவ்விதம் இருக்கிறதென்றால் ஒருவட்டத்தில் அதன் சுற்றளவிற்கும் அதன் மத்தியிலிருந்து சுற்றளவு வரை வரும் வரைக்குமுள்ள பரிமாணமாயிருக்கின்றது.

பூமியின் குருக்களவில் 50 கோடியில் ஒரு பாகம் ஒரு பிரமிட் அங்குலமாகவும் 2 கோடியில் ஒரு பாகம் ஒரு பிரமிட் முளமாகவும் வைத்து அப்படி 365¼ முளமாகயிருக்கும்படி ஒரு கட்டடத்தின் அடிவார நீளம் வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு 365¼ பென்று எண்ணம் வைக்கப்பட்டது ஒரு வருஷத்திலடங்கிய நாள்களைக் குறிக்கின்றது. இதன் உயரமானது 5819 பிரமிட் அங்குலங்கள். இது சூரியனுக்கும் நமக்குமுள்ள நீளத்தைக் குறிக்கின்றது. சூரியனுக்கும் நமக்கும் 9 கோடியே 18 லெக்ஷத்து 40 ஆயிரம் மைலிருக்கின்றது. 5819 ஒன்றிற்குப் பதிலாக 100 கோடி அங்குலமென்று வைத்துக்கொண்டால் நமக்கும் சூரியனுக்குமுள்ள நீளம் கிடைக்கும்.

இவைகளைத் தவிர உச்சவரை, விட்சேபவரை, அயனசலனம், நக்ஷத்திரங்களின் சங்கிரமங்கள் இவைகளையெல்லாம் கணக்கிட்டு இன்னும் அநேக அளவுகள் ஏற்படுத்தி கட்டியிருக்கிறார்கள். இதற்குள்ச் சென்று பார்க்குமிடத்து வெகு விநோதமாய் சிவப்பு கற்களால் கட்டப்பட்ட இரண்டு அறைகளிருக்கின்றன. அதில் ஒன்றில் அநேக வருஷங்

களுக்கு அறிவு பெருமையிருக்கும்படியாய் ஒரு விநோத ரசாயன முறையால் பக்குவப்படுத்தின இதைக் கட்டின ராஜனின் தேகத்தை வைத்திருந்த ஒரு கற்பெட்டி யிருக்கின்றது. மற்ற அறையில் இவருடைய ராஜாத்தி வைக்கப்பட்டிருந்த கற்பெட்டி யிருக்கின்றது. இந்த பிரமிட்டானது ஒரு பெரிய பாறையின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது. இதன் அடிவாரத்திலிருந்து பூமிக்குள் ஒரு குகைபோல் 350 அடி நீளத்திற்கு ஒரு வழி நுழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வழி ஒரு நிலவரைக்குள் முடிகின்றது. இவ் வழியானது அப்போது துருவ நக்ஷத்திரமாயிருந்த (Alpha Draconis) ஆல்பா, டிரேக்கோனிஸின் கீழ்சங்கரமத்திற்குச் சாயலாக குடையப்பட்டிருக்கிறது. இதன் வழியாய் சிலதூரஞ் சென்றபின் இவ்வழியிலிருந்து இதே சாயலாக மேல்நோக்கிச் செல்லும்படி ஒரு வழியும் அதன் முடிவில் ஒரு அறையுமிருக்கிறது. அவ் வழிகள் சந்திக்குமிடத்தில் ஒரு தட்டில் ஜலத்தையாவது அல்லது பிரதிபலிக்கும் வேறெவ்விதத் தட்டையாவது வைத்தால் அதில் ஒளி வீசும் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் இந்த மேற்தட்டு அறையிலிருந்து சோதிக்கலாம். நமது காலத்து பிரபலமான வானசாஸ்திரியான பிராக்டர் என்பவர் இந்த பிரமிட்களைப்பற்றி யெழுதியிருக்கும் புஸ்தகத்தில் பின் வருமாறு சொல்லுகின்றார். இந்த மேற்தட்டு அறையிலிருந்து மூலமட்டம் முதலான கருவிகளை வைத்து சூரியன் ஆகாயத்தில் செல்லும் வழியை யெவ்வளவு திட்டமாய் கணக்கிடப்போமோ அவ்வளவு திட்டமாய் கணக்கிடலாம்.

சந்திரன் மாதந்தோறும் செல்லும் வழியையும் கிரகங்களின் இயல்பான வழியையும் நக்ஷத்திரங்கள் செல்லும் வழியையும் இந்த மேற்தட்டு அறையிலிருந்து அதிக நுட்பமாக அறியலாம். வானசாஸ்திரத்தின் பரிசோதனைக்கு இந்தக் கட்டிடங்கள் யெவ்வளவோ உதவினதாகயிருந்தாலும் இயல்பில் அந்த நோக்கத்தோடு கட்டப்பட்டனவாகத் தோன்றவில்லை. அவைகள் ஜோதிட சாஸ்திரத்திற்கு வேண்டிய பரிசோதனைக்காக யேற்பட்டனவாகத் தெரிகின்றது.

பூர்வீகமாய் எகிப்தியர்களுக்கு முன்னமேயே அக்கேடியன்ஸ் யென்பவர்கள் ஜோதிட சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்து விசேஷ விருத்தி செய்துவந்ததாக தெரிகின்றது. வாரத்தின் ஏழு நாட்களை ஏழு கிரகங்களுக்கு அற்புதமான நாட்களாக யேற்படுத்தினதும் இப்போது வழங்கும் வரிசையாக யேற்படுத்தினதும் யெவ்வளவோ பண்டையகாலத்தில் யேற்பட்டுவந்ததாகத் தெரிகின்றது. தினங்களின் வரிசை யேற்பட்டதின் காரணம் அக் கிரகங்களின் பருப்பத்தையும் பிரகாசத்தையும் உத்தேசித்தல்ல. இக் கிரகங்களெல்லாம் ஆகாயத்தில் ஒருவட்டம் சுற்றிவர இவ்வ

ளவு காலம் செல்லுகின்றதென்றும் அவ் வட்டத்தின் அளவுகளும் அப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வாரத்தின் நாள்களுடைய வரிசை இவ்வாறுதான் ஏற்பட்டதென்று பரிசோதிக்க வெகு விநோதமாயிருக்கும். ஆனாலும் அதை விஸ்தாரமாய்ச் சொல்ல நேரமில்லாததால் நிறுத்திக்கொள்ளுகின்றேன். இந்த வரிசை உண்டான விதம் யூகத்தால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. கால்டியா தேசத்தின் அழிந்துபோன கோவில்களிலும் அரண்மனைகளிலுமிருந்து எடுக்கப்பட்ட சுட்ட ஓட்டுச் சாஸனங்கள் மூலமாய்த் தெரிகின்றது.

கால்டியா தேசத்தில் கால்டியர்களுக்கு முன்னமே அக்கேடியன்ஸ் என்னும் ஜாதியார்கள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் சரித்திரங்களை எகிப்தியர்களைப்போல் பாப்பயர்ஸ் மரப்பட்டையிலாவது அல்லது மற்ற ஜாதிக்காரர்களைப்போல் கல், தாம்பிரம், ஓலை முதலானதுகளில் வரைந்து வையாமல் பச்சைக்களிமண் சதுரோடுகளில் அம்புமுனை போன்ற எழுத்துக்களால் வரைந்து, பின் அவைகளைச் சுட்டுவைத்திருக்கின்றார்கள். இவைகள் சுமார் 6000-ம் வருஷங்களுக்கு முன் ஏற்பட்டவைகளாயிருக்கின்றன, சுமார் கி. மு. 3800-ம் வருஷத்தில் அக்காட் தேசத்தில் ஆண்ட சாரகன் சக்கரவர்த்தியின் ஓட்டுப் புஸ்தகசாலையிருந்த சமீபமாய் அகப்பட்ட சில ஓடுகள் மூலமாய் வார தினங்களின் பெயர்களும் வரிசையும் இன்னதென்று தெரிகின்றது. இவ்வாறே சூரியன் சந்திரன் மற்றும் கிரகங்களைப்பற்றி வான சாஸ்திரத்திற்கு வேண்டிய பரிசோதனையும் ஜோதிட சாஸ்திரத்துக்கு வேண்டிய அநேக பரிசோதனைகளும் எவ்வளவோ செய்துவந்ததாக தெரிகின்றது.

ஆகையால் 7000-ம் வருஷங்களுக்கு முன்னமேயே கட்டட வேலைகளும் இஞ்சினியரிங் வேலையும் (Engineering) விவசாயவேலையும் உயர்ந்த சாஸ்திரங்களும் பாஷாவிருத்தியடைந்த காவியங்களும் பெருமை பெற்ற மதமும் உயர்ந்த நூல் நூற்றல், நெசவு நெய்தல், மரத்திலும் லோகங்களிலும் வேலை செய்தல்போன்ற கைத்தொழில் முயற்சிகளிலும் தற்காலத்தில் இவை எவ்வளவு விசேஷ விருத்தியடைந்திருக்கின்றதோ அவ்வளவு விருத்தி 6000, 7000-ம் வருஷங்களுக்கு முன்னமேயே அவை அடைந்திருந்ததாக நிச்சயப்படுத்தப்படுகின்றது. இதைப்போலவே சித்திர வேலைகளிலும் சிற்பசாஸ்திர வேலைகளிலும் அபரிமிதமான விருத்தியடைந்திருந்தார்களென்பது நிச்சயம்.

இரண்டாவது பிரமிட்டைக் கட்டின கெப்ரான் (Cephron) கல்லில் கொத்தியிருக்கும் பிம்பத்தினுடைய அழகை தற்கால சாஸ்திரிகள் கூட பார்த்து ஆச்சரியப்படும்படியாய் இருக்கிறது. தற்கால உயர்ந்த ஆயுதங்கள் கூட இந்தக் கல்லை சொற்பமேனும் கொத்த உதவாததாக இருப்பதை உத்தேசிக்க அவ்வளவு கடினமான கல்லில் இவ்வளவு வடிவமாக உண்மையான பிம்பத்தைக் கொத்த யெவ்வளவு விசேஷ கூர்மையான ஆயுதங்கள் உபயோகப்படுத்தியிருக்கவேண்டுமென்று தெரிகிறது.

இவ் வாயுதங்கள் வெங்கலத்தாற்றான் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று சில சாஸ்திரிகள் சொல்லுகிறபடியால் வெண்கலம் இவர்களுக்கு எவ்வாறு கிடைத்தனவென்று யோசிக்குமிடத்தில் பின்வருமாறு கிடைத்திருக்கலாமென்று சாஸ்திரிகள் நிச்சயப்படுத்துகினறார்கள். அதாவது வெண்கலமானது தாம்பிரமும் தகரமும் சேர்ந்த கலப்பு லோகம் அதில் தாம்பிரமானது அவர்கள் தேசத்திலேயே கிடைக்கக்கூடியது. தகரமானது உலகத்தில் இங்கிலாந்தில் சிலபாகத்திலும் ஆஸ்டிரேலியாவிலும் மலாகாவிலும் சொற்பமாகத்தான் கிடைக்கக்கூடியது. இதில் மலாக்காவிலிருந்து கடல் மார்க்கமாய் இந்தியாவிற்கு வந்து அங்கிருந்து வியாபாரிகளால் எகிப்திற்கும் கால்டியாவிற்கும் கொண்டுபோகப்பட்டதாய்த் தெரிகிறது. இதைப்போலவே தென்னிந்தியாவிலுள்ள மலையாள தேசத்தின் மலைகளில் மாத்திரம் அகப்படும், தேக்கு மரமானது இவ்வளவு தூரத்திலிருந்து அவ்வளவு தூரத்துக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும் சிந்து என்னும் இந்தியர்களின் மஸ்லியன் துணி எகிப்தின் மத்திய பாகங்களில் உபயோகப்பட்டதாகவும் தெரிகின்றது.

இவ் விசேஷ நாகரீகம் பெற்ற எகிப்தியர்களுடைய மதமானது அவர்களுடைய மற்றச் சாஸ்திரங்கள் எவ்வளவு உன்னத விருத்தியடைந்திருக்கிறதோ அதைப்போலவே உயர்ந்த நல்லொழுக்க விதிகள் அடங்கிய சாஸ்திரங்கள் உள்ளதும் மந்திர சாஸ்திரம் ஜோதிட சாஸ்திரம் போன்றவைகள் அடங்கியதாகவுமிருக்கின்றது.

அவர்கள் பிரபஞ்சத்தின் பெரிய கேள்விகளான பிரபஞ்ச உற்பத்தி பாவ புண்ணிய உற்பத்தி மனிதனுடைய உற்பத்தி அவன் இறப்பிற்குப் பின்வரும் ஜீவன், போன்ற பல வினாக்களைக் கேட்டு அது விஷயமாய் விவரித்துத் தர்க்கித்து தற்காலத்தில் நிலைபெற்றிருக்கும் உயர்ந்த ஜாதியார்களின் விசேஷ கீர்த்திபெற்ற உன்னத புத்தியுள்ள சாஸ்திரிகள் எவ்வளவு புத்தி நுட்பத்தோடு விவகரித்து விசாரிக்கிறார்

களோ அவ்வளவு விஸ்தாரமாய் அக்கேள்விகள் விசாரிக்கப்பட்டிருக்கிறது. அதோடு நீதிநூலும் விசேஷ விருத்தியும் உன்னதமும் அடைந்திருந்ததாகத் தெரிகின்றது.

இவர்களின் தெய்வ விசுவாசம் மத நம்பிக்கை அவர்களின் ஒவ்வொரு தொழில்களிலும் காட்டப்பட்டனவென்பது நிச்சயம். தெய்வ விசுவாசம் இராஜ விசுவாசம் மேலானவர்களுக்குப் பணிவு கீழானவர்களுக்குத் தயை இரக்கம் எத் தொழிலும் வாய்மை எம்மொழியிலும் மெய்மை போன்ற நல்லொழுக்க விதிகளை அனுசரிக்கக் காரணம் இவர்கள் மதத்தில் வைத்திருந்த விசேஷ நம்பிக்கை தான். ஒவ்வொருவனும் இறந்தவுடன் அவனுடைய ஜீவன் பிரிந்த ஸ்தூல சரீரமும் அத்தோடு சேர்ந்த (கா) (கேவா) என்னும் பூத சரீரமும் அவனுடைய கல்லறையில் வைக்கப்பட, அவனுடைய ஆத்துமாவானது ஆஸிரிஸ் என்னும் தெய்வத்திற்கு முன் கொண்டுபோகப்பட்டு, அங்கே அவனுடைய பாவ புண்ணியங்களைப்பற்றி விசாரிக்கப்படுகின்றது. புண்ணிய மிகுந்தவிடத்து சுவர்க்கமும் பாவ மிகுந்தவிடத்து நரகமும் அவனுடைய ஆத்துமாவுக்கு விதிக்கப்படுகின்றது. வேறே எந்த ஜாதியார்களாவது இவர்களைப்போல உடலை விட்டு ஆவி பிரிந்த பின், ஜீவன் பின்னும் நிலைபெற்றிருக்கிறதென்ற ஸ்திரமான நம்பிக்கை வைத்தவர்களல்லர். அந் நம்பிக்கையானது அவர்களின் நித்திய விவகாரத்திலும் தொழில்களிலும் அனுசரிக்கப்பட்டுவந்ததாகவும் இல்லை. தற்கால ஜாதியார்களில் உயர்ந்த நாகரிகம் பெற்றிருக்கும் ஜாதியார்களுக்குள் இந் நம்பிக்கை எவ்வளவு வளர்ஜதம் பெற்றிருக்கிறதென்று நமக்கு நன்றாய்த் தெரியும்.

பின்னும் ஜோதிட சாஸ்திரம் விசேஷ விருத்தியை அடைந்திருந்ததால் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையானது நக்ஷத்திர கிரக பலன்களால் யேற்பட்டதென்றது இவர்களுடைய நம்பிக்கை. இதற்கு நமக்குள் வழங்குவதுபோல ஜாதகங்களும் மற்றக் கணக்குகளும் ஏற்பட்டிருந்தன. ஒருவன் பிறந்த நேரம் லக்கினம் இவைகளைக்கொண்டு அவனுடைய அதிர்ஷ்ட பாவம் முதலானவைகளைக் கணக்கிடலாமென்பது இவர்களின் கொள்கை.

இவர்களுடைய மதசம்பந்தமான விஷயங்கள் நமக்கு, இவர்கள் எழுதியிருக்கும் சித்திரங்கள் மூலமாயும் கொத்தியிருக்கும் பிம்பங்கள் மூலமாயும் தெரிவதுடன் மதப் புஸ்தகங்களில் முக்கியமானதும் பண்டைக்காலம் தொட்டு வந்ததுமான இறந்தவர் புஸ்தகமென்ற (Book of the Death) னலிருந்தும் தெரிகிறது. கி. மு. 4000-ம் வருஷங்

களுக்கு முன்னமேயே இந் நூல் வெகு பிரபலமடைந்திருந்ததாகத் தோன்றுகிறது. தற்காலத்தில் பைபிளிலிருந்து கல்லறை மேற் கல்லில் எவ்வாறு வாக்கியங்களை யெடுத்துக் கொத்திவைக்கிறோமோ அதைப்போலவே எகிப்தியர்களின் ஒவ்வொரு பிரேதப்பெட்டியிலும் இந்த பிரமிட்களின் உள்ச்சுவர்களிலும் வாக்கியங்களும் வாக்கியங்களடங்கிய அத்தியாயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இந் நூலில் மந்திர சாஸ்திர விசேஷமாய் விஸ்தரிக்கப்பட்டு அநேக மந்திரங்களும் மந்திர விதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பாப்பையர்ஸ் காகிதங்களில் யெழுதிவைத்திருக்கும் சரித்திரங்களில் சில முக்கிய பாகங்கள் மந்திர சாஸ்திரங்களைச் சேர்ந்தவைகளாயிருக்கின்றன. 2-வது ரமீஸிஸ் 3-வது ரமீஸிஸ் இவ் வரசர்களின் காலத்தில் அவர்கள் முன் நடத்திய சில மந்திர வேலைகளைப்பற்றி ஆரிஸ் (Harris) பாப்பையர்ஸ் காகிதத்தில் விவரம் சொல்லியிருக்கிறது. இந்தக் காகிதமானது கி. மு. 1500 வருஷத்திற்கு முன் அதாவது கி. மு. 15-ம் நூற்றாண்டில் 5 வது ரமீஸிஸ் அரசன் காலத்தில் தவுட்மீஸ் (Toutmese) என்னும் எழுத்துக்காரனால் யெழுதப்பட்ட விவரங்களாகயிருக்கின்றன. அதில் சொல்லியிருக்கப்பட்டதாவது:— ஒரு மந்திரவாதியால் ஒரு (கோள்) என்ற பூதமானது தண்டிக்கப்பட்ட விதத்தைச் சொல்லியிருக்கின்றது. மந்திர ஸ்தாபனத்தால் ஒரு இடத்திற்கும் செல்லவொட்டாதபடி அந்தப் பூதத்தை ஒரே இடத்திலேயே ஸ்தாபித்துவிட்டாளும். இந்தியாவில் இந்துக்கள் இந்த சரீரத்தைப் பூத சரீரமென்றும் சீனாவில் ஆயென் (Hauen) என்றும் சொல்லுகின்றார்கள். இந்தப் பாப்பையாஸ் என்பது வழுவழுப்பான மெல்லிய தோல்போன்ற ஒரு செடியிலிருந்து எடுக்கப்பட்ட லேசான பட்டை. இவைகள் சற்றேறக்குறைய 40 அடி நீளம் வரை இருக்கின்றது.

தீப்ஸ் பட்டணத்தில் தோண்டியெடுக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகசாலையில் அகப்பட்ட பாப்பையரஸ்கள் தர்ம சாஸ்திரம், மதம், வைத்தியம், ஜோதிடம், பஞ்சாங்கம், காவியம், கதை இவை போன்ற புத்தகங்கள் அடங்கினவைகளாக யிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை குனியம்போன்ற துர் மந்திரங்களை விலக்க யேற்பட்ட மந்திர விதிகளாக இருக்கின்றன. ஆரிஸ் பாப்பையர்ஸ் என்னும் காகிதம் 1885-ம் வருஷத்தில் தீப்ஸ் என்னும் பட்டணத்திலிருந்து வாங்கப்பட்டு 1860-ம் வருஷத்தில் சாப்ஸ் (Chabbas) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டது. அது சுமார் 2800, 3000-ம் வருஷங்களுக்கு முன்னுள்ளது.

இதிலொன்றில் கேன என்ற பூத சரீரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதை சாப்ஸ் சொல்லியிருக்கிறார். இவைகள் உயிரோடிருக்கும் மனிதர்களின் திரேகத்திற்குள்ச்சென்று நிலைபெற்று அவர்களைப் பலவிதமாய் இம்சிக்கிறதாகவும் அவைகளை விலக்க அநேக மந்திரங்களும் ரக்ஷைகளும் இருக்கிறதாகவும் அந்த ரக்ஷைகளாவது சில தெய்வங்களின் பிம்பங்களைச் செய்து அப் பிம்பங்களை மந்திர ஜெபங்களில் வைக்கப்பட்டனவாக இருக்கிறதாகவும் இதில் முக்கிய தெய்வமான கோன்ஸ் (Chons) என்னும் தெய்வத்திற்கு விசேஷ சக்தி யிருக்கிறதென்றும் இந்த (கேன) என்ற பூதமானது இவ்விதம் விலக்கப்பட்டால் வேறே ஒரு சரீரத்தில் புகுந்துகொள்ளுகிறேனென்றும் சொல்லிப் போய்விடுகிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் துர் மந்திரங்களை அப்பியசிக்கும் மந்திரவாதிகள் கண்டுபிடிக்கப்பட்டு தெண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் தெண்டித்த நியாயாதிபதியின் எழுத்தாவது:—

இந்தத் துர் மந்திரவாதி வெகு துஷ்டன். ஆடுகாக்கிறவனா யிருந்தான். அவன் எனக்கு விசேஷ மந்திர சக்தி கொடுக்கக்கூடிய புஸ்தகம் தனக்குக் கிடைக்கவேண்டுமென்று அபேக்ஷித்தான். பெரிய தெய்வம் ஒன்றை உச்சாடனம் பண்ணக்கூடிய ரமெசிஸ் ஆமென் (Ramses-Amen) மந்திரமடங்கிய ஒரு புஸ்தகம் அவனுக்குக் கிடைத்தது. அப் புஸ்தகத்தின் மூலமாய் அவன் அப்பியசித்ததில் அவனுக்கு மனிதர்களை மயக்கும் சக்தி கிடைத்தது. அவன் இந்த மந்திர சக்தியால் கேன் (Khen) என்று சொலலப்படும் இரகசிய சாஸ்திரங்களடங்கிய அரண்மனைப் புஸ்தகசாலையிலிருந்து அதை மேற்பார்த்துக்கொண்டிருந்த ஒருவனை விலகும்படி செய்து மற்றவர்களை மயக்கி ஆதிர்மா (Atirma) என்னும் கற்தச்சனைச் சில நூல்களைத் திருடும்படி செய்து அவைகளைத் தான் அபகரித்துக்கொண்டான். அதிலிருந்து வரும் காலத்தை அறிய முயன்றும், அந்தச் சக்தியிலும் தேர்ச்சியடைந்தான். அவன் மனதில் தோன்றிய துற்கிருத்தியங்கள் எவ்வளவோ அவ்வளவையும் அவன் செய்யத் தொடங்கித் தெய்வங்களும் பதரும்படி அவ்வளவு துர்வேலைகளைச் செய்ய அவனுக்குச் சக்தி யேற்பட்டது. ஒரு கையைப்பார்த்து இந்தக் கைக்குப் பக்கவாதம் வரட்டுமென்று சொல்வான். உடனே பக்கவாதம் வந்துவிடும். இவ்வாறு அநேக கொடுமைகளைச் செய்து வந்தான். இவனைச் சோதித்த நியாயாதிபதிகள் அரசனின் உத்தரவாலும் தெய்வங்களின் ஆஞ்ஞையாலும் இவனைக் கொலைசெய்துவிட வேண்டுமென்று உத்திரவளித்தார்கள்.

சாப்ஸ் (Chabas) விக்கிரஹாராதனையைப் பற்றி எழுதியிருக்கும் புஸ்தகத்தில் மெய்மானடிஸ் (Maimonadis) என்பவர் சொல்லுகின்றார்:— தற்காலத்தில் இட்டாலியிலிருக்கும் கிறிஸ்தவ மந்திரவாதிகளும் அமெரிக்காவிலுள்ள நியூ ஆர்லியன்ஸிலிருக்கும் நீக்ரோ வூடூக்களும், (Voodoos) எவர்களுக்குத் தீமை செய்ய வேண்டுமென்று உத்தேசிக்கிறார்களோ அவர்களைப்போல சிறு மெழுகு உருவங்களைச் செய்து அவைகளை ஊசியால் குத்துகிறார்கள். அந்தக் காயமானது ஜீவித்திருக்கும் மனிதன்மேற் தாவி அக் காயத்தால் அவன் இறந்து விடுகின்றான். இப்படி அநேகர் இறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி உச்சாடனம் பண்ணப்பட்ட உருவங்கள் மனிதர்களோடு பேசினதாகக்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது.

கிரீக், ரோமன் தேசத்து சாஸ்திரிகளான பிண்டாரஸ் (Pindarus) ஸிஸரோ (Cicero) பிலேட்டோ (Platoe) பாஸாநியாஸ் (Pausanias) ஸ்டிராபோ (Strabo) டையோடோரஸ் (Diodorus) போன்ற அநேகர்கள் இந்த உபதேசத்தின் பெருமையை வெகு விசேஷமாய்ச் சொல்லுகின்றார்கள். தேலீஸ் (Thales) எம்பிடோகிளிஸ் (Empedocles) ஆர்பஸ் (Orpheus) பைதோகோரஸ் (Pythogoras) இவர்களெல்லாம் எசிப்து தேசத்திற்குப் போய் அவ்விடத்திய இரகசிய சபையைச் சார்ந்தவர்களிடம் பிரபஞ்சத்தின் உற்பத்தி போன்ற தத்துவ விசாரிப்புப் பயின்றதாகத் தெரிய வருகிறது. பைலோ (Philo) என்பவர் சொல்லுகின்றார்:— பிரபஞ்சத்தின் மறை பொருளைக் காட்டக்கூடியது எசிப்தின் மிஸ்ட்ரீஸ் (Mystries) என்னும் இரகசிய சபைதான். இந்துக்கள், எகிப்தியர்கள், கால்டியர்கள், கிரீக்கர்கள், பினீஸ்யர்கள், இவர்களைச்சேர்ந்த சாதுக்கள் எல்லாம் தங்கள் தங்கள் இரகசிய சபைகளைத் தொண்டுதொட்டு உண்டாக்கிக் கொண்டுவந்தார்கள். எசிப்து தேசத்துச் சாதுக்களின் இரசிய சபையைப்பற்றிச் சமீபமாய் எழுதிய ரேகன் (Ragon) என்பவர் சொல்லுகின்றார்:— இந்துஸ்தான், பேர்ஷியா, சீரியா, பிரஷியா, கால்டியா, சைடோனியா பாபிலோனியா முதலான தேசங்களிலுள்ளவர்கள் பிரபஞ்சத்தின் இரகசியங்களைப்பற்றி எவ்வளவு அறிந்திருந்தார்களோ அவ்வளவு எசிப்து தேசத்து இரகசிய சபையாரும் அறிந்திருந்தார்கள். ஆகையால் இந்தியாவின் தத்துவ சாஸ்திரமானது கால்டியாவிற்கும் பேர்ஷியாவிற்கும் பரவி அங்கிருந்து எசிப்து தேசத்து இரகசிய சபையாரின் கொள்கைகளுக்குக் காரணமாயிற்று. இவ்விதமாக இந்தியாவிலும், எசிப்திலும், கால்டியாவிலும், கிரீஸிலும், ரோமிலும், இந்த இரகசிய சபைகள் விருத்தியடைந்திருந்

தை. பிளேட்டோ [Platoe] யூருப்பிடிஸ் [Eurupedes] ஸாக்ரடிஸ் [Socratis] அரிஸ்டோபோனிஸ் [Aristophanes] பின்டார் [Pindar] புளுடார்க் [Plutarch] டையோடோரஸ் [Diodorus] ஸிஸிரோ [Cicero] இபிக்டேடஸ் [Epectetus] மார்கஸ் [Marcus] அரேலியஸ் [Auralius] போன்ற இச் சபைகளில் உபதேசம் பெற்றவர்களும் உபதேசம் பெருதவர்களுமான அநேகர்கள் இச் சபைக்குப் பெருமையளித்ததற்குக் காரணம் இச் சபைகளின் மகுத்துவத்தாற்ருன்.

பைதகோரஸ் என்னும் கிரீக் தத்துவசாஸ்திரி எகிப்தியிருந்த கோவில்களில் 25 வருஷம் வரை செலவிட்டும் பாபிலன் சென்று பார்ஷியர்களிடம் அநேகம் கற்றும் மந்திர சாஸ்திரத்தில் விசேஷ விற்பன்னரானதால் சாதாரண ஜனங்கள் நம்பக்கூடாததுமானவும் மனித சக்திக்கு மிஞ்சினதுமானவும் அநேகம் வேலைகளைச் செய்து வந்ததாக அவருடைய சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சீன தேசத்தில் மனித சஞ்சாரமில்லாத மலைகளிலும் குகைகளிலும் வாசம் செய்கிற ஸியு [Shew] கேயே [Kuiay] என்ற சாதுக்களுக்கு அநேக அற்புத சக்திகளிருக்கின்றனவாம். சாதாரண ஜனங்கள் அவர்களைத் தங்கள் தேசத்தைக் காக்கிறவர்களாகச் சொல்லுகின்றார்கள். அபாய காலத்தில் சக்கிரவர்த்தியாவது அல்லது அவருக்குக் கீழ் இருக்கும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களாவது மாத்திரம் இவர்களிருக்குமிடந் தெரிந்து போகக்கூடும். அந்தக் காலத்தில் அவர்கள் வரும் விபரங்களைச் சொல்லுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் போலவே திபெத் தேசத்திலும் சில சாதுக்களிருக்கின்றார்கள். [Independent Tartary] டார்ட்டாரியும், திபெத்தும் அயல் தேசத்தார் உட் செல்லாதபடி வெகு கவனமாய்க் காக்கப்பட்டு வருகிறது. இப்படிப் போகும்படி உத்திரவு கொடுக்கப் பெற்றவர்களோடு சில காவற்காரர்களையும் அனுப்புகின்றார்கள். அப்படி அனுப்பும்போது தாங்கள் பார்க்கும் இடங்களையாவது ஜனங்களையாவது மற்றவர்களுக்கு வெளியிடுகிறதில்லை யென்ற வாக்குறுதியை வாங்கிக்கொள்கின்றார்கள்.

அக் காலத்திற்கும் தற்காலத்திற்கும் விசேஷ வித்தியாசம் ஏற்பட்டுவிடவில்லை. மந்திர அனுசரணையில் விசேஷ வித்தியாசங்கள் ஒன்றும் ஏற்பட்டதாகவும் இல்லை. முன் எவ்வளவு இரகசியமாய் வைக்கப்பட்டிருந்ததோ அவ்வளவு இரகசியமாய் தற்காலத்திலும் இருக்கிறது.

ப்ரயாணிகள் எவ்வளவுக் கெவ்வளவு அறிய வேண்டுமென்று முயலுகின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு இரகசியமாய் வைக்கப்படுகின்றன. ஹியங் தசாங் [Hiouen Thesang] என்பவர் இந்த ஜனங்களைப்பற்றிச் சொல்லுகிறார். மந்திர சாஸ்திரத்தின் அநுசரணை இவர்களுக்கு ஒரு ஜோலியாக ஏற்பட்டிருக்கிறது. மார்கப்போலோ என்பவரின் சரித்திரத்தை மொழிபெயர்த்தெழுதின கர்னல் யூல் [Col. Yule] சொல்லுகின்றார். தார்த்தரி தேசத்தையும் திபேத் தேசத்தையும் போய்ப் பல காலங்களிலும் பார்த்தவர்கள் கண்டு எழுதி வைத்திருக்கிற மந்திர வேலைகளை ஆலோசிக்குமிடத்துத் தற்காலத்தில் ஸ்பிரிச்சுவலிஸ்ட் [Spiritualist] என்று வழங்குவர்களின் தொழில்கள் எல்லாம் அவர்களுக்குச் சர்வ சுலபமான வேலை யென்று நினைக்க வேண்டியதா யிருக்கிறது. டியூ ஆல்டி [Duhalde] என்பவர் சொல்லுகின்றார். அவர்களுடைய விசேஷ வேலையில் இரண்டொன்றுவது:—லோட்சு [Luotseu] என்பவரின் பிம்பத்தை மந்திர சக்தியால் ஆகாயத்தில் தோன்றும்படி செய்கின்றார்கள். ஒரு பென்சிலைக் காகிதத்தின்பேரில் வைத்துவிட்டு நாம் பல கேள்விகளைக் கேட்க அப் பென்சிலானது ஒருவரும் அதைத் தொடாமல் நாம் கேட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதுகின்றது. இப் பென்சில் இவ்வாறு எழுதுகிறது சீன தேசத்தார்க்குள்ளும் அதன் பக்கத்துத் தேசத்தாக்குள்ளும் விசேஷ வித்தையல்ல. இதுதான் மந்திர சாஸ்திரத்தில் ஆரம்பம்.

ஒரு சமயம் ஹியந்திசான் புத்தருடைய பிம்பத்தைக் கண்டு தரிசித்து வணங்கப் பிரியங்கொண்டு அது காணக்கூடிய இடமாகிய ஒரு பயங்கரமான குகைக்குட் சென்று தன் ஜெபத்தை ஆரம்பித்தார். 100 ஜெபம் செய்தும் ஒன்றும் தோன்றவில்லை. உடனே தான் மிகப் பாவி யென்று நினைத்து மனங் கலங்கி துக்கித்தார். பின் தனக்குக் கிட்டாதென்று நினைத்து வெளியிற் செல்ல ஆரம்பித்த சமயத்தில் கீழ்ச் சுவரில் ஒரு வெளிச்சம் தோன்றிற்று. உடனே தைரியங்கொண்டு பின்னும் தன் ஜெபத்தை ஆரம்பித்தார். பின்னும் அந்த வெளிச்சம் தோன்றி மறைந்தது. பின்னே இந்தத் தேஜஸ்ஸை முழுதும் பார்த்து ஆனந்தித்தாலொழிய தான் அந்தக் குகையை விடுகிறதில்லை யென்ற வைராக்கிய விரதத்தைக்கொண்டு பின்னும் ஜெபத்தை ஆரம்பித்தார். பின்னும் அநேக நேரம் கழித்து 200 ஜெபமானபின் திடீரென்று குகை முற்றும் வெளிச்சமாயிற்று. உடனே அந்தச் சுவரில் புத்தருடைய பிம்பம் வெள்ளையாய்த் தோன்றி பிம்பம் முழுதும் திவ்விய தேஜஸாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஹியந்திஸான் [Hiounthsang] ஆச்சரியத்திலும் ஜெபத்திலும் மூழ்கியிருந்து அந்தத் தேஜஸ் ஒளியிலிருந்தும் தன் பார்

வையை எடுக்காமலிருந்தார். பின்னர் அவர் டைரியில் எழுதுகிறதாவது:— மனப்பூர்வமான விசுவாசத்தோடு ஜெபித்தாலொழிய இந்தத் தோற்றத்தைப் பார்க்க முடியாது இது நிட்டம். [Max Muller Buddhist Pilgrims.] பின்னும் இந்த டார்டரி [Tartary] தேச முழுவதும் மத தத்வ சாஸ்திரிகளாகவும் புத்த சாஸ்திரிகளாகவும் மந்திர சாஸ்திரிகளாகவும் இருக்கிறார்கள். நமது கண்ணிற்குப் புலப்படாதபடி சூக்ஷ்ம சரீர வாசிகளாக அநேக ஜீவன்கள் ஆகாயத்தில் வசிக்கிறதாகவும் சில சமயங்களில் நமது கண்ணிற்குத் தோன்றும்படியாக அவைகள் வருகிறதாகவும் என்பது அவர்களின் கொள்கைகளில் ஓர் முக்கிய கொள்கை.

மத்திய ஆசியாவில் வசிக்கின்ற அநேக ஜாதியார்கள் பூமியிலும் ஆகாயத்திலும் இவ்வித ஜீவன்கள் அநேகம் வசிக்கின்றனவென்றும் அவைகளிற் சில நமக்கும் மற்றத் தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் நன்மைபய விளைவிக்கக் கூடியவைகளென்றும் சில தீமைபய செய்கின்றவைகளென்றும் முக்கியமாய்ப் பாலைவனங்களிலும் ஜன சஞ்சாரமில்லாத இடங்களிலும் பொதுவாக வேற்கை மிக்கப் பயங்கரமாகயிருக்கும் இடங்களிலும் இந்த ஜீவன்கள் வசிக்கின்றனவென்றும் ஆகையாறஞன் டிரூரான் [Drurun] மைதானத்திலும் கோபி பாலைவனத்திலும் முக்கியமாய் இவைகள் வசிக்கின்றனவென்றும் நம்புகிறார்களென்று ஐ. ஜே. ஷ்மிட் [I. J. Schmidt] எழுதுகின்றார். மிசீநாவில் [Mycena] டாக்டர் ஷ்லீயம் [Schliem] என்பவரால் தோண்டி எடுக்கப்பட்ட புதையல்கள் அநேகர்களுடைய ஆசையைத் தூண்டியிருக்கின்றது. சீனமாய்ப்போன ஒரு பெரிய ராஜ்யம் கீழே புதைந்திருப்பதாகவும் அக்காலத்திலிருந்த திரவியங்களெல்லாம் குகைகளிலும் நிலவறைகளிலும் மணலின்கீழும் புதைந்து கிடப்பதாக நம்பப்பட்டிருக்கிறது. கோபி பாலைவனத்திலுள்ளதுபோல் அவ்வளவு நம்பிக்கை வேறே ஒரு இடத்தைப்பற்றியுமில்லை. பெருவைப் பற்றிக்கூட இல்லை. டார்ட்டரி பூராவும் மணலால் மூடப்பப்பட்ட ஒரு பாலைவனம். அது உலகத்திற் பெரிய செல்வம் நிரம்பிய ராஜ்யமாக இருந்து அழிந்துபோன இடமாக ஜனங்களின் நம்பிக்கை. தற்காலத்தில் எந்தப் பெரிய நகரத்திலும் நம்முடைய நாகரிகமும் செல்வமும் உண்டாகக்கூடாத அவ்வளவு தங்கமும் ஆபரணங்களும் பிம்பங்களும் பாத்திரங்களும் புதைந்து கிடக்கிறதாக நம்புகிறார்கள். இந்தப் பாலைவனத்தில் மணலானது பெரும் சூர்காத்துக்கள் அடிக்கும்போது கிழக்கிலிருந்து

மேற்காகச் சுற்றுகின்றது. இப்படியடிக்கிறதால் சில வேளைகளில் புதைந்து கிடக்கும் புதையல்கள் வெளியாகின்றன. இதைக் கண்டவர்கள் இம மந்திரத்தில் அகப்பட்டதென்று இதைத் தொடக்கூட மாட்டார்கள். தொட்டால் அதற்கு இறப்புதான் தண்டனை. பயங்கரமான பூதங்கள் இப் புதையல்களைக் காத்துக்கொண் டிருக்கின்றனவென்றும் இச் சனங்களின் சரித்திரத்தையும் புதையல்களையும் வெளியிடக் காலம் வருமென்றும் இவர்கள் நம்பியிருக்கிறார்கள். ஸ்காண்டிநேவியாவில் ஒடின் என்னும் ராஜாவும் குருவுமாயிருந்து மந்திர சாஸ்திரத்தை உற்பத்தி பண்ணினதாக சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அது அவ்வாறல்ல. அவருக்கு முன்னமேயே வாலஸ் (Voilers) என்னும் பெண் பிள்ளைகள் இந்தச் சாஸ்திரத்தில் பழகினதாகத் தெரிகின்றது. அமெரிக்காக் கண்டத்தில் மெக்ஸிகன் ஜாதியார் இந்தச் சாஸ்திரங்களை விசேஷமாய் அறிந்து அனுசரித்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் சாதுக்களும் மந்திரீகர்களும் உபதேசம் பெரும் நிலவறைகளும் இருந்திருக்கின்றன. சமீபமாய்த் தோண்டியெடுக்கப்பட்ட 2 பிம்பங்களில் ஒன்று இந்துக்களின் சன்னியாசி ஆசனம் போட்டிருக்கும் ஒரு மெக்ஸிகன் சாதுவாகவும் மற்றொன்று இந்துக்களின் பெண் தேவதை தலையில் வைத்திருக்கும் கிரீடம் போல் ஒரு கிரீடத்தை வைத்திருக்கும் பெண் குரு உபதேசியாகவும் இருக்கின்றது. ஸபானிஸ் தேசத்தார் மெக்ஸிகோவை ஜெயித்த போது அவர்களை நடத்தின (Cotez) கார்டேஸ்லோடு சென்ற பேர்னுடு (Bernard-Diaz-de-Castella) அவர்களுடைய நாகரீகத்தையும் மூளைத் திறமையையும் புத்தி நுட்பத்தையும் விசேஷமாய்ச் சொல்லுகின்றார். இவர்களும் எகிப்தியர்களைப்போல் அதே சாஸ்திரங்களை அனுசரித்துப் பிரமிட்களைக் கட்டியிருக்கின்றார்கள்.

எகிப்து தேசத்தைச் சேர்ந்த (Books of Hermes) எர்மிஸ் புஸ்தகங்கள் என்று வழங்கும் புஸ்தகங்கள் (Hermes Tres-majestus) என்பவரால் எழுதப்பட்டவைகள். எகிப்தியரின் மத சம்பந்தமான புஸ்தகங்கள். எகிப்தியரின் 42 மதப் புஸ்தகங்களில் இவை ஒரு பாகந்தான். இப் புஸ்தகங்களில் உள்ள இரகசியங்கள் கால்டியா, இந்தியா, பெர்ஷியா, மத்திய ஆசியா இத் தேசங்களில் வசித்த ஜாதிக்காரர்களின் இரகசியங்களோடு ஒத்திருக்கின்றன. டைகிரீஸ் நதிக்கரை ஓரமாய் மோசலிற்கு சமீபமாய் கோயன்ஜிக் (Kounjik) கில் ஒரு பெரிய மண் திரட்டை லேயார்டு (Layard) என்பவர் அழிந்துபோன நீநிவே (Nenevah) பட்டணமிருந்த இடமென்று கணக்கிட்டு வெட்டிச் சோதித்ததில் கி.மு. 650-ம் வருஷத்தில் ஆண்ட ஆஸிரியா தேசத்து ஒரு பெரிய அரசனும் சினகிரிப் (Senacherib) அரசனின் பேரனுமான

அசுர்பானிபால் (Assurbanipal) அரசனுடைய அரண்மனையும் அதைச்
சேர்ந்த புஸ்தகசாலையும் அகப்பட்டது. அப் புஸ்தகங்கள் கொஞ்சமே
னும் அழிவில்லாமல் இருந்தன. அவைகள் காகிதங்களிலாவது தோலி
லாவது எழுதப்பட்டவையல்ல. களிமண்ணால் சிறு குழாய்களைச் செய்து
அவைகள் மேல் அம்பு முனைபோலுள்ள எழுத்துக்களால் எழுதி பின்
அவைகளை இலேசான தீயால்ச் சுட்டு வைக்கப்பட்ட குழாய்கள் இப் புஸ்
தகசாலையிலிருந்து ஏராளமாய் அகப்பட்டன. கி. மு. 2000 வருஷத்
துக்கு முன் 2-வது சார்கனால் ஸ்தாபிக்கப்பட்ட இன்னொரு புஸ்தகசாலை
சமீபமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. அதிலுள்ள புஸ்தகங்கள் ஏரிக் பட்ட
ணத்திலுள்ள (Erech) புரோகிதர்களைச் சேர்ந்த புஸ்தகசாலையிலுள்ள
வை. இவைகளைத் தவிர நிப்பூர் (Neppur) என்னும் பட்டணம்
கி. மு. 6000, 7000 வருஷத்துக்கு முன் உண்டானது. அது அழிந்த
இடம் நப்பார் (Nuffar) என்னும் பட்டணத்தில் மணல்த் திரடுகள்.
இவைகளைத் தோண்டி ஹயினஸ் (Haynes) என்பவர் 26000 ஓடுகள்
வரை எடுத்திருக்கிறார். இவைகளில் அழிந்துபோன அக்கேடியன் சாஸ்
திரங்களின் மொழிபெயர்ப்புகளை அசிரியன் பாஷையில் எழுதிவைத்
திருக்கிறார்கள். இவைகளை எகிப்தர் பாஷையை எவ்வளவு திட்டமாய்
வாசிக்கின்றோமோ அவ்வளவு திட்டமாய் இந்த அசிரியன் பாஷையையும்
அக்கேடியன் பாஷையையும் வாசிக்க இப்போது கூடும். இவ் வோட்டுப்
புஸ்தகங்களிலும் குழாய்ப் புஸ்தகங்களி லிருப்பது மத சம்பந்தமான புஸ்
தகங்களாயும் சரித்திர சம்பந்தமான புஸ்தகங்களா யிருப்பதோடு முக்கிய
பாகம் ஜோதிட சாஸ்திரமாகவும் மந்திர சாஸ்திரமாகவும் இருக்கின்றன.
இவ்வாறு பாபிலோனியர், அசிரியர், பினிசியர், யூதர், சீனர், மெக்ஸிகர்,
பெருவியர், பெர்ஷியர், கிரேக்கர், ரோமர், மகம்மதியர் இவர்கள் எல்லாருமே
எவ்வளவோ நூற்றாண்டுகளாய் விசேஷ நாகரீகம் பெற்று நாம் ஆச்சரியப்
படும்படியான நிலைமையிலிருந்தவர்கள். இவர்களுடைய மதங்களை யெல்
லாம் கூர்ந்து பரிசோதிக்குமிடத்து இவைகளெல்லாம் மந்திர சாஸ்திரம்,
ஜோதிட சாஸ்திரம், யோக சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களடங்கிய
இரகசிய சாஸ்திரங்களை அனுசரித்த மதங்களாகவே இருக்கின்றன.
இதற்கு உதாரணமாக மிகப் பூர்வீகமாயுள்ள எகிப்தியர்களை விவரமாய்க்
கவனிப்போம். இவர்களுடைய பாஷையையும் நூல்களையும் சாஸ்திரங்
களையும் சித்திரவேலைகளையும் பிரமிட்டைப் போன்ற கட்டடவேலைகளையும்
நயில் நதியையே திருப்பக்கூடிய அணை வேலைகளையும் இவ்விதம் திருப்
பிய நதியை அநேக மைல் நீளமுள்ள பள்ளங்களில் நிறப்பி நடுநாட்டுக்குள்
சிறு கடல்கள் போல் நல்ல ஜலக்கடல்கள் உண்டாக்கிக்கொண்டு அவை
களைத் திறக்கவேண்டும்போது திறந்தும் அடைக்கவேண்டும்போது
அடைத்தும் செய்து வந்த விவசாயத் தொழில்களையும் யோசிக்குங்கால்
இவர்கள் என்ன உயர்ந்த நாகரீகத்தை அடைந்திருந்தார்களென்று ஆச்சரி

யமடைய வேண்டியதாயிருக்கிறது. இந்த நாகரீகத்திலும் மேற் சொன்ன இரகசிய சாஸ்திரங்களை அஞ்ஞானமென்றாவது நம்பத்தக்கதல்லவென்றாவது தற்கால நாகரீகம் பெற்றவர்கள் தள்ளுவதுபோல் தள்ளாதபடி மற்றச் சாதாரண சாஸ்திரங்களான வான சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், தாவர சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களுக்கு எவ்வளவோ மேலாக நினைத்து அவைகளை விசேஷமாய் அபிவிருத்தி செய்து அவைகளில் பரிசோதனைகளை நடத்தபிரமிட்களைப் போன்ற கட்டிடங்களைக் கட்டி அவைகளில் தேர்ச்சி யடைந்த சாதுக்களின் இரகசியக் கூட்டங்கள்கூட விநோதமான நிலவறைகளை அப் பிரமிட்டுகளுக்குண்டாக்கி தங்கள் மதத்திற்கே இச் சாஸ்திரங்களை ஜீவாதாரமாய்க் கொண்டுவந்தார்கள். இவ்வாறு ஜீவாதாரமா யிருக்கும் சாஸ்திரங்களை அப்பியசிக்க ஒழுக்க விதிகள் அத்தியாவசியம். ஒழுங்கீனமான மனிதர்கள் இச் சாஸ்திரங்களை அப்பியசிக்கின் அதன் இரகசியங்கள் அவர்களுக்குப் புலப்படா. அவைகளின் சித்திகளும் அவர்களுக்குச் கைகூடா.

மேற் சொன்ன ஒவ்வொரு ஜாதிக்காரர்களும் இந்தச் சாஸ்திரங்களைக் கைக்கொண்டவர்கள். ஒவ்வொருவர்களும் விசேஷ விருத்தியடைந்தவர்கள். இந்தியாவிலுள்ள இந்தியர்க்கும் சீனாவிலுள்ள சீனர்களுக்கும் எசிப்து தேசத்து எகிப்தியர்களுக்கும் அமெரிக்காவில் மெக்ஸிகர்களுக்கும் பெருவியர்களுக்கும் இந்தச் சாஸ்திரங்கள் எவ்விதம் கிடைத்தனவென்று ஆலோசிக்கும் இடத்து இவ்வாறு தான் கிடைத்தன வென்று புலப்படவில்லை. வியாபாரத் தொடர்ச்சியினாலாவது ஜனப் பழக்கத்தினாலாவது கிடைத்திருக்குமோ என்று நினைக்க மார்க்கமுமில்லை. ஏனென்றால் இவைகள் இரகசிய சாஸ்திரங்கள். இரகசியமாய் வைக்கப்பட்டவை. இவைகளைச் சார்ந்த சாதுக்கள் சாதாரணமாக வியாபாரிகளோடு சென்று ஆங்காங்குள்ள சாதாரண ஜனங்களுக்குச் சொல்லி வைத்திருப்பார்களென்பதுமில்லை. ஒருக்கால் இந்தியாவிலிருந்து சீனாவிற்கும் சீனாவிலிருந்து டார்ட்டரிக்கும் டார்ட்டரியிலிருந்து எசிப்திற்கும் போயிருக்கலாமென்று நினைக்க ஓர் மார்க்கமிருந்தாலும் கடக்கக்கூடாத கடல்களால் சூழ்ந்த அமெரிக்காக் கண்டத்திலுள்ள மெக்ஸிகோவிற்கும் பெருவிற்கும் எவ்விதம் கிடைத்ததென்பது கொஞ்சமேனும் யூகிக்கக்கூடாத விஷயம். ஆனால் நாம் இந்த ஜாதியார்களுக்கு எவ்வளவோ நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே இந்தச் சாஸ்திரங்களை அடைந்து இவைகளுக்கு ஆதாரமாக விசேஷ தத்துவ நூல்களையும் உண்டாக்கி நாகரீகம் பெற்றிருந்தவர்கள். நமது சாஸ்திரங்களின் ஒரு சிறு பாகத்துக்குக்கூடக் காணாது மற்றவர்கள் சாஸ்திரங்கள். அச் சாஸ்திரங்களெல்லாம் கால இயற்கையால் க்ஷீணமடைகின்றன.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம்புலி வாயையுங்
கட்டலா மொரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத் தாட்டலாம்
வெந்தழலி னிரதம் வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்திலும் புகுதலாஞ்
சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோமயானந்தமே.

இதிற் சொல்லியிருக்கிற விஷயங்கள் கொஞ்சமேனும் சாத்தியக்குறைவான வேலைகளல்ல. மேற்சொன்ன இரகசிய சாஸ்திரங்களை அப்பியசிக்கின் இவைகளின் சுலபம் தெரியும். சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கிற திறமரிது, என்று சொன்னபடி சிந்தையை அடக்க வேண்டியதற்கு ஏற்பட்ட விதிகளையும் அப்பியாசங்களையும் அனுஷ்டித்துச் செய்துவரின் அதிலிருந்தும் கைகூடும் விசேஷம் அநேகம். அவைகளை உத்தேசிக்க மேற் சொன்ன சித்திகளெல்லாம் எளிதானதாகவும் குறைவானதாகவும் தட்டுப்படும். இவைகளெல்லாம் போகும் வழியில் கிடைக்கும், சில்லரைத் தனங்களே யொழிய அந்தத்தில் அபேக்ஷித்துக் கைக்கொண்டு அடைய வேண்டிய பெருந்தனமல்ல. ஆகையால் நமது பெரிய சாஸ்திரங்களான மந்திர சாஸ்திரம். ஜோதிட சாஸ்திரம். யோக சாஸ்திரம். ஞான சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களை அப்பியசிக்கவும் அப்பியசித்தால் அவைகளின் அற்புதங்கள் கைகூடவும் வாயிலாகவுமுள்ளது ஒழுக்கம். அவ்வொழுக்கத்துக்குப் பிரதம நூல் திருக்குறள். இந்நூலின் விதிகளை வேதமாகக் கைக்கொள்ள மனந்திடங் கொடுக்கச் சர்வ வியாபகரைத் துதிப்போமாக.

———o———

SOCIAL REFORMS.

MR. PRESIDENT, LADIES AND GENTLEMEN,

It is my painful duty to express my sense of deep regret at the death of the Hon'ble Dewan Bahadur Regunatha Rao and the loss which our country and the cause of social reform have sustained by his death. The Hon'ble gentleman was one of the pioneers of social reforms in our Presidency and was a staunch advocate of widow re-marriage. He advocated reforms on Shastriac lines in order to carry people with him. His deep insite into Sastras enabled him to prove by quotations from them that widow marriage is allowable.

The subject assigned to me is so vast and the time so limited that this discourse contains no more than the reflections that force themselves on me and I have made no attempt even to touch the fringe of the overwhelming authorities Sastric and otherwise in support of my position. I deal more with the practical aspect of the question of social reforms than the theoretical.

Of all the blessings which the British rule and the contract with the occidental nations have bestowed on India social regeneration of the Hindus occupies the foremost place. There have been movements and activity in all directions industrial, educational, intellectual, scientific &c., but none of them have engrossed the attention of every true patriot of India more than the social evolution of its vast population. Princes, politicians, men of the highest position such as Judges have devoted and still devote their energies their money leisure &c., to the solution of some of the social problems with little success.

The existence of some of the social evils is a blot on the name of and disgrace to a nation and the removal must be the first object of every true lover of the land more than anything else. In my opinion the social question must claim the first attention of the Indians. Society must be placed on a sound basis, social evils which gnaw the vital organs and produce social cancers require remedial measures, social time honoured customs which have enslaved the Hindu nation require modification, social atrophy which have crippled the activity and the well-being of the Hindus requires the application of the reformers lancet, the gulfs dividing the hindu nation must be narrowed nay annihilated the jealousy, prejudices and pride which dominate in the major portion of the nation must give way to friendly rivalry, love and fellowship, these and a thousand and one social disabilities must be removed before the hindu nation can ever aspire with propriety and with self-respect to devote its attention to other matters calculated to raise a country to the level of other civilised countries. I assign the foremost place to social evolution because this is purely an automatic progress and the salvation must be worked out by the community itself, otherwise it runs the risk of being stagnant and no external aid will over come to it to raise it from its fallen position. It is in social matters that internal resistance and inertia are great. The society must be purged of the abuses that have crept into it the cancerous growth that has been sapping its vitality and the energy during hundreds and thousands of years and hindering its growth and development must be removed before it can be pronounced to be sound and fitted for the work of a nation. I may illustrate this by the case of individuals. A man with constitutional diseases or bodily infirmities is disqualified for the public service and private service. A student with an unsound body is not allowed by his parents solicitous for well-being of his son to prosecute his studies till health and vigor are restored till he becomes fit for the arduous task of a student. What is applicable

to individuals is equally applicable to nations. What I have attempted to do is to point out social reformation must precede all other reformations or at any rate keep pace with them. But what do we see as a matter of fact. We see the success achieved in social reform is far too disproportionate to the success achieved in other directions. In every Conference held discussions in social matters form part of the proceedings of the Conference and for elegance and eloquence of speech platform speakers are applauded, but when the question of converting words into action comes when the resolutions passed at Conference are to be carried out then the social reformer is confronted with insurmountable difficulties and the earnest reformer's work is handicapped and things move in the old groove, no further notice is taken of the resolutions passed and speeches made and this state of things continues from years' end to years' end with the result that pretty much the same things that existed thousands of years ago continue to this day. Contrast this with the activity and energy displayed in other movements. All without dissentient voice keep harping on a subject till the object is gained. I should not be understood as speaking disparagingly of zeal in other movements, but all that I say is that, beset with and labouring under social disabilities our first aim should be our emancipation from social evils, to remove the thraldom to which we are subject become free men and then direct our energy towards the attainment of other objects. To act otherwise is putting the carriage before the horse. Let us prepare ourselves for the task and responsibilities and prestige of a nation let us equip ourselves with those elementary social qualifications necessary to deserve the appellation nation, at least by removing the abuses that have crept into our societies before we enter heart and soul into our movements which as the day follows the night as the calm follows a tempest must follow your social elevation as a nation. So far as regards the prominent place that should be assigned to social problems.

SOCIAL QUESTIONS AND COMMON SENSE.

It is a matter for surprise that men of light and leading with wide intellectual calibre and capacity to solve intricate problems do not find or divise means to solve rudimentary social questions which appeal, only to our common sense. Sastric literature is ransacked, Sastric sanction is vainly sought for remedying evils which an appeal to our common sense and ordinary judgement convinces us are detrimental to our well-being and require to be eradicated, modified at once. But as one Calcuttah professor once said the greatest opposition in social reforms comes from the educated community. All the force of language is employed against any of the least reform. While the masses in their complete ignorance can be persuaded' by example though not by the tongue the educated man employs counter arguments and hurls them with great force at the social reformer. The ordinary people with many years of custom and heritage at their back too readily fall in with the views of the anti-reformer without ever taking the trouble to think for themselves. In fact they have been borrowing others' thoughts and had no thoughts of their own. Many of our social customs were created by mere chance or were the result of disparity of conditions in the mode of living or engendered by vocations allotted to castes. But when these conditions are changed when vocations have ceased to be the monopoly of castes it becomes us as men of common sense not to cling pertinaciously to those customs which are banefnl to the well-being of the society of the present day. There are axioms in sociology as in Geometry whose truth or absurdity is self evident that no proof is necessary. Let me illustrate this by examples: a tumbler of pure water brought by a low caste man cannot be tasted though he never touched the contents of the tumbler, but a bottle of soda water manufactured by low caste man when

brought by him may be freely tasted. Again taking the case of a member of the depressed class, as long as he is in the fold of Hinduism he is subjected to all sorts of social indignities. His touch or approach is a pollution. But no sooner he changes his faith and becomes a convert to Christianity or Mohomedanism, his status is at once raised and he is admitted to the previleges not doled to him while a Hindu. What does this show does not this argue want of common sense and is it not preposterous to look for Sastraic sanction for effecting a change? What opinion would be formed of a people who have not reformed themselves in this direction? Will not the rest of the civilised world think of us as an inconsistent nation and that such inconsistencies of character will permeate all our dealings? Here again I must reiterate what I have already said that I do not under value the efforts of those who with the best of intentions work for the amelioration of the lot of Indian people in directions other than social but that I want to show that the burning social questions should occupy a prominent place, nay the first place, in the deliberations of the Indian people.

Social Conferences of particular communities:-- Enough has been said in the proceeding pages to demonstrate that the uplifting of a nation depends upon the removal of social restrictions imposed by birth and upon the unification of different communities into one people to form a nation. But the order of the day is to hold Conferences not only of the people of Provinces and Districts but of particular sections such as Vyshia, Kshatria &c. These latter Conferences are much to be depricated and condemned, in that they defeat the object of social reformers. Such sectional Conferences no doubt lead to the safe guarding of the interest of particular community but they promote selfishness and widen the breach between this and other sections of the communities, who following suit assert their superiority to a degree higher than the first with the

result that the existing schisms become wider and wider Conference to be of use to the people at large must include within its scope the happiness and well being of all castes and creeds of Hinduism and be of a Cosmopolitan character. It is much to be regretted that national good and national welfare are not kept in view in determining the course of reforms.

SOCIAL REFORMS AND SHASTRAS.

Where the interests of particular castes and particular communities are not at stake Vedas and Shastras are invoked to accord sanction for departure from a course chalked out by custom and usuage. The Vedic and Shastric interdictions are at the present day set at naught and honored more in the breach than observance in many instances in our daily life. If the Indian people were to act in confirmity to the Vedic and Shastraic dictates, no Brahmin could hoard wealth which belonged to a Vysia nor could he be a Magistrate for which only Kshatrias are eligible. The Sudras must ever be content with menial service and his ambition should never soar above this abject service. The authority of the Vedas is ignored in matters like this where there is direct and strong prohibition it is therefore futile in small matters where there is only indirect tacit or supposed prohibition to look to them for sanction. Reason and the good of the nation must determine the forms to be adopted and we must approach the subject from a rational point of view.

Practical ways to carry out the Resolutions.

The subjects discussed at the several social meetings are:— 1. The abolition of Caste System. 2. Abolition

of Early Marriage. 3. Widow Re-marriage. 4. Female Education. 5. Abolition of Kannya Salkam and Vara Salkam. 6. Curtailing of Marriage Expenses 7. Encourage of Sea Voyage. 8. Reforms in Temple and Mutts. 9. Lifting up of Depressed Classes. 10. The Admissisn of Depressed Classes into Temples and other Places of Worship. 11. Establishment of Orphanages and Widows Homes. 12. Re-admission of Converts into Hinduism. Grouped according to their importance and the opposition and difficulty involved in the effecting of reforms they would be—first group:— 1. The Abolition of Caste System. 2. Widow Re-marriage. 3. Lifting up of Depressed Classes. 4. Admission of Depressed Classes into Temples. 5. Admission of Converts into Hinduism- Second Group:— 1. Abolition of Early Marriage. 2. Reforms in Temple and Mutts. Third Group. 1 Female Education. 2. Abolition of Kannya Salkam and Vara Salkam. 3. Curtailing of Marriage Expenses. 4. Encouragement of Sea Voyage. 5. Establishment of Orphanages and Widows Homes. As regards the third group though old practices have not wholly died out all resistance has disappeared and it is left to individuals to do as they please. It only requires systemmatic and combined efforts to make the changes complete and general. It is the first and second groups that have baffled all attempts at reform and improvement. Making allowance for stray instances here and there, I should say very little success has as yet been achieved so far as this Presidency is concerned. If we proceed to analyse the reasons for the deplorable results we shall see that the traits of human character which are answerable for the long continuance of the pernicious institutions and customs of the Hindus are still lingering in spite of the influences of western education and contact with the Western nations. It is the insatiable thirst of individuals and communities to wield sway over others and assert superiority. When this ascendancy has been secured by

birth human nature would not easily yield to influences tending to obliterate this. It is therefore useless to expect all people to move en-masse in this direction, and the action of individuals is visited with the terrible consequences such as excommunication and the seperation for ever from those near and dear to them. Only martyrs to the cause of social reforms having the weal of the nation at heart and sensible of the moral depravity of a nation and and injustice done to his fellow beings and having pluck and courage can be expected to effect reforms. The path is not easy but strewn with thorns and he who embarks on the perilous voyage must be helped by other sympathisers actuated by the same motives, so that a strong band be formed whose secession from the rest of the Hindus is necessary for carrying out their resolutions. The Bramo Somayajists and Arya Somayajists have thus become separate bodies because they could not induce others to subscribe to their views. Conferences and resolutions passed at Conferences are of use only when effect is given to the resolution or the money and trouble are thrown away. It is incumbent on such conferences not only to pass resolutions but to divise means to carry out them by forming small associations to give effect to the resolutions as in the case of Bramo Somayajists and of Arya Somayajists &c., by example:— The Mail of the 30th May; contains a practical advice—while there is much to commend in the working of these Conferences it cannot be denied that it is also possible to work them on somewhat improved lines so as to enhance their practical usefulness. Each may work with some precise sims and within a well defined scope so that there may be no over lapping and no waste of energy and power.

I may in this connection quote an extract taken from a sensible articles that appeared in the Hindu for carrying out reforms. "I would first compare the evolution or forward march of society to a journey of travellers

walking on a road bound for a common goal. Among the travellers a few more active persons walk a few paces in advance a few others lag behind and the remainder occupy intermediate positions. The forward march of the active few acts as an incentive to the others who tried to join the forward party thus helping the whole band of travellers to reach their goal soon. The forward party does not altogether ignore the backward party but after marching in advance now and then make compromises by moving slowly so that the backward party may come near if not join them. In any case there will be different batches occupying different distances on the road of course not very far from one another but at the same time with the gaps between the batches now widening now contracting and then on the whole the journey to the common goal is accelerated. This is exactly what happens in the march of societies and nations. Taking only one epoch out of several in the history of ancient India we find that the Budhistic community was only an advance batch of the travellers of the Indian nation of that time and subsequently through a national compromise some of the backward batches joined the forward batch thus effacing the differences between the two batches. Our ancestors we belonged to the backward party at the time subsequently incorporated some of the Budhistic ideals in their life and made their separate existence unnecessary. Having arrived at conclusion that all the members of the nation or society can never move at a time en-masse but by batches one might ask if individuals are to be left alone to move fast or slow as they please in the matter of social reform which implies the co-operation of several members in the social dealing. No, because social reform implies the existence of several individual who can have their social dealings among themselves in the matter of dining and marriage. How can an individual by himself put social reform into practice when there are none else to join him. We thus see that in the matter of social reform the

members of the societies should move not as mere isolated individuals but in batches. But if an individual who feels very strongly on the necessity of certain reforms cannot find persons to co-operate with him to form a new batch the best thing for him is to join another batch which is already in existence and which is congenial to him.

This system of forming batches or communities are sects and converting others into their fold has been availed of from time immemorial Budha, Ramanuja and Madava did the same thing. Jesus Christ, Martin Luther and Muhamad did the same thing. Kabir Nanak and Chaitania did the same thing. They laid the foundation for the formation of the community having ideals according to their conception conductive to the well-being and progress of society as a whole. They started with the few that joined them at the time and thought by converting others into their fold they would gradually raise the humanity to the highest ideals conceived by them. When such is the experience of the History of the Social progress during the past we cannot do otherwise than follow the same example we must form an ideal community giving free scope for the display of reforms which we think are conductive to the happiness and progress of society and convert others into its fold so that the whole society may eventually adopt the reforms at first immitating and gradually assimilating. The duty of the social reforms therefore does not consist in convening meetings and passing resolutions but to take steps to form communities to carry out their convictions and ideals. It is impossssible to effect reforms in the first group and be within the society. That sagacious and illustrious statesmen Sir, T. Madhava Rao was so impatient to bring about reforms in the marriageable age of girls that he said—Every day lost is a great sin as it causes so much evil—. He characterised that reform as the most important the most urgent and happily the most practical reform and he suggested as a practical means of carrying it out that a small and influential local committee

should be formed at every important town having for its object the dissusion of persons from marying girls before the 10th year of their age in the case of Brahmins and 15 in the the case of non-brahmins with the small branches in the chief villages and that such committee when it heared of any intended marriage before the age mentioned should write to the party concerned pointing out the evils of early marriage and the advantages of deferred marriages. In one instance he refused to attend a marriage because the bride was a mere child. Whether the course suggested commends itself or not to you it shows that he was a practical reformer and talking and writing on the subject were not enough. He once said—It is painful to observe even some very educated native gentlemen entrenching themselves behind a very wrong notion and opposing social reform—.Gentlemen Mr. John Stuart advises that the bulk of the people and even their rulers and in fact all influential people to accept their opinions in political and social as in physical matters from those who may have had the time and who may have taken to specially study those subjects.

CASTES.

It is now fully established that in earlier Vedic times castes were unknown and that the mention of castes in the 10th Mandala of the Rig Veda is a subsequent addition. According to Mr. R. C. Dutt in the entire range of Vedas there is not a single passage to show that the community was cut up into heriditary castes. In the Upanished period castes existed as a division of profession but there was no prohibition as to interdining or intermarriage. Sathia Kama Jabali whose mother herself could not say who his father was, was taken as a Brahmana by

his Guru because he had ventured to tell the unplesant truth about his birth. Sumitra one of the wives of the famous King Deseratha was a Visyia woman and Santha their daughter was married to Rishiasringa a Brahmin. Vyasa is said to born of a Brahmin sage Parasar and the fisher woman Sathiavathi who afterward marries King Santhanu-Vidura though a Südra by birth was not prohibited from learning the Vedhas Guna quality and Karma duty determined the caste of a man according to Bagavat Gita and not birth or heridity. Instances can be multiplied to show that castes in those days were devoid of those restrictions which obtained at the present day and which are directly or indirectly lead to a multitude of evils and sins. Abolish castes and a host of other social evils will vanish by themselves such as early marriage widow marriages prohibition against sea voyage the disqualification and depressed classes and the social and material well-being of the nation will be raised to a degree beyond the consuption. Turning to Japan we see Japan's greatness is due to the abolition of caste system that prevailed there. The country had been split up into several feudalistic factions of different degrees of frank,, the Shogun the Daimious &c. The lowest stratum of humanity theera occupied the same position as the untouchable or Paraya, Since 1854 the country was roused from its stupor and felt the necessity to remove the huge weight that clung to its neck and impeded its progress and at once removed all class distinctions which at once raised the depressed classes. The net result was that Japan is now reckoned as one of the great powers of the world.

REMARRIAGE OF WIDOWS.

Remarriage of widows was in vogue in the vedic times as is proved by the Vedic Text-Rise up woman come

to the world of living and become the wife of him who holds thy hand and is willing to marry thee, Vasista permits the remarriage of a damsel if her husband happens to die before the consummation of the marriage. The Smirities of Manu abound in instances of widow remarriages. Widow marriage became obsolute only in the 12th century. We do not realise we sin not only against man but against God by our delay in introducing urgent reforms. Every day delayed adds to the sin and both our worldy and spiritual welfare is affected. We counteract the design of nature when we unite in wedlock mere children who are physically undeveloped to be so united and when we by our unwise and brutal custom doom to life long misery and widowhood. Members of the fair sex whether mere children or in bloom of life who have the misfortune to lose their husbands we deprive them of their natural right and happiness. Also when God has created all men alike when the divine soul lives in all alike the general spirit of purity, justice equality temperance and mercy illuminate our hearts. Following the advice of Mr. Mill are we not bound to accept the verdict of eminent judge such as Justice Renade Justice Tulang Chundravasken. Justice Shungaran Nair Justice Sadasiva Iyer whose mental acumen and high talents are a sure guarantee for sound judgements in social questions as in legal matters, and of eminent Statesmän as the Gaekwar of Baroda and the Hon'ble Mr. Gokhale who have made the study of the subject their lifelong work. Justice Ranade says shall we not be more considerate to those whom we have hitherto treated as if their very touch for pollution and help them in rising higher or shall we say to them do not stand near and cast your shadow on us; will the innerman in each one of us grow stronger braver or more charitable and humane by reason of our resolve in one way and not in the other. The Gaekwar of Baroda says—No institution has wrought so much mischief and done such incalculable harm to our country as the stupid ignorant system of caste.

There must be no right attaching to mere birth, equality of opportunities must be enjoyed by all classes— Mr. Gokhale. —It cannot but strike any one who comes to think on this subject that it is absolutely monstrous that a class of human beings with bodies similar to our own, with the same blood running in their veins that we have in ours should be perpetually condemned to a low life of servitude wretchedness, mental and moral degradation and that permanent barriers should be placed in their way so that it should be impossible for them to ever overcome them and improve their lot. This is deeply revolting to our sense of justice. Thus the reforms are not an innovation but a revival of the old practices. In this connection I must not omit to mention that my non-brahmin brothren do not display as much activity as our Brahmin brothren in the field of Social reform and it is hoped that the Saiva Sabah now ushered into the world will refuse a new spirit. I may conclude this with the following lines from 1. Pope—Nothing is foreign; parts relate to whole; 2. One all extending, all preserving soul, 3. Connects each being, greatest with the least; 4. Made beast in aid of man and man of beast; 5. All served all serving nothing stands alone; 6. The chain holds on, and where it ends unknown. 7. Has God thou fool, worked solely for Thy good, 8. Thy Joy, Thy past time, Thy attire Thy food.

கோவில்.

கோ—தலைவன். இல்—இருப்பிடம். எனப் பிரிந்து, தலைவனுடைய இருப்பிடம் என்று பொருள் தரும். கோவில் என்னும் ஒரு சொற்றொடரை என் சொற் பெருக்கத்துக்கு எடுத்துக்கொண்டேன். தலைவன் என்பான் மக்குரிய இன்ப துன்பங்கள் உணர்ந்து, இன்பத்

தைப் பெருக்கித் துன்பத்தைச் சுருக்கிப் பின்னர் அறவே ஒழிக்கும் முறை செய்பவன்.

நம்மில் ஒருவனாய் இம் முறை செய்பவன் அரசன். இவன் நம்போன்றவனாதலின், வெயில் மழைக் கொதுங்கவும் இளைப்பாறி நிற்கவும் மற்றும் பலதிறப் போகங்களுக்கு இடமாயிருக்கவும் நமக்கு ஓர் வீடு வேண்டுவது போலவே; அரசனுக்கு ஓர் வீடு இன்றியமையாது வேண்டியதே. இவ் வரசன் நம்மைப்போற் குறைந்த ஆயுளும் பிணி கொள்ளும் உடலும் துன்ப இன்பப் பெருக்கால் மறக்கும் சிந்தையும் உடையவன். இவன் நமக்குறும் சுக துக்கங்களை நாடல், முழுமையும் தெரிதல், நிரம்பப் பெருக்கல், அறவே ஒழித்தல் கூடாதனவாம். நம்மவர் பலர் கூடி இவனுக்குப் பல வகையுஞ் சூழ்ந்து உதவினும் இவை முற்றுப் பெறாதனவாம். ஆதலின் யாவற்றினையும் அறிந்தாங்கு அறியும் அறிவும், பிணி கொள்ளா மேனியும், துன்ப இன்பப் பெருக்காற் சுழலுறா மனமும் உடையான் ஒருவன் உளனேல், அவனும் நம்மவர்க்கு நன்மை பெருக்கும் திருவுள்ளமும், உளங் கொண்ட முறை செய வல்ல திறனும் அமைந்தவனேல், அவன் நமக்குத் தலைவனே. உலகமும் உயிரும் உள்ள மட்டும் அவன் தலைவனே. அவனைத்தான் கடவுள் என்று கூறுவர். அவனது இல்லத்தான், வீட்டைத்தான், இருப்பிடத்தைத்தான் உண்மையறிமக்கள் கோவில் என்ற ழைப்பர். இக் கோவில்தான் என் சொற் பெருக்குக்குள்ளது.

கடவுள் எல்லாம் வல்லவர், கருணை வடிவினர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், என்பனவாகச் சொல்லும் பெருமைகளையுடையார். எங்கும் நிறைந்தவராகிய கடவுளுக்கு ஓர் வீடு எவ்விதம் குறிப்பிடுவது என்னில்? குறிப்பிட முடியாது. முடியாதாயினும், எண்ணிறந்தனவாகப் பலவிதத்திலும் விரிந்து உயர்ந்து சிறந்த கோவில்களை யாம் காண்கின்றோம். இக் கோவில்களும் ஓரிடத்தல; பல இடத்தும் பல தேயத்தும் காண்கின்றோம். இக் கோவில்களில் பலதிறத்து மனிதருங்கூடி நினைவாலும் தோத்திர ஒலியானும் பலவகை உடல் இயக்கத்தானும் கடவுளை வணங்குகின்றோம். வணங்கும்போது, நாம் இல்லாராகவும், எல்லாம் உள்ளவர் அங்கிருப்பதாகவும் எண்ணி வணங்குகின்றோம். எத்துணைக் காலம் எத்தகை அறிவினர் ஊன்றி யோசிக்கினும், எட்டுணையும் குறைவில்லாராக அவர் இருந்தாலன்றி, அவரைக் கடவுளென வழிபட இசையோம். தானே விளங்குதலின்றிப் பிறவொன்றின் துணைகொண்டு விளங்கின் அவர் கடவுளுமல்லர், ஆகவே எத்திறத்தினும் தமக்கு நிகராம்

ஒப்பாரும் இல்லாத அக் கடவுளை, நாம் வாழவேண்டி நம் மனம் சமாதான முறவேண்டி நம் அல்லல் தீர்ந்து அமரவேண்டித் தோத்திரிக்கின்றோம். மனிதன் எவ்வெக்காலத்து எதன் எதனுடன் சார்ந்து நிற்கிறானோ அதன் அதன் தன்மையை உடையானாதலின், நாமும் நம் மனம் சமாதானமுற வேண்டி ஓர் இடம் நோக்கி வருகிற பலர் கூடினாலன்றி, நம் மனம் ஒருமைப்பட்டுச் சமாதானமுறாது. உறுதாகவே நமக்குள்ள பலவகைத் தொழில்களினாலான துன்பமும் களைப்பும் நம்மை வாட்ட அவைக் கிரை யாவோம். சமாதானமுறின் எடுத்த காரியங்களில் ஒவ்வொன்றையும் நோக்குந்தோறும் கிளர்ச்சியுடன் செய்வோம். இச் சமாதானம் அடைவாரைக் கோவிலில் வந்து வழிபட்டுச் செல்பவர்களுக்குள்ளேயே காணலாம். பிற இடங்களிற் போய் வருபவர்கள் இத்தகைய சமாதானம் பெறக்காண்டல் அரிது.

இக் கோவில்களில் வடிவம் வைத்து வழிபடுபவரும், வடிவம் இன்றி வழிபடுபவரும், என இரு திறத்தினராக நாம் இருக்கின்றோம். மனிதனுடைய ஒலியும் நினைவும் வடிவங் கொள்வன என்பது இந் நாட்டு மந்திர நூலார் துணிபு. மேனாட்டு மேதாவிகள் சமீப காலத்திற் கண்டு பிடித்த ஓர் அரிய துணிபும் அதுவாம். உடனே கட்புலனுக்குத் தோற்றா திருப்பினும் நினைவின் முதிர்ச்சிக்கும் ஒலியின் பதிவுப்பலத்துக்கும் தக்கபடி வடிவம் அமைந்தே வரும். வடிவமின்றிக் கோவில்களில் வழிபடுவோமென்பாரும், ஓர் வடிவத்தை மனத்தாற் கற்பித்துக்கொண்டன்றி வழிபடல் கூடாது. அவரும் வடிவ வழிபாட்டினரே. நம் அறிவு வன்றி நிலைக்காத தன்மையால், குறிப்பெழுதி வைத்துக்கொள்வதும் படம்பிடித்து வைத்துக்கொள்வதும் வழக்கமாக உடையோம். ஆதலின், நாம் வடிவமின்றி வழிபடுவோமெனல் எத்துணை சாலுமோ? இவ் இந்திய நாட்டு பெரிய கோவில்களையும் வடிவ வழிபாட்டினையும் மிகுதியாகக் கொண்டது. நம் நாட்டுக் கோவில்கள் யோக சாத்திர நூல் ஆய்வார் தேர்ந்தார் கொள்கைப்படியும் உண்மை காண உற்று நோற்பவர் அநுபவப் படியும், மூலாதார முதல் புருவ மத்தியம் வரை, மனம் சுத்தமாய்ச் சாந்தமாய் ஒருமித்த காலத்திற் றோன்றும் சோதித் தாணையும், அதன் உச்சியிற் றோன்றும் அருள் வடிவத்தையும், அதன்பால் விரிந்து துலங்கும் பீடத்தையும், அதன்பாற் றோன்றும் சோதிப்பெருக்கத்தையும் அதனுடைய குளிர்ந்த கிரணத்தையும் அப் குண்டாம் ஒலியையும் அப்பால் உயிரினது சுத்தத் தன்மையினையும், பின்னர் சகல நாடிகளும் தத்துவங்களும் ஒருசேர அவையிற்றை விளக்கும் பிரம ரந்திரத்தையும் அவ்விடத்திற் றோன்றி வருகிற நிகழ்ச்சியையும், கொடிமரம், நந்தி, பலிபீடம், திருவாசி, கலச மணி, உள்நந்தி, மூலத்தானம் முதலியவைகள் முறையே விளக்கும்.

மேலும் பெரும் புலவனாவது ஓரரசனாவது வரும்போது,
அவன் மாட்டு அன்புகொண்டு வீதி அலங்கரித்தல், வாத்திய முழக்கல்
முதலியவைகளால் எவ்வளவு தூரம் நம் அன்பின் நிகழ்ச்சியைக் காட்டு
கின்றோம்! அவ்வளவு தூரம் ஒரு மனிதன் மாட்டே நிகழும் அன்பு.
உண்மையில் அன்புருவாகிய கடவுளிடத்து எவ்வாறு அதிகரித்து நிகழும்
என்பதை யான் சொல்லவும் வேண்டுமோ? இவ் வுள்ளக் கிளர்ச்சியின்
பெருக்கே உயர்ந்து பரந்து சிறந்த கோவில்களை நம் முன்னோரால் நம்
நாட்டில் நிறுவியது; கண்டாமணிகளும் உயர்ந்த கோபுரங்களும் தோன்றச்
செய்தது. இத்தகைய கோவில்களை நாம் நம் பொருட்டுச் செய்துகொண்
டோமோ? கடவுட்கோர் இருப்பிடமாகச் செய்துகொண்டோமோ? என்
னில், கடவுளுக்கு இக் கோவில்களாற் சிறிதும் பயனில்லை. இக் கோவி
லுக்குள் மட்டும் அடங்கி அவர் இருந்தார் என்னில், அவரது அற்புதத்
தன்மைகளில் ஒன்றாகிய எங்கும் நிறைவுக்கு இழுக்காகும். கருணை
கொண்டு, நாம் மனம் உருகி வழிபடும்படியாக இக் கோவில்களில் பசுவி
னுள்ள பால் கறப்பார்க்கு மடிவழித் தோன்றுவது போல், நமக்குக்
கிருபை செய்வார். அதுகொண்டு நம் அறிவு தொழில்களை நல்வழிப்
படுத்தற் கோர் வழி பெறுவேம். ஆதலின் நாம் நம் பொருட்டே இக்
கோவில்களைச் செய்துகொண்டோம். இவ் ஆலய அமைப்பு வடிவ
அமைப்பு இன்னும் சில தத்துவங்களைக் குறித்து விளக்க நம் முன்னோர்
கள் சிற்ப நூல் செய்து வைத்தனர் இதன் ஓர் பாகமே மனையலங்கார
நூல். இவையிற்றினைத் தமக்கு வழி நூல், சார்பு நூல்களாகக்கொண்ட
பல நூல்களை நிரம்பப் பத்திரப்படுத்தி வைத்துள்ள கபாடபுர முதலிய
நகரங்களைக் கடல் கொண்டதால், இக் காலத்து அம் முதல் நூல்களைத்
தோன்றக் காண்கிலேம். ஆயினும் நம் திப்பிய ஆகமங்களிலும், நம்
நாட்டுத் தமிழ்ப்புராணச் செய்யுள்களிலும் நிரம்ப நின்று விளங்குவன
இக் கட்டிட அமைப்பு நூல்கள். இக் கோவில்களில் நாம் வழிபடும் வடி
வங்கள், நல்வழியில் நின்றோரை முன் வைத்து அவர்க்கும் உலகத்துள்ள
பிறர்க்கும் கிருபை செய்வதற்காகக் கடவுள் பேரிரக்கத்தாற் றோன்றிய
வடிவங்கள் போன்றவைகளாம். இவ் வடிவங்களை உற்று நோக்கி யோசிக்
கின் ஒவ்வொன்றிலுமுள்ள உண்மைகளை என்னென் றுரைப்பன்!
உதாரணமாக, நடராஜ வடிவத்தை எடுத்துக்கொள்வோம். அதில் ஒரு
அவயவம் நமக்கு வேண்டிய உடம்பு பொருள்களை எடுத்துக் கொடுப்ப
தாகிய படைப்பையும்; மற்றோர் அவயவம் அவையிற்றை நிலைபெறுத்த
லையும்; வேறொரு அவயவம் அவையிற்றைக் காலம் நோக்கி நியதிப்படப்
போக்குதலையும்; மற்றொரு அவயவம் நாம் கொண்ட இச்சைகள், அவ
விச்சை வழி நனியழுந்தி விரைவில் வெறுக்கச்செய்து அருள் காட்டுந்
தன்மையினையும்; மற்றொரு அவயவம் குறைவில்லா இன்பப் பேறளித்த

லையும் காட்டும். இனிக் கங்காள வடிவத்தைக் கவனிப்போம். தாருவன முனிவர்கள் தாம் நிறைந்த அறிவும் தொழிலும் கொண்டதாக வீண் இறுமாப்புக் கொண்ட காலத்து, அவ் இறுமாப்பைக் கெடுத்து நல் அறிவுச் சுடர் கொழுத்த பெருமான் கொண்ட அருள் மேனி அது. அம் முனிவர்கள் விடுத்த பாம்பும், மானும், யானையும், வேங்கையும் பிறவும் பெருமானிடம் அடங்கின. சுருங்கச் சொல்லின் உயிர்கட்கெல்லாம் ஒன்று நின்று; என் கட்டளைப்படியே நடக்கும்; அற்பமாவது செருக்குக்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தும் அருள் மேனி யது. இவ் வகையாக ஒவ்வொரு வடிவமும் ஒவ்வொரு அற்புதச்செயலை விளக்கி நிற்கும். உண்மையை அறிபவர்க்கு, அவ் வடிவங்களைக் காணுந்தோறும் நினைக்குந்தோறும் நான் எனல் போய் லக சிரம் குவிதலும் உள்ளம் நல்வழி நிகழ்தலும் பிறவும் ஒருங்கே காண்கின்றோம். ஆகையால் கோவில்களும் வடிவங்களும் அவ்வளவு தூரம் அன்பைப் பெருக்குகின்றன! அகந்தையை வேருடன் பறிக்கின்றன! கல் நெஞ்சமும் கனிய வைக்கின்றன! இவ் உண்மையை ஆய்ந்து அறியாது இகழ்பவர் பாவம்,—அந்தோ!—இருந்தவாறென்னை?

இக் கோவில்களே நம் தெய்வ வழிபாட்டுக்கொள்கையை நிலைபெறச் செய்துள்ளன. இக் கோவில்களே நம்மைச் சத்தியவழி நிறுவுவன. இக் கோவில்களே நமது அறிவுக்குத் தாயகமாவன. இக் கோவில்களில் பண்டிதர்களும் ஞானிகளும் நீங்காது வசித்து வந்தனர். இப் பெருமக்களது மேற்பார்வையிலேயே இக் கோவில்களின் ஆட்சி யிருந்தது. புறச் சுத்தமே அகச் சுத்தத்திற்கு ஒரு காரணமானதால் இக் கோவில்கள், மனத்துக்கும் சரீரத்துக்கும் சுத்தமான வழியில் அமைக்கப்பட்டன. இதற்கு உதாரணம் ஒவ்வொரு கோவிலுக்கும் ஒவ்வொரு தீர்த்தமும், கோவிலில் நிறைவான தீபங்களும், நன்மணப் புகையும் பிறவுமாம். இக் கோவில்களில் அறிவுக்குச் சுகமளிப்ப, நூல்களை யோதச்செய்து வந்தனர். ஆதலின், கோவில் வழிபாடும்; மனிதர் நன்னடக்கையும் செல்வையுந் திருந்தன. அரசரும் பிறரும் இக் கோவில்களின் சுத்தம் வெளிச்சம் ஆராதனை இவைகளுக்காக வேண்டிய பொருள்களைக் காணிக்கையாகக் கொடுத்தனர். வழிவழியாகப் படித்து வந்தவர் தகுதிகளைக்கண்டு ஒவ்வொருவரை தலைமுறை தலைமுறையாக கோவிலில் நித்திய நைமித்திய விசேஷ வழிபாடுகளைச் செவ்வனே நடத்தி வரும்படியாக அவர்களிடம் வேண்டும் பொருள்களை அளித்தனர். பல கோவில்களில் இவ்விதமாகத் தர்மத்திற்கு விட்ட பொருள்கள் குறித்த செலவுக்கு மிஞ்சின வருவாய் உள்ளனவே. நம் சமயச் சார்பான அரசர்களுக்குப் பின்னும் புறச்சமயத்திலிருந்த அரசர்களும் பிறரும் நம் கோவில்களை வழிபட்டு மானிய முதலி

யன அவித்து ஆதரித்து வந்தனர். இவ்வளவு அருமை பெருமையுடன் இருந்து வருகிற கோவில்களின் தற்கால நிலைமையை நோக்குவோம். சில கோவில்கள் அர்ச்சகர்கள் கைப்பட்டு விழிக்கின்றன. சில கோவில்கள் தருமகர்த்தர் கட்சிக்கும் ஊர்க்காரர் கட்சிக்கும் தங்கள் வருவாயை இழந்து கொண்டிருக்கின்றன. சில கோவில்கள் நன்னிலைப் பெரியர் மரபிற் புகுந்து நெறித்தலைவராய் அமைந்தவர் கையிற் சிக்குண்டன. குற்றம் பெருக்கும் செய்கைகளும் சில கோவில்களில் நிகழ்கின்றன. சைவ நன் மணிகளே, நமது பொருளும், நமது வழிபாட்டிடமும், நமது அறிவுக் களஞ்சியமும், இவை ஒருங்கே கூட்டி யோசிக்கின், நமக்குள்ள பெருமைகளுக்கெல்லாம் இருப்பிடங்களாகிய இக் கோவில்கள் இந்நிலையில் இருப்பது நமக்கு எவ்வளவு இழிவாயிருக்கிறது. நம் பெருமைகளெல்லாம் என்னவாகின்றன. சற்றே நோக்குங்கள்! தாய்க்குறும் நோய் கண்டும் பார்த்திருக்கும் பிள்ளைகளிருக்கிறார்களா? தம் தனயர் மங்கலப் பெருக்க மடையாது, உள்ள மங்கலத்தையும் கெடுப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிற பெற்றோர்க ளிருக்கிறார்களா? சற்றுக் கவனியுங்கள். இப்போது நமக்கு வாய்ந்த காருணிய அரசாங்கத்தார் நம் கோவிற் காரியங்களை நம்மைப் பார்க்கும்படி விட்ட காரணம், ஒரு சமயத்திலுள்ளவன் மற்றொரு சமயக் கோவில்களை, அக் கோவில்களுக்குரிய சாத்திரப்படி கவனித்து வருதல் இயலாததென்று அன்றோ? நம் கோவிற்கு வேண்டிய சாத்திர அறிவும் ஊக்கமும் அன்பும் இல்லாதவராய் நாமிருந்து இன்னம் எத்தனை காலம் தள்ளலாமென்று யோசிக்கிறீர்கள்? ஒழுக்கமற்ற தேசங்கள் விரைவிற் கெடுவதையும் ஒழுக்கம் நிறைந்த தேசங்கள் விரைவில் உயர்வதையும் தற்கால உலக நிகழ்ச்சியே நமக்கு நன்கு விளக்கவில்லையா? ஒழுக்கத்திற் றலைசிறந்தது சமய ஒழுக்கமென்று அறியாதவர் நம்மில் யாவர்? கோவிற் காரியங்களைக் கவனித்து நடத்த ஒப்புக்கொண்ட பெரியவர்களில் நமது சமய சாத்திரங்களைப் படித்துத் தேர்ந்தவர் சிலர்; படித்துவருபவர் சிலர். பல கோவில்களுக்குப் பொது விசாரணைக் கர்த்தராய் தம்மோடு ஒத்த மேம்பட்ட தகுதியுள்ளவரை ஒவ்வொரு கோவிற் காரியங்களைக் கவனித்து நடத்த நியமிக்கும் தகுதி பெற்றவர்களில் இவ்வித சாத்திர விசாரணை செய்தவர் சிலர்; செய்கிறவர் சிலர். அர்ச்சகர்க்குள் தம்மைப்பற்றியும் தம்மால் காலந்தோறும் அர்ச்சித்தற்குரிய கடவுள் வடிவத்தைப் பற்றியும் ஆராய்ச்சி கொண்டவர் தொகைமிகக் குறைவே. ஓதுவார்களில் தேவாரங்களில் வழங்கிவருகிற பண்களின் தொகை இத்தனை என்றாவது சொல்லத் தெரிந்தவர் சிலரே யிருந்தார்கள்; பெருகுகிறார்கள்.

கடவுள் சலனமற்றவரா யிருப்ப, அவர் இரக்கமாகிய சத்திகளே அவர் முன்னர் நடிப்பதாகச் சாத்திரத்திற் கூறியிருக்கிறதல்லவா? தம்

விதத்தை ஆராதனை காலங்களில் நடித்துக்காட்டும் உருத்திர கணிகையர் போன்றவரும், அடியவர் பணியும் அரன் பணியும் தாம் யாக்கை பெற்ற பயனுய்க் கொள்ளும் தேவ தாசிகள் போன்றவரும், தற்காலத்தில் தரிசனஞ் செய்யச் செல்வாரை, சமய வழிபாட்டுச் சின்னம் சிறிதுமின்றி இழிவழிகளிற் புரளச் செய்யும் மடவார்களாக இருக்கின்றார்கள். இவர்களை நாயனவாகவே அமைக்கப்பட்டுள்ள கோவில்களில் ஆடல் முதலிய பணி செய்யாது வைப்பது அவசியம். தொன்று தொட்டு வரும் வழக்கே என்னில் தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா என்ற உண்மைப் பிரகாச மொழி நினைக்கத் தகுந்தது. அவர் பணி நடந்து தொடர்வது நம் கோவில்களின் தூய்மைக்குப் பெருமை தருவனவாகாது. மழவிடையார்க்கு வழிவழியாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த சிரியரே, வியாதிக்கு மருந்துண்ணலும், ஆடையில் அழுக்கேறின் தோய்த்தலும், புண் கண்டுழிக் கீறுதலும் நம் இயல்பன்றோ? அம்முறைப்படி நாம் செய்ய வேண்டிய வழி என்னவென்று யோசிப்போமானல், 1. கோவிலதிகாரிகள் உபநு சாத்திர அறிவைத் தேடவேண்டும். சிவ சொத்துக் குடி நாசம் என்பதை நன்குணர வேண்டும். பிரபுக்களாகிய இவர்கள் சிவ கைங்கிரியமாக எடுத்துக்கொள்கிற சிரமத்துக்கு அப்போது தான் சரியான பலன் உண்டு. இப் பகுதியில் தரும கர்த்தர்களும் தேவாலய பொது விசாரணை சபையினரும் அமர்வர். 2. அர்ச்சகர்களும் ஓதுவார்களும் தத்தமக்குரிய முறைப்படி சாத்திரம் ஓதிவரும்படி கோவில் அதிகாரிகள் கண்டிப்பான ஏற்பாடு செய்ய வேண்டும். 3. அந்தந்தச் சமய முறைப்படி நடப்பவர், அந்தந்தச் சமயக் கோவில்களுக்குப் பொது விசாரணைச் சபையினராய் விசாரணைக் கருத்தராய் அமரவேண்டும். பிறர் வரின், அக் கோவிற் காரியங்களில் அவர்க்கு உண்மை யன்பு பிறவாது; பிறவாமையாற் காரியஞ் கெடுறும். 4. பொதுக்காமக் கிழத்தியர் கைங்கிரியமும் ஆட்டபாட்டமும் கோவில்களில் இல்லாது செய்யவேண்டும். கோவிற் பணிவிடைக்காரர்களெல்லாம் சிவன் கோவில்களிற் சமய தீட்சை முதலிய பெற்றவர்களாக அமைதல் வேண்டும். மற்றும் கோவில்களிலும் இவ்விதமே சமாசிரயண முதலியன பெற்றிருக்க வேண்டும். 5. எந்தெந்தக் கோவில் எந்தெந்த ஆகம விதிப்படி அமைந்துள்ளதோ அந்தந்தக் கோவில்களில் அந்தந்த ஆகமப்படியே பூஜை முதலிய நடைபெற வேண்டும். இந் நடைபெறு செம்மையுறுவான், கோவில் அதிகாரிகளும் பணிவிடைக்காரரும் இவ் ஆகம ஆராய்ச்சியிலிருக்க வேண்டும். 6. தக்க வருவாயுள்ள கோவில்களில் அதிகாரிகளுக்கும், வழிபடுபவர்க்கும், பணியாளர்க்கும் தடையின்றி உபயோகமாகும்படி ஓர் புத்தக நிலையமும் ஓர் சாத்திர பாடசாலையும் அமைக்க வேண்டும். இச் சர்வாதார புண்ணியத்தில் முதல் நின்ற சங்கராயினர்கோவில் சிவாலய விசாரணைக் கர்த்தர்கள் N. A. V. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A. B. L., V. திருவேங்கடம் பிள்ளை

அவர்கள் இவர்களுக்குச் சைவ நல்லொழுக்கம் மன முவந்த வந்தன மளிக்கக் கடமைப்பட்டதாகும். நம் கோவில்களின் பொது விசாரணைச் சபையிலவர் தயை கூர்ந்து சற்று அதிகமாகக் கவனிப்பார்களானால், குறித்த சாத்திர பாடசாலை முதலான நற்காரியங்கள் எளிதில் நடைபெறும். அவர்களுக்குப் பொதுஜன வந்தனமும் திருவருளும் பெருகும். சில கோவில் அதிகாரிகள், ஆகம புத்தகங்கள் வாங்கி வைப்பதற்குக்கூட வருவாயில்லையே என்று சொல்லலாம்; அவர்களுக் கோரே மொழி. இப்போது கோவில்களின் பொது விசாரணைச் சபையாருக்கு இக் கோவில் அதிகாரிகள் தங்கள் கோவில்களுக்கு அரசாங்கத்தார் கொடுத்து வருகிற ஆண்டுப்பதிவுப் பணத்திலிருந்து எவ்வளவோ ஒரு பாகம் ஒவ்வொருவரும் கொடுத்து வருகிறார்களே. அதனோடு சிறிய கோவில்களிலிருந்து ரூபா நூறுக்கு வருடம் ஒன்றுக்கு ரூபா ஒன்று வீதம் ஏற்படுத்தி அத் தொகையைப் பெரிய கோவில் அதிகாரிகள் வசம் ஒப்புவித்து தம் பக்கத்துள்ளவரை அங்கு போய் வாசித்துவரும்படி இலகுவாய்ச் செய்யலாம். புத்தகங்களும் இலகுவாய் வாங்கி வைக்கலாம். 7. இச் சைவ சபை போன்ற சபையிலுள்ளவர்களிற் சிலரையேனும், பிறரையேனும், சாத்திர முணர்ந்தவராய் உணர்ந்தமட்டிலே தங்கள் சௌகரியம் நோக்காதவராய் உண்மை யன்பும் பொதுக்காரிய நோக்கமு முள்ளவராய்ச் சிலரைக் குறித்து, எந்தெந்தக் கோவில்களுக்குப் போனாலும், அங்கு, அவர்கள் வீண் ஆடம்பரம் இன்றி விசாரணை செய்து, வேண்டுஞ் சீர்திருத்தங்களை அக் கோவில் அதிகாரிகளுடன் இருந்தும் தனித்தும் எழுதி, கோவில்களின் பொது விசாரணைச் சபையாருக்குத் தெரிவிக்கும்படி வேண்டிக்கொள்ள வேண்டும். அச் சபையார் தயைகூர்ந்து அவர்கள் எழுத்தை முறையாய்க் கவனித்துக் காரியங்களை நடைபெறச் செய்யவேண்டும். 8. கோவில்களின் வருவாய் பலபடச் சிதறாத விதத்தில், ஒவ்வொரு கோவிலிலும் கணக்கு முடிக்குங் காலங்களிலும், விசேட காலங்களிலும், கோவில் அதிகாரிகள் தவிர, வேறு சிலர் ஓர் சபை கூடியிருந்து உசாவிக் கவனித்து வரவேண்டிய வகையில், பொது விசாரணைச் சபையாரும், அவ்வக் கோவில் அதிகாரிகளும் சில தம்கார்களை வேண்டிக்கொள்ள வேண்டும். இவ்விதஞ் செய்வதாற் றக்க பயனுறுவாம். பொது ஜன சிருப்தி யுண்டாம். கோவில் அதிகாரிகளுக்குப் பெருந்துணையாகும். சைவ மாதவத்திர்! யான் கூறியனவற்றுள் உங்களுக்குப் புதியனவாக யாவும் இருந்தில. உங்கள் கௌரவத்துக்கு இசையாதது யாதும் இன்று. பெருந் தயவு செய்து நாம் எல்லோரும் நன்கு வாழும்படி வேண்டுவன முறையே செய்யுங்கள். இதுகாறும் நிகழ்ந்தவைகளால், கோவில் என்பது யாம் வழிபடும் இடம் என்றும்; இக் கோவில் நம் பொருட்டே ஏற்பட்டதென்றும்; கடவுளுக்கு இக் கோவில்களாற் சிறிதும் பயனில்லை என்றும்; இக் கோவில்களில் வடிவமின்றி வழிபடுபவரும், ஓர் வகை வடிவ வழிபாட்டினரே என்றும்; இந் நாட்டுச்

கோவில்களிலுள்ள வடிவம், கடவுள் கொண்டருளிய அருள் வடிவம் போன்றதென்றும்; இவ் வண்மையை உற்று நோக்க, மனம் தூய்மையாகும் என்றும், அன்பு பெருகும் என்றும்; வேதத்திற் கூறப்பட்டுள்ளதே சைவ வழிபாடென்றும்; உண்மையறிபவரது அநுபவப் படம் போன்றது இக் கோவில் என்றும்; இக் கோவில்களில், நாளடைவில் தீயன கலந்தேகின்றன என்றும்; அவைகளை நீக்கவேண்டுமென்றும்; நம்மவர்க்குப் போதிய சாத்திர உணர்ச்சிக்கு இடமின்மையே தீயன கலத்தற்குக் காரணம் என்றும்; ஒவ்வொரு தக்காரும் சாத்திர உணர்ச்சி கொள்ளவேண்டுமென்றும்; அவ் உணர்ச்சி கொண்டால், நாம் மேம்பட்டு வாழலாம் என்றும்; பொதுவாக நம்மவர்க்கு கோவில்களில், தந் நலம் கருதாத அன்பும் ஆத்திரமும் வேண்டும் என்றும்; அவ்விதம் நீங்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டுவது என்பது பிரார்த்தனை என்றும்; சொல்ல நேர்ந்தது.


கோவில்களும் அதனுள் இருக்கும் உருவங்களும் இத் தென்னாட்டு மக்களிடை பல நூற்றாண்டுகளின் முன்னர் தோன்றிப் பல காரணங்களால் விரிந்து குணங்குற்றம் விராய் நிலை பெறுவன வாகின்றன. எனினும் சில பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட நூல்கள் அவைகளுக்கு உயர்ந்த உண்மைப்பொருள்கள் கற்பிக்கின்றன. என்? உண்மை நூல்கள் வெளியிடும் இறை, உயிர், வினை இவைகளின் இயல் முதலியவற்றை உணர்த்தும் குறியீடுகளே குறித்த கோவில்களும் அதனுட் காணும் உருவங்களும். இவ் வுண்மை நாளடைவில் வழங்குவாரின்றி தேய்ந்து மாய்ந்து போயிற்று. அதனை விளங்க வைத்தல் ஆலய அதிகாரிகள் கடன். கோவில்களும் அப் பொருணிலைகளும் பொதுஜன உரிமையன. ஆகலின், அவ் வதிகாரிகளைச் சட்டப்படி தெரிந்தெடுக்க முயலுதலும் திருத்த வழிகளைத் தேடுதலும் பொதுஜனப் பிரதிநிதிகளாகிய தலைவர் கடன். அங்ஙனமின்றிச் சீர்பெறுதல் இயலாது. நம் சமயாசாரமாகிய கோவில்கள் திருத்தம் பெற்றாலன்றி நம் சமயம் வளர்ந்தோங்குதல் அரிதினும் அரிது என்பது இக் கழகத் துணிபு.

இங்ஙனம்,

[illegible].

தரும பரிபாலனம்.

தருமம், அறம். இவை ஒரு பொருளென. இவ் வறம் இரு பிரிவினதாகப் பகுக்கப்படும். அவை:— இல்லறம், துறவறம். இல்லறமாவது, மனையாளோடு கூடி இல்லின்கண்ணிருந்து விருந்தெதிர்போற்றி, சுற்றந் தழுவி, புதல்வர் பேணி, அற்றாரழி பசி தீர்த்து, வறியார்க்கு ஈந்து,



S. Rm. M. Ct. Pethachi Chettiar Avl.,
Patron.
Saiva Sabah.

பிறர்க்கு உதவி செய்தலே ஆம். இவ் வில்லறத்தைப்பற்றி எனக்கு முன் பேசிய ஸ்ரீமதி A. தேவசகாய அம்மையார் கேட்டவருள்ளத்திலே பதிவுறும்படி செவ்விதாகப் பேசியிருக்கின்றனர். ஆதலின், இதனை யான் விரிப்பது அத்துணை அவசியமில்லை. இல்லொழுக்கம் இயற்கை அன்பைப் புக்கும் உலக இயலுக்கும் ஒத்ததோர் அறமாகும். [illegible]ர்க.

துறவறம்:—அஃதாவது பற்றற்றான் பற்றினைப்பற்றிப் பற்றைப் பற்றுக்களை ஒழித்தவர். அஃதாவது தனக்கென்று ஒன்றனையும் விரும்பாதவர், கல்வி யறிவிற் பெரியர், கற்றோரால் அறியப்படாத அறிவினர். கோபமும் சினமும் அகன்றவர். காமத்தைப் பகையறக் கடிந்தவர். [illegible] பகல் கழிந்த உண்டியர். அன்பமே அறியா இயல்பினர். தாம் தமக்கென இன்ப நலம் பிறர்க்கு உதவும் சீரியர், எனினும் இவ் வறத்தினை மற் கொண்டொழுகுதல் எளிதன்று. இது பற்றியே இல்லறம் அல்லது [illegible] லா மன்று இம் முதுமொழி யெழுந்தது போலும். நம் முதாதையர் நம்மவர்க்கு வேண்டிய கல்வி, அறிவு, சமயம் இவ் விளக்கங்களின் பொருட்டு அவர் சந்ததியாராகிய நாம் இப்பொழுதுள்ள நிலையைப் பற்றி கருதிப்போலும் பொதுநிதிகள் சேமிப்பாராயினர். அப் பொருள்களை இல்லறத்தார் மாட்டு வைப்பின் அவர் தாம் துய்த்தலும் தம் சுற்றத்தாருக்கு உதவலும் செய்வாரென்று கருதிப்போலும் ஒருசில செல்வர் [illegible] சோர்ந்து துறவியர்பாற் சேர்த்தனர். அத் துறவர நெறியாளர் மடாதிபதி யென்று அழைக்கப்படுவர். அவர்பாலுள்ள பொருள்கள் யாவும் அறநிலைக் குரியனவே ஆம். தமிழ் நாட்டில் அத்தகைய மடாதிபதிகள் திருவாவடுதுறை, தருமபுரம், திருவண்ணாமலை முதலியனவாம். மற் காலத்தில் இம் மடாதிபதிகள் நம் முன்னோர் கருத்தின்படி இன்னாட்டு மக்கட்கு ஆவன கருதி உதவி ஓம்பி பெரிதும் தரும பரிபாலனம் செய்து போந்தன ரென்பதற்கு பல சான்றுகள் உள. ஒருகால் தமிழ் மொழி இவரால் வளர்க்கப்பட்டது உலகறிந்ததே. இம் மடாதிபதிகள் தமிழுலகிற்கு உதவிய சிறந்த பல நூல்கள், இன்றும் நின்று நிலவுவன. எனினும், இவருட் பெரும்பான்மை மடாதிபதிகள் அத் தன்னெறி விலகிச் செல்கின்றனரென்பதை எவராலும் மறுக்க முடியாது. ஆதலின், நம் நாட்டு அறநிலை சீர்கெட எய்துவன ஆயின. அவரைக் குறை கூறுவதில் என்ன பயன்? அப் பொருள் நிலைகளை ஒப்புவித்தவரின் சந்ததியாராகிய நாம் ஒவ்வொரு மடாதிபதிகளிடமும் உள்ள அறப்பொருள் இவ்வளவினதென்றும் அதன் வருவாய்கள் இவை யென்றும் அவை செலவாகும் வழி இதுவென்றும் அறிந்துகொள்ளுதற்கு கூட முயன்றபாடில்லை. அப் பொருள்கள் நம்மதென்பதையே அடியோடு மறந்துவிட்டோம். நாம் இந் நிலையில் இருப்போமாயின் அவர்கள் தங்கட்குத் தோன்றியவாறு செல்வதில் தடையென்னை? ஆனால், இப்பொழுது இதைப் பற்றிய கூக்குரல் அங்கங்கே

ஜனசமுதாயத்தி னிடையிலும் பத்திரிகைகளிலும் பரக்கக் கேட்கப்படுகின்றன. வெறும் கூக்குரலிற் காரிய மென்னை? முயற்சி யன்றோ வேண்டும். அந்தோ!! மடி யென்னும் பாவி குடி புக்கனனே. மறலி யென்னும் அந்தகன் வாய்க்கொண்டனனே. அரசாங்கச் சட்ட சபையில் உறுப்பினராகும் கனவான்கள் மனதில் இவ் விஷயம் புகாத தென்னோ? நம் பிரதிநிதியாகிய அவர்கள் நம் குறைபாடுகளை அரசாங்கத்தினர்க்குச் செவ்வியில் தொடர்ந்து தெரிவிப்பாராயின் காருண்ணிய அரசினர் நமக்கு வேண்டுவன உதவுவதில் தடையில்லை யென்பது திண்ணம். மற்று, இத்தகைய சபைகள் அங்கங்கு கூடி இடையீடின்றி முயற்சித்தல் இன்றி பயன்படாதது. இந் நன்முயற்சிக்காக இம் மகா சங்கத்தார் ஓர் உட்கழகம் [Sub-Committee] 1911ஞு மேமீ" 29உ ஏற்படுத்தி யிருக்கின்றனர். அக் கழகத்திற்கு அறநிலைப் பொருட் பாதுகாப்புக் கழகம் என்று பெயர். அதன் தலைமை இப்பொழுது என்னிடம் இருக்கிறது. நாங்கள் 1911ஞு மார்ச்சுமீ" 3உல் செய்த தீர்மானத்தின்படி அடியிற்கண்ட நான் உள்ளிட்ட அறுவர்களும் ஒற்று [Deputation] ஆக 1911ஞு ஏப்ரல்மீ" 29உ சைவாதீனங்களுட் சிறந்த திருவாவடுதுறை ஆதீன கர்த்தரவர்களிடம் சென்றோம். அவர்கள் குறித்த வரவை நல்வரவாக மதித்து ஆடம்பரமாய் உபசரித்து நவமணி யிலங்கும் பொற்பணி போர்த்த காட்சி நல்கி இச் சபையாரது தீர்மானத்தை ரிக்கார்ட்டில் சேர்ப்போம் என்று மறுமொழி கூறினர். அங்கு நடந்த விஷயங்கள் அடங்கிய ஓர் அறிக்கை எங்களால் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இக் கழகத்தின் அமைச்சர் அதனை உங்கட்கு வாசித்துக்காட்டி விளக்கிய பின்னர் அதனைத் தொடர்ந்த காரிய நிர்வாகக் கூட்டம் இப்பொழுது நடைபெறும்.

DEPUTATION MEMBERS.

1. ஸ்ரீமான் S. T. ஷண்முகம் பிள்ளை அவர்கள்.
2. „ S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியார் அவர்கள்.
3. „ சிவக்கொழுந்து மன்னார்சாண்டம் பிள்ளை அவர்கள்.
4. „ சிவஞான தேசிகர் அவர்கள்.
5. „ S. T. பொன்னம்பலநாத முதலியார் அவர்கள்.
6. „ C. சடகோப பிள்ளை அவர்கள்.

மூன்றாவது சைவ மகா சங்கம்.

1912ஆ ஜூன்மீ 8உ.

காரிய நிர்வாகக் கூட்டம்.

ஸ்ரீமான்.

இரண்டாம் நாளாகிய ஜூன்மீ 8உ கூட்டத்தில் அறநிலைப் பொருட் பாதுகாப்பு விஷயமாய்ப் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அப்பொழுது அதன் உட்கழகத்தாரால் ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் அவர்களை நேரிற் கண்டு வரும்படி நியமிக்கப்பட்ட ஒற்றிற் சேர்ந்த கனவான்கள் தாங்கள் போய்வந்த விபரத்திற்கு ஓர் அறிக்கை பொது ஜனங்கள் முன்னிலையில் வாசித்தார்கள். அது பின் வருமாறு:—

சென்ற 1911-ம்ஆ மேமீ 29உ பாளையங்கோட்டையிற் கூடிய சைவ மகா சங்கத்தாரால் நிலையிடப்பட்டது அறநிலைப் பொருட் பாதுகாப்புக் கழகம். அக் கழகத்தார் இவ் வாண்டு மார்ச்சுமீ 3உ கூடித் தம் கழகத்துக்குத் தலைவராய் கானாடுகாத்தான் ஸ்ரீமான் S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியார் அவர்களைத் தெரிந்தெடுத்தனர். ஸ்ரீமான் V. S. சிவஞான தேசிகர் அமைச்சராய் அமைக்கப்பட்டனர். அதனோடு அவர் கள் இரண்டு தீர்மானங்கள் செய்து அவற்றினை நேரில் திருவாவடுதுறை யாதீன தற்கால தர்மகர்த்தர் அவர்களிடம் தெரிவித்து அவர்கள் விடையைப் பெற்றுவரும்படி 6 கனவான்களைத் தெரிந்தெடுத்து மூன்றாவது தீர்மானமாகச் செய்தனர். குறித்த தீர்மானங்களை இதனுடன் சேர்த்திருக்கின்றோம்.

அதற்கிணங்கக் குறித்த கனவான்கள் அறுவரும் கழுமலவூராத் தமிழ் மணங் கமழக்கண்ட அவ் வாவடுதுறைக்குச் செல்லத் தீர்மானித்து குறித்த ஆதீன கர்த்தர் அவர்கள் தங்கியிருந்த திருவிடைமருதூருக்கு எப்பிரல்மீ 29உ காலை வருவதாய்த் தந்திவழித் தலைவரும் அமைச்சரும் தெரிவித்துச் சென்றனர். அவ்விதமே தலைவரும் ஆனரெபிள் ஸ்ரீமான் ஷண்முகம் பிள்ளை அவர்களும் 29உ காலை அவ்விடம் சேர்ந்தார்கள்.

ஏனையவர்கள் எதிர்பாராத சில காரணங்களால் அன்று மாலை அவ்விடம் செல்ல நேர்ந்தது. தந்தி கிடைக்கப்பெற்ற ஆதீன கர்த்தர் அவர்களை அவ்விடம் விட்டுப் பெயர்ந்து தம் நிலயிடமாகிய திருவாவடுதுறைக்கு எழுந்தருளினர். உடன் அவ்விடம் குறித்த கனவான்கள் ஒருவரும் செல்லப் பகலவன் குடபாற்படும் பொழுதாயிருந்தது. அவர்களுள் வக்கீல் ஸ்ரீமான். C. சடகோப பிள்ளை அவர்கள் உரையாளராய் அமர்ந்தனர்.

அந்தச் செல்வரும் அவர்களை உபசரிக்கும் பான்மை மிகுதியும் விளங்கிற்று. குறித்த கனவான்கள் தங்கள் வருகையைப் பரிசனர் வழித் தெரிவித்துக் கர்த்தர் அவர்களைக் காண விரும்பினார்கள். அவர்கள் ஆனரெபிள் ஸ்ரீமான் ஷண்முகம் பிள்ளை அவர்களைத் தருவித்துத் தனியே பேசிக்கொண்டிருந்த பின்னர் மாலை 9-30-க்கு ஏனையவர்களை அழைத்தனர். அந்தச் செல்வரும் சன்னிதானம் வந்த கனவான்களைத் தகுதி நோக்கித் தனித்தனி உபசரித்தனர். அப்பால் மாலையணிப்பு தீபாராதனை முதலிய சடங்காசாரங்களும் நிகழ்ந்தன. விசேஷ ஆடம்பரங்கள் அமைந்த நிலவிவடப் பொலிவுடன் ஆதீன கர்த்தர் அவர்கள் வீற்றிருக்க உரையாளர் விஷயம் தொடங்கவும், சன்னிதானமும் வேறு காரியமாய் அங்கு வந்திருந்த கனவான் ஒருவரும் உண்டி அருந்தும் நேரமாயிற்று அதற்குச் செல்வாமென உரைத்தனர்.

அது கழிய மறுபடியும் சந்நிதானத்தின் சமயத்தை விரும்பி எல்லோரும் எதிர்பார்த்து நிற்கச் சந்நிதானம் ஆனரெபிள் ஸ்ரீமான். ஷண்முகம் பிள்ளையவர்களைத் தனியேகூட்டிச் சிறிதுநேரம் பேசியும் அமைச்சரைத் தருவித்துத் தனியே சிறிதுநேரம் பேசிக்கொண்டுமிருந்தனர். அப்பால் உரையாளர் மேற்குறித்த தீர்மானங்கள் அடங்கிய அச்சுக் கடிதத்தை நீட்டி அதன் விவரங்களைச் சொல்ல உன்னவும் கர்த்தர் அவர்கள் அதனை ஒருமுகமாய் வாங்கிவைத்தனர். அந்தச் சமயத்தில் அமைச்சர் அத் தீர்மானங்களை வாசிக்க எத்தனிக்க அவையெல்லாம் இக் கடிதத்திலிருக்கின்றதல்லவா என்று சொல்லி இதனை ரிக்கார்டிற் சேர்த்துக் கொள்ளுவோம் என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு அவர் அவர்களைத் தனித்தனி வழியனுப்பும் ஆசாரங்கள் நடந்தன. அப்பொழுது கழகத்தலைவர் அவர்கள் இப்பொழுது சன்னிதானத்துக்கு விடை கொடுக்க அவகாசப்படாவிட்டாலும் பின்னரேனும் விடையளித்தால் அவர்கட்குப் பெருமையும் தம்மனுப்பிட்டோருக்குக் கௌரவமும் ஆகுமென் றறிவித்துத் தக்கமொழி தாவில்லை. அப்பால் விடைபெற்றுக்கொள்ளவா என்று கேட்டதற்கும் அப்படியே என்று விடைமட்டிலும் கிடைத்தது.

முன்கொடுத்த மொழியினையே பொன்போற் போற்றியதாகத் தெரிந்தது. இவ்விதமாகக் குறித்த கனவான்கள் வழிவிட்டனுப்பப் பட்டதிலிருந்து அவர்களுக்கு முடிவான பதிலொன்றும் அளிக்கச் சந்நிதானம் திருவுளம் பற்றாததாய்த் தெரிந்தமையை இங்கு கூடிய சைவ மகா சங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,
S. T. Ponnambalanadan.
C. Sadagopa Pillai.
சிவஞான தேசிகன்.
S. Rm. M. Ct. Pethachi Chetti.

இவ்வொற்றி லொருவராகிய ஆனரேபிள் ஸ்ரீமான் S. T. ஷண்முகம் பிள்ளையவர்கள் தனியே சம்பாஷித்தபோது பண்டார சந்நிதி அவர்கள் தங்கள் ஆதீன வரவு செலவு கணக்குகளை தங்கள் ஆதீனத்தைச் சேர்ந்த சிஷ்யர்களுடைய பரிசீலனைக்கு ஒப்புவிக்க யாதொரு ஆக்ஷேபனை யுமில்லையெனத் தெரிவித்ததாக மற்ற உறுப்பினர்க்கு அவ்விடத்தில் மடாதிபதி அவர்களின் அந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். ஆனால் நாங்கள் 6 பேரும் ஒன்று சேர்ந்து பார்த்த காலத்தில் இவ்வித விடை கொடுக்கவில்லை.

இங்ஙனம்,
S. T. Shunmugam.

அதன்மேல் அடியிற்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுப் பொதுஜன சம்மதமாய்த் தீர்மானிக்கப்பட்டன.

I. நேரில் தெரிவித்து முடித்துவிட்டபடியால் வியவகார வழியாகவோ உட்கழகத்தாருக்கு யுக்தமாய்த் தோன்றுகிற வேறுவிதமாயோ முயன்று கிடைக்கின்ற முடிவை நான்காவது சைவ மகா சங்கத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

இது ஸ்ரீமான். V. S. சிவஞான தேசிகரவர்களால் கொண்டுவரப் பட்டு ஸ்ரீமான். N. A. V. சோமசுந்தரம் பிள்ளை B. A. B. L. அவர்களால் திருத்தம் செய்யப்பட்டு ஸ்ரீமான். C. சடகோப பிள்ளை அவர்களால் அனுருபித்து ஸ்ரீமான். K. G. கிருஷ்ணசாமி ஐயர், B. A., அவர்களால் ஆதரிக்கப்பட்டது.

II. குறித்த ஒற்றில் சேர்ந்த ஸ்ரீமான். சிவஞான தேசிகர் அவர்களிடத்தில் பண்டாரச்சந்நிதிகள் தெரியப்படுத்தினதாகச் சொன்ன அவ்வனைவயும் ரிப்போர்ட்டில் சேர்க்கவேண்டுமென்று ஸ்ரீமான். P. A. வேணு

வனலிங்கம் பிள்ளை அவர்களால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீமான். T. C. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் அநுருபிக்கப்பட்டது.

முப்பொருளுண்மை.

இதன் பொருள் மூன்று பொருள்களுள்ள தன்மை என்பதாம். மூன்று பொருள்களென்றால் சுக்குத் திப்பிலி மிளகா? சுவர்க்க மத்திய பாதாளமா? சோமசூரியாக்கினியா-வெனுள்ள பொருள்களாவென் றுசங்கை நிகழுமன்றோ. மேற்கூறிய பொருள்களிலொன்றன்று மற் றவையெனிற் பதி, பசு, பாசமென்கின்ற முப்பொருள்களேயாம். அற்றேல், பதிப்பொருள், பசுப்பொருள், பாசப்பொருள்களி னிலக்கணந் தானென்னையெனில், இவற்றிற் பதிப்பொரு ளிலக்கண முன்னர்க்கூறி பசுபாசப்பொருள்களி னிலக்கணம் பின்னர்க்கூறுவாம். பதியினியல்தா னென்னையெனிற் கூறுதும். பதியென்ற சொற்குப் பொருள் காக்கிறவ னென்பதாம். பா-காத்தல்-தி-வினைமுதற்பொருள் விகுதியாகலின் அற் றேல் எவற்றைக் காக்கிறவன் அப் பதியெனிற் சர்வசராசரப் பிரபஞ்சங் களையாம். இப் பிரபஞ்ச மநாதியே நிலைபெற்றுள்ளது இதற்கொரு பதி வேண்டாமெனில், நித்தியமென்கிற பிரபஞ்சம் அநித்தியமென்று காட்டி டற்கு அநுமான முதலிய பிரமாணங்கள் வேண்டாம். பூதகாரியமான இவ்வுலகிற் பொருந்திய பொருள்களெல்லாம் பூமியின்கண்ணே கன்ம முறையிலா முதல்வன் சங்கற்பத்தினால் உற்பத்தி நாசமாதல் பிரத்தியட் சப்பிரமாணமாகக் காண்டலின், தானே தோன்றி நின்றழியும் பிரபஞ்சத் திற்கோர் பதி வேண்டுங்கொலெனில், இயல்பாயுள்ள பொருட்கு ஒருபோ துண்டாகி யொருபோது இன்றாகிக் காரியப்படுந் தன்மை யில்லையாகை யால் ஒருதலையாக ஓர் பதி வேண்டப்படுமென்க. அங்ஙனந் தோன்றி நின்றழிதலே இப் பிரபஞ்சத்தின் இயற்கையெனில், எது காரியப்படும் அஃதியல்பன்றாம் பூதகாரியமே தொழிலாகையால் அப் பூதங்களே யத் தொழிலைச் செய்கிறதெனில், அப் பூதங்கள் ஜடமாகையாற் றாமே தொழிற்படா. அத் தொழிலை யுண்டாக்குவானொரு பதி வேண்டும். அவனவளதுவெனுமவை மூவினைமையிற் றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம் அந்தமாதி யென்மனார் புலவர் என்ற சுருதியானுமோர் பதி யிப்பிரபஞ்சங் காரியப்படுதற்கு வேண்டுமென் றுணர்க. அற்றே லிப் பிரபஞ்சத் தொட்டாவாதி மத்தியாந்தப்படுதல் ஒரு பதியாலெனில்

அவன் விகாரியாகானோவெனில், ஆதித்தன் சந்நிதியிற் றாமரையாதி மலரும். சூரியகாந்தக்கல் லக்கினியை யுமிழும் தண்ணீர் வற்றும் ஆயினும் அவ் வாதித்தன் விகாரியாகானது போல முதல்வனும் விகாரமற்றிருப்பன். பதி சிருட்டியாதி கிருத்தியங்களை யென்ன பயன் கருதிச் செய்கிறானெனில் ஆன்மாக்கட் கனுக்கிரகம் கருதிச் செய்கின்றானென்பதே துணிபாம். பதியவ்வாறு அனுக்கிரகமுடையனேல் சங்கரிப்பானேன்? சங்கரித்தல் என்பதற்குப்பொருள் ஆன்மாக்கட்கிருவினை நுகர்ச்சியாலுற்ற விளைப்பை யொழித்தற்பொருட்டுக் காரியங்களை முதற்காரணத்திலடக்கித் தேகங்களைப்பிரித்து அறிவு, இச்சைத்தொழில்களை மறைத்தலாம். அவ்வாறிளைப்பாற்றாமல் ஆன்மாக்கள் துக்கமனுபவிக்கும்படி மீளவுஞ் சிருட்டிப்பானேன்? மல நீக்குதலுக்குக் காரணமாக வான்மாக்கட்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்துக் கன்மத்தைத் தொலைப்பித்தல் அதாவது, முதற்காரணத்திலிருந்து காரியத்தை வெளிப்படுத்தலுந் தேகங்களைக் கூட்டி மறைந்திருந்த வறிவு இச்சை தொழில்களை வெளிப்படுத்தலுமாம். அங்ஙனமாயின் சிருட்டித்தபின் மலத்தைப் பாகப்படுத்தித் தனது திருவடியிற் கூட்டிக்கொள்ளாது நெடுங்காலந் திதியின்கண் நிறுத்துவானேன்? ஆன்மாக்கள் செய்த கன்ம மிகுதியாயிருக்கையினாலந்தக் கன்மம் புசித்துத் தொலைப்பிக்கவேண்டியேயாம். இங்ஙனஞ் செய்யின் அப் பதி யான்மாக்களை மறைப்பிப்பானேன்? போகங்கள் புசித்துத் தொலைத்து கன்மவொப்பில் மலங்களெல்லாம் போகத்தான், இஃதொக்கும் அனுக்கிரகமென்றதென்ன? குற்றத்தைப் பொருந்தியிருக்கிற பாச பந்தங்களைப் போக்கி யான்மாக்களை முத்தி நெறியிற் சேர்த்தலாம். முன் சொன்ன நான்கு மனுக்கிரகமல்லவோ அந் நான்கு மநுக்கிரகமேயாம். எங்ஙனம், அநுக்கிரக மோட்சத்திற்குக் காரணம் ஏனைய நான்கு மநுக்கிரக நிமித்தமாக மலபரிபாகத்திற்கும் கன்ம நாசத்திற்கும் போகத்திற்குங் காரணம். இவற்றுள் சங்காரம், கரும நாசத்திற்கும், மாயா சாமர்த்திய வுற்பத்திக்கும், உயிர்கள் இளைப்பாறுதற்குமாம். சிருட்டி போக சாதன சம்பத்திற்காம். திதி பக்குவ போக கரும போகத்திற்கும் கருமார்ச்சனத்திற்குமாம். திரோபவம் போகத்திலழுந்தற்கும் கருமநாசத்திற்கும் மலபாகத்திற்கும் காரணமாம். இவ்வாறு பஞ்சகிருத்திய கருத்தராய் விளங்கும் பதியினுண்மைதான் யாதெனிற் கூறுதும், அப் பதிதான் தனக்கொரு முதலும் முடிவுமில்லாதவனாய், ஒருவராலுமின்னபடியென றளந்தறியப்படாதவனாய் இருக்கையில், முதல்வனின்னனென்றும் இன்னனாகானென்றும், இன்னதாமென்றும் இன்னதாகாதென்றும், இன்னதாகி வருவனென்றும் இன்னதாகி வாரானென்றும், சொல்லுகைக்குண்மையாக யாதொரு வழக்குமில்லை. அன்றியும் விகாரப்படுதற்குக் காரணம் பரதந்திரம்-ஏகதேசமாகுதற்குக் காரணம் சிற்றுணர்வுஞ் சிறு செயல்களும் தொடக்குறுதற்குக் காரணம் விருப்பு வெறுப்புக்களுமாம். அநாதி முத்த

சித்துருவனுகிய முதல்வனிடத் தவ் வுபாதிகளின்மையானும் ஆன்ம போதத்தால் அதுவிதுவென்று சுட்டியறியப்படாத குறைவற்ற நிறைந்த ஞானமே தனக்குத் திருமேனியாக வுடையவனுகையானும் எப்பொழுது மொருதன்மையாயிருக்கிற சருவஞ்ஞத்துவத்தையும் சருவகிருத்தியத் தையுந் தனக்குள்ளவனுகையானும் பிரியாப்பிரியங்கள் தன்னிடத்துப் பொருந்தப்படாதவனுகையானும் தனக்கு வேண்டின வடிவு தானே யெடுத்துக்கொள்வன். சீவன்முத்தர் தேகத்தைக் கிருபையினுலே தனது திருமேனியாக வதிட்டித்துக்கொண்டு கிருத்தியங்களைப் பண்ணுவன். அற்றேல் பரமகாரணனுகிய பதி சகளீகரித்துக் கிருத்தியங்களைச் செய் யிற் றோடமின்றோவெனில், இன்றாம். என்னை? அப் பசுபதி கிருபையி ஞற் றிருமேனிகொண்டு தேவர்கட்குத் தேவவிருடிகட்கும் மானிடவிருடி கட்கும் ஏனையோர்க்கும் வேதாகமங்களை யுபதேசியாதிருக்கிற் சொல்லுவா ரும் கேட்பாருமின்றித் தர்மார்த்த காம மோக்ஷமென்னும் புருடார்த்தங்க ளற்றுப்போம். பதியின் வடிவுதானெத்தன்மையதெனில் பதியினதங்க மும் ஆன்மாக்களி னநுக்கிரகார்த்தமாகச் சிற்சத்தி சொரூபமே. கரசர ணுதியான பிரத்தியங்கமும் கிருபையினுலான ஞான சொரூபமே. சாங்க மும் ஞான சொரூபமே. உபாங்கமும் ஞான சொரூபமே. இங்ஙன மான திருமேனிக்கு மாயோபாதியில்லை ஆன்மாக்களின் போக மோட் சார்த்தமாகப்பண்ணுந் தியானபூசையின்பொருட்டுக் கிருபையினுலுண் டாகிய பாவனுரூப சைதன்ய விக்கிரகமேயது-இம்மட்டுங் கூறியவாற்றுற் கிடைத்த பொருள் பிரபஞ்ச முத்தொழிற்படுகையால் இதற்கொரு பதி யுண்டென்றும் தன்னருளாற் பஞ்சகிருத்தியங்களை யப்பதி செய்தவந்தா லுயினும் அவன் விகாரமடையானென்றும் அக்கிருத்தியங்களும் ஆன்மாக் களின் அநுக்கிரகார்த்தமேயென்றும் தன்னிச்சைபோற் றிருமேனிகொள் வனென்றும் முற்றறிவு முதலிய வெண்குணமு மியல்பாக வுள்ளவனென் றும் கூறிய பொருளும் பிறவுமாம்.

பசுவிலக்கணம்.

இதன்பொருள். பச்-பந்தித்தல் உ-செயப்படுபொருள் விகுதி. (பசு) அணு-இயமானன் ஆன்மாவென்பன வொரு பொருட்சொற்கள்.

கா॥ சியமாகிய வுலகம் அசேதனமாதலின் றனக்கும் வரம்பி லின் மடையதாதலின் பதிக்கும் குடம் முதலியனபோல பரிணாமமுடை யமையா பதுபோகிக்கப்படுதலாற் சடமேயாதலின் சீரத்துக்கும் பயன் படுவதன்று பயனற்றதுமன்று ஆகலின் பிறர்க்கே பயன்படுவதாதலாற் காரியமாகிய வுலகத்தினைப்பயம் பயினைக் கொள்வோராகிய பசுக்களுளர். உடல் பொறி விடய முதலிய [illegible] காலுக ன்று

முறையே இது நானன்று இது நானன்றெனவோரோ வொன்றாகக்கண்டு நீங்கி வழியறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுள்ளது. அவ்வறிவுதானே பசுவாகிய ஆன்மாவெனப்படும். இவ்வான்மாக்கள் பல. இவை ஆணவ மலத்தால் அணுத்தன்மை யடைதலின் அணுவெனவும் எல்லாத் தத்துவங்கட்குந் தலைமைத்தன்மை யுண்மையின் இயமானனெனவும் நல்லதனன்மையையும் தீயதின் தீமையையு மறிதலின் ஆன்மாவெனவும் பெயர் பெறும். இவை காட்டக்காணுஞ் சித்தேயன்றித் தாமேகாணுஞ் சித்தல்ல. தமக்கென வோர் சுதந்தர மற்றவை. சிறுதொழி லுடையவை-யித்தகை யான்மாக்கள் முத்திறப்படுவர். அவர் விஞ்ஞான கலர், பிரளய கலர், சகலர் என்பவராம். இம் மூவரில் விஞ்ஞான கலர் ஆணவ மலத்தாரென்றும் பிரளயா கலர் ஆணவங் கன்மமென்னு மிருமலமுடையரென்றும் சகலர் ஆணவங் கன்மம் மாயையென்னு மும்மலமுடையரென்றும் சொல்லப்படுவர். மாயை திரோதாயி யென்னு மிரண்டு மலமும் மூவகை யான்மாக்களுக்கு முள. அவை கூட்டி யெண்ணுமிடத்து விஞ்ஞான கலர்க்கு மும்மலமும் பிரளயா கலர்க்கு நான்கு மலமும் சகலர்க்கு ஐந்து மலமும் அமையும். அன்றியும் ஆசாரியனால் தீக்கையில் கலாதத்துவமளவாகக் கன்மங்களைச் சோதிக்கப்படுகையால்தான் மாயையினுடையவும் ஆன்மாவினுடையவும் வியாபாரங்களைப் பிரித்தறிகின்ற ஞானத்தினாலும் தானந்தவாதார யோகத்தியானுதியில் மிகுந்த தவசித்தியால் கன்மானுகுணமாகத் தனுவை யெடுத்துக் கன்மங்கள் புசித்துத் தொலைந்த காலத்தில் வைராக்கியத்தாலும் சந்நியாசி யநுட்டானத்தாலும் எல்லாக் கன்மங்களும் நசிக்க அதற்காதீனமாயிருக்கிற மாயையுமின்றி யாணவ மலமொன்று சேட்டித்து நிற்கையிலுண்டானது விஞ்ஞானகலர்ப்பெயர். இவ் விஞ்ஞான கலர் பக்குவமலர் அபக்குவமலரென விருவகையர். பக்குவ மலராவார் மலபரிபாக மிகுதியால் முதல்வனனுக்கிரகம் பெற்றுச் சாயுச்சியத்தை யடைவர். அபக்குவ மலராவார் மலபரிபாக மந்தியத்தில் முதல்வனவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி யனுக்கிரகஞ் செய்யப்பட்டிருக்கையினும் சுத்தாத்துவாவிற் கதிகாரிகளாகையாற் அதிகார மலத்தைப் பொருந்தி யிருப்பர். இவ்வாறு அபரமுத்தி பெற்றவர்கள் பிரணவர், சுதாக்கியர், சிவர், தீர்த்தர், காரணர்; சுசீவர், சூட்சுமர், காலர். தேசசர், அங்கு எனக்கூறிய அணு சதாசிவர் பதின்மரும் அதோ மாயா புவனத்துள்ளார்க்குப் பக்குவம் வந்தவிடத்து அனுக்கிரகஞ்செய்து சதாசிவ தத்துவத்திற் போகங்கள் புசித்து அந்த மூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண்டிருப்பார்கள். இவர்கட்குப் போகத்தில் வைராக்கியம் பிறந்தால் அப்பொழுது முதல்வன் பிரசன்னராக மேலான பதத்தை யடைவார்கள். இனி பிரளயாகலர் பக்குவமலர் அபக்குவமலரென விருவகைப்படுவர். பக்குவமலராவார் மலபரிபாக மிகுதியால் சிலர்க் கெல்லாக் கன்மமும் பக்குவமா யுள்ளளவில் முதல்வன், தீவிர. தீவிரதரமென்னும் சத்தி

யைப் பதித்து தீவிரதர தீக்கையாற் றிருக்கண் சாத்தி அவர்கள் பாசத்தைச் சேதித்து அவர்கள் ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பித்து மோட்சத்தை யடைவிப்பன். மற்றப் பக்குவரைக் கன்மானுகுணமாகப் போகத்தைப் புசிப்பித்துத் தொலைக்கையின் பொருட்டுப் புரியட்டகத்தைப் புவனசத்தேகமாகிய யோனிகடோறும் பிறந்திறந்து திரிந்து மலகன்மங்கள் பரிபாகமானவாறே முதல்வன் சத்தியைப் பதித்தவர்கள் அறிவை விளக்கி மோட்சத்தை யடைவிப்பன். இனிச் சகலராவார் தேவர்கள், இருடியர், மானுடர் முதலாயினோர் இவர்களில் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவரென மூவகையர். அதிபக்குவராகிய தேவர்கள் தானவர்கள் முதலாயினோரை முதல்வன் தீவிர முதலிய நால்வகைச் சத்தியைப் பதித்துத் திவ்வியமான திருமேனியை யதிட்டித்துக்கொண்டவர்கள் பாசத்தைச் சேதித்து அவர்கள் ஞானக்கிரியைகளை விளக்கித் திரிகால முடிவுமளவுஞ் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசிக்கச்செய்து மகாசங்காரத்தில் மோட்சமடைவிப்பன். இனி மந்த மலபாகராயுள்ள வைநயிகர் முதலியோரை முதல்வன் மந்தம் மந்ததரமெனச் சொல்லப்பட்ட சத்தியைப் பதித்து ஆசிரியனை யதிட்டித்து அவர்கட்கனுகுணமாகத் தீட்சையைச் செய்து அவரவர்கள் யாதொரு பதத்திலேயிருந்து போகம் புசிக்கவெண்ணினார்கள். அந்தப் பதத்திலே யோசியா நிற்பன் மலபரிபாகம் வராத வபக்குவரை அவரவர் செய்த கன்மத்துக்கீடாகப் பௌதிக சரீரங்களை யெடுப்பித்துப் போகங்களைப் புசிப்பித்துத் தொலைத்தவாறே மலபாகம் பிறக்க ஆசிரியனுப் தீட்சையைப் பண்ணி மோட்சத்திற் கருகராக்குவன். இவையே மூவகை யான்ம வியல்பு. இனி யிதுகாறுங் கூறியவற்றின் தொகைப்பொருள் கூறுதும் அநாதி மலபந்தராய், அகணிதராய், நித்தராய் ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடந்து தத்தமக்குண்டான புண்ணிய பாவங்களுக்கீடான தொருடலை முதல்வன் காருண்ணியத்தினாற் பொருந்தி அவனவளதுவாகிய வுடம்பென்னத் தானென்னத் தோன்றாமற் பிரிவற்று நின்று அவ்வுடம்புடன் கூடுகையி லெண்ணிறந்த போகங்களை முயற்சியாற் புசித்து அந்தந்தப் புசிப்பாலுண்டாகிய விதாகிதங்களால் மீளவும் புண்ணிய பாவங்களை யார்ச்சித்துக்கொண்டு அவற்றால் இறந்து பிறந்து வருந்துவார்க்கு இருவினையொப்பு மலபரிபாக முண்டாகச் சத்திநிபாதம் விளைந்தவழி யாசிரியனாற் றீட்சையுற்று மும்மலங்களை நீக்க அழிந்தார்களுமில்லையாய் முதல்வனானார்களுமில்லையாய் முதல்வனை நீக் காரியப்பட்டார்களுமில்லையாய் யம்முதல்வனுக்கு வேறாயிருந்தார்களுமில்லையாய் அம்முதல்வனுடன் சுத்தாத்துவித நிலையினை யடைவர் என்பதாம்.

பாசவிலக்கணம்.

பசுக்கள் தடுக்கப்பட்ட வறிவாற்றலுடையராகித் தம்வசமின்றிக் குற்றமுடையனவாகிய நாநாவித போகம்பற்றி யழுத்தலின் அதற்குக்

காரணமாகிய பாசமுளது. இப்பாச மைந்து வகைப்படும். அவை, அறியாமை மிகவுண்டாம்படி ஆன்மாக்கடோறும் சகசமா யனாதியாயிருக்கும் ஆணவமலமொன்று. இந்த வாணவமலத்துடன் கூடிநின்று அது பக்குவப்படுமளவும் ஆன்மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம்வருவிக்கின்ற திரோதமலமொன்று ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளைக்கொடுத்து மயக்கத்தைச்செய்யும் மாயாகாரண மலமொன்று. ஆன்மாக்கடோறும் விரிந்தனுபவமாய் நிற்கும் கன்மமலமொன்று. ஆன்மாக்களின் சுகதுக்க விளைவுகட்கெல்லாம் இடமாய்நின்று அவற்றின் அறிவு இச்சைசெயல்களை மயக்கேதசப்படுத்தும். மாயாகாரியமாகிய மாயேயமலமொன்று என்பனவாம். இவையிற்றில் ஆணவமலம் ஒன்றதாயனேக சத்தியுடையதாயென்றபடி எண்ணிறந்த ஆன்மாக்களுடன் கூடிநின்று மறைந்துதானென்றுயிருப்பதாய் ஆன்மாக்களது பக்குவாபக்குவங்கட்குத் தக்கதாக வவரவரிடத்தில் மறைந்து நின்று அந்தவந்த ஆன்மபோத மீட்சியினீங்குவதாயிருக்கின்ற தன் காரியமாகிய எண்ணிறந்த சத்திகளையுடையதாய் செறிந்த விருளென்னும்படி நின்று ஆன்மாக்கட்கு மிக்க மறைப்புச்செய்வதாய் செம்பினுடன் கூடியகாளிதமானது அந்தச் செம்புள்ளவன்றே. யதனைமறைத்து அதனுள்ளும் புறம்பும் கவர்ந்து நெல்லிற்குமியும் நீகழ் செம்பினிற் களிம்புஞ்சொல்லிற் புதிதன்று தொன்மையே பொன்றபடி வெட்டுவாய்தோறும் நின்றாற்போல ஆன்மபோதத்துடன் கலந்துமறைந்து கேவலத்தில் தனது ஆவாரகசத்தியாலும் சகலத்தில் தனது அதோநியாமிகசத்தியாலும் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நின்ற அநாதிமலமாய் ஆன்மாவினிச்சா ஞானக்கிரியைகள் சற்றுஞ் சேவியாதபடி மணியையடக்கிய பாம்புபோலவும், பொன்னையடக்கிய செம்பிற் களிம்புபோலவும் நீரையடக்கிய வுப்புப்போலவும், நெருப்பையடக்கிய விறகுபோலவும், அரிசியை மறைத்த தவிடுபோலவும், கண்ணைமறைத்த விருள் போலவும் மறைத்துநிற்கும். ஆயின் இப்பூதவிருளானது தன்னைக் காட்டிநிற்கும். ஆணவவிருளானது தன்னையுங்காட்டாது, தனக்குள்ளேயிருக்கிற வான்மாவையுங் காட்டாது இஃதிவ்வாறாக மாயாமலத்தை விசாரிப்பின் இம்மாயாமலமானது ஆன்மாக்கள் தனுவாதிகள் பெறுதற்கிடமாயுள்ளது. இம்மாயை மலகன்மங்களுடன் விரவாது, சுத்த காரியப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது சுத்த மாயையெனப்படும். இம்மாயையின் கீழாயடங்கி மலகன்மங்களோடு விரவிச் சுத்தாசுத்த காரியப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது அசுத்த மாயையெனப்படும். இவ்வசுத்த மாயையின் தூலபரிணாமமாயிருப்பது பிரகிருதிமாயை என்னப்படும். இம்மூன்றிற்கும் விந்துமோகினிமானென்றும் சொல்லப்படும். இம்மாயைகளிற் சருவ தத்துவங்களுந் தோன்றுமுறைகளை விரிந்த நூல்களிற் காண்க. இதுவும் பாசமே.

ஸ்ரீமெய் கண்ட தேவர் ருடால்ப் ஸ்டைனர்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அன்பர்காள்!

"பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவர்" என்னும் கிழக்கே உள்ளதாகிய நமது தேசத்து உண்மை ஞான குரவரும், "தத்துவமகன்ற வத்திறமுணர்ந்த Rudolf Steiner" என்னும் மேற்கே உள்ளதாகிய ஜர்மன் தேசத்து உண்மைத் தத்துவ ஞானியும், என்பது இவ்வுபந்நியாசத்தின் தலைப்பெயராம். இத்தலைப் பெயரே கீழும் மேலுமாக நிற்பது என்னையோவெனில்: என்னை ஆளாக்கி என்பணி கொண்டருளும் சிவஞானதேசிகன் நின்ற நிலையே யதற்குக் காரணமாம்: "கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மெனீரே" என்ற உண்மைத் திருவாக்கை, நினைவித்து, எம்மிறைவனது திருவடியே ஒளிஞான மென்பதனையும் அந்நினைப்பினின்றே உணர்த்தா துணர்த்தினான். அதுபற்றியே அடியேனும் கிழக்கிலும் மேற்கிலும் "புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே" அவதரித்து குழந்தைப் பருவத்திலேயே "நவமாருந் தத்துவ ஞானத்தை" நல்கப்பெற்ற அரும் பெருஞ் சிறப்புடைய உண்மை ஞானிகளாகிய மெய்கண்ட தேவர் Rudolf Steiner என்னும் இவ்விருவர்கள் முறையே உலகர்க் களித்துள்ள "சிவஞானபோதம்" "Way of Initiation" என்னும் இரண்டு நூல்களிலும் காணப்படும். இவர்களின் கருத்து ஒன்றென்பதையும், வழி ஒன்றென்பதையும், பயன் ஒன்றென்பதையும் எளியேனுக்கு வெளிவந்த அளவு சிறிது நேரத்தில் விளக்க முயல்கின்றேன்.

பெரியார் இருவர் கருத்தினையும் ஒருங்கமைத்து எவ்வாற்றானும் உய்த்துணரும் ஆற்றல் சிறியேற்கு இல்லை என்பது தானே போதருமாயினும் "என் கடன் பணிசெய்து கிடப்பதே அமைவுடைத்தாகலின்

கன்மமலம்.

இக்கன்மமலமானது ஆன்மாக்களெடுக்கப்பட்ட வுடல்களுக்கு முன்னிலக்காரணமாய் பலவிதமான புசிப்புகளை யுண்டாக்குவதாய் சனன மரணத்தை யுண்டாக்குவதாய் பல பேதங்களாயிருப்பதாய் ஆன்மாக்க டோறுஞ் சென்று பொருந்துவதாய் மனவாக்குக் காயத்தால் செய்யப்படு மியல்பிற்றாய் புத்தியின் கணிற்பதாய் இருவினையான புண்ணிய பாவங் களாய் சங்காரகாலத்து மாயாகாரணத்திலே சென்று பொருந்துவதாயுள் ளது. இம்மலம் ஆன்மாக்கடோறும் விரிந்தனுபவமாய் நிற்பதை விரிந்த நூல்களிற்காண்க. இதுவும் பாசமே.

திரோதானமலம்.

இத்திரோதான மலமானது ஆணவமல நசிக்குமாறு பதியினருட் சத்தி பந்தவாணவ மலத்துடன்கூடித் திரோபவித்துநின்று காரியப் படுத்தி மலபாகம் வருத்தின அருளானது. அவர்களிடத்துக் கிருபை சுரந்து பதியோடிரண்டறப் பொருந்து முறைமையை யுண்டாக்கும். இதுவும் பாசமே.

மாயேயமலம்.

இம்மலமானது ஆன்மாக்கட்கு மலத்தால் விழுங்கப்பட்ட ஞானக்கிரியைகளை வெளிப்படுத்தும்பொருட்டும் தாஞ்செய்த வினைகளை யநுபவித் தொழிக்கும் பொருட்டும் இன்றியமையாத தனுகரண புவன போகங்கள் காரியப்படும் அவசரத்தும் முற்கூறிய அசுத்தமாயாகாரணத்தி னின்று சிவசத்திகள் அவற்றைத் தோற்றுவிக்க அவற்றுடன் பொருந்தி நடத்தப்பட்ட சுத்தமாயையின் திரட்சியாகிய சுத்த தத்துவங்களேயாம். இதுவும் பாசமேயாம். இவ்வைந்து மலங்களின் செயல்களெல்லாம் விரிந்த நூல்களிற் காண்க.

முப்பொருண்மை யென்ற பதிபசுபாசவியல் ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டது. இவற்றின் பரப்பையெல்லாம் மெய்கண்ட சாஸ்திர முதலிய பரந்த நூல்களிற் காண்க.

மறுத்தற்கஞ்சி பின்வாங்காது முன்வந்தேன். கொண்டுமுடிக்கும் ஆற்றல் இல்லாதவழி எடுத்த எக்காரியத்திலும் குற்றம் நேர்வது இயல்பே என்பது ஒருதலையாயினும் "அரன்பணியில் நின்றிடவுமகலுங் குற்றம்" அரன்பணியில் ஒருவன் கருத்து நிலைத்திடில் அவன் செய்தொழிலில் உலகர்க்கு குற்றமெனத்தோன்றும் வெளிக்குற்றமெல்லாம், கருத்துவகையாற் பயனளிக்கும். எம்மிறைவர்க்குக் குற்றமெனத் தோன்றுதொழியுமாகலான், அதுபோலவே, நமது சைவசித்தாந்த உண்மை எவ்வாற்றேனும், எவ்வளவேனும், எத்திறத்தேனும், எங்கும் பரவவேண்டுமென்பதே அடியேனது உள்ளக்கருத்து என்பதை அன்புடைய நீங்களும் அறிந்து இதிற் காணப்படும் குற்றங்களைப் பாராட்டமாட்டீர்கள் என்றே துணிந்தனன்.

அன்பர்காள் !

முற்செய்வினையின் நற்பயனென்றே, நன்மறை பயிலும் தென்மொழிநாட்டில் பிறந்த நம்மனோர் உய்யுமாறு ஸ்ரீமெய்கண்டதேவர் அருளிய 'சிவஞான போதமானது, கருணை மாகடலாகிய எமதிறைவனே ஆன்மாக்கட்கு உபதேசித்தற்பொருட்டு சகளீகரித்த அருட்கோலமாகிய தக்ஷிணாமூர்த்தியினது திருக்கரத்து அமைந்துள்ள ஒப்பற்ற ஓர் ஏடாம். அது பன்னிரண்டு சூத்திரங்களை யுடையது. அவற்றுள் பன்னிரண்டாவது சூத்திரம் வருமாறு:—

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்ப ரொடுமரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலய ந்தானு மரனெனத் தொழுமே.

இதற்கு பொல்லாப் பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய சூர்ணிக் கொத்து வருமாறு:—

(1) மும்மலங்களையுங் களைக.

(2) சிவஞானிகளுடனே கூடுக.

(3) சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவனென்றே தேறி வழிபடுக.

(4) வழிபடாமையை ஒழிக.

இதனையே அடியேற்கு பிடிகையாகப் பெற்றுள்ளேன்.

பதினொரு சூத்திரம். இற்க. ஈண்டு சீவன் முத்திக்கண் நிகழுரி யல்பு கூறியுள்ள இப்பன்னிரண்டாவது சூத்திரத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டது எற்றுக்கெனின்; மேலே காட்டியபடி அது பொது வகையில் எவர்க்கும் ஆணையாகத் தந்தபடியாலும், அதன்படியே நடக்க முயல்வதே அறிவுடையார் எவர்க்கும் கடனாதலானும், மற்றெல்லாச் சூத்திரத்தின் முடிவாதலானும், இப்பிறப்பு ஒன்றிலேயே சீவன்முத்தராக வைத்தாளும் சித்தாந்த உண்மைஅதுவே யாதலானு மென்க.

இனி Rudolf Steiner எழுதியுள்ள "Way of initiation" என்னும் அரிய புத்தகத்திலும், பின்வருமாறு, சீவன்முத்திக்கண் நிகழுமியல்பு, விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது.

(1)	Probation	=	Dis-association of personality.
(2)	Establishing Intercourse	=	Blending with the spirit.
(3)	Enlightenment	=	Opening of the Spiritual organs
(4)	Initiation	=	Self sacrifice and unselfish devotion for the Expansion of life side everywhere.

இனி, ஒவ்வொன்றையும் தனித்தனியே எடுத்து இருவர் கருத்தினையும் ஒருமித்து ஆங்காங்கு காணப்படும் விசேடத்தை அறிவோமாக:—

I. ஸ்ரீ. மெய்கண்டார்,

மும்மலங்களையும் களைக:— ஆணவம், மாயை, கன்மம் இவற்றைக் களைக, அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்துமாகலான். என்றார்.

Rudolf steiner = Dis-association of personality.

ஆன்மாவாகிய உன்னைப் பந்தித்திருக்கிறது மூன்று பலமுள்ள காரியங்கள். அவை, எண்ணம், இச்சை, செயல் என்பனவாம். அவற்றினின்று நீங்க வேண்டில் அதற்கு வழியைக் கேள். உன் எண்ணத்தினின்று

இச்சையையும், இச்சையினின்று செயலையும் பிரித்துவிடு. அவை ஒன்றோடொன்று சேரவேண்டுமானால் உன்னாலேயே அச்சேர்க்கை நேரவேண்டுமே யொழிய அவை, தாமாகவே சேர்ந்துகொள்ள விடக்கூடாது. அவ்வாறு நீ செய்வாயாகில் ஓர் காரியத்தில் எவ்வளவு அதிக இச்சை வந்தபோதிலும் அவ்விச்சையே காரணமாக, உடனே, அந்த நிமிடமே உன்னையன்றியே செயற்கு ஆரம்பிக்கமாட்டாய். அன்றியும், எவ்வளவு அதிக ஆசையைத் தரத்தக்க தொரு பொருளோ, எவ்வளவு அதிக அருவருப்பைத் தரத்தக்க தொரு பொருளோ அவற்றின் முன் நீ எதிர் நின்றாலும் ஆசை அல்லது வெறுப்பு என்னவேனும் உன் உள்ளே தோன்றவே தோன்றாது. நிற்சலனாய் நிற்கும் திடம் பெறுவாய். இன்னும், ஒன்றை நினைத்தமாத்திரத்திலேயே அந்நினைப்பே காரணமாய் நின்று உன்னை அடித்து ஒரு காரியத்தைச் செய்விப்ப தொழிந்து எத்தனையோ நினைப்பு நினைத்தாலும் எந்த நினைப்பின்வழியும் தொழிற்படாது தானாய் நிற்கும் வலி பெறுவாய். இன்னும் பிறர் ஊதியம் முதலிய காரணம் பற்றிச் செய்யும் அரிய தொழிலும் நினைத்த மாத்திரத்திலேயே பயன் ஒன்றும் எதிர் பாராது இவன் செய்வது என் கொல் என்று பிறர் திகைக்கும் வண்ணம், தொழிலை மாத்திரம் கருதிச் செய்யும்தொழில்வலியுடையவனாவாய்.

ஆதலால், மேற்சொன்ன மூன்றும் தாமாகவே ஒன்றின்பின் ஒன்றாகச் சேர்ந்து தொழிற்படுவதால் பந்தமுறுகிறாய். துன்பப்படுகிறாய். அவை உன் வசமாகில் அப்போது அவையே உனக்கு மிக்க நன்மை பயக்கும் கருவியாகின்றன. அவற்றை வசப்படுத்துதல் உன் கடமையாகும். பிறர் உனக்குச் செய்துகொடுக்கக் கூடியதல்ல. இவ்விதம் நீ செய்யாதுபோனால் ஞானம் என்பது உனக்கு வாராது. அறிதற்கரிய ஞானிகளின் கூட்டுறவும் உனக்கு ஏற்படாது. என்றனர்.

இங்கு ஆணவம், காமியம், கன்மம் என்பவைகளையே எண்ணம், இச்சை, செயல் என்று சொல்லப்பட்டன. ஆணவத்திற்கு எண்ணம் எப்படி பொருத்தமுறும் எனில் ஆணவத்திற்கும் மனதிற்கும் இருக்கும் ஒற்றுமை நோக்கியே யாம். ஆணவமானது சுட்டியறிதல். சுட்டுதல், எண்ணுதல் ஒரு பொருட் கிளவி. ஆகையால் ஆணவம் என்பதும் எண்ணம் என்பதும் ஒரு பொருள் மேலவாம்.

இனி, இவ்விருவர் கருத்தாலும் யாம் பெறுவது என்னென்று பார்ப்போம்.

1. களைக என்றபோது வேரோடும் நீக்குக என்ற பொருள் தருமாதலால், பற்றறக்கழித்தற்கு எதுவும் காரணமற்ற வழியேயன்றிக் காரியமற்ற வழி அல்லவென்பதும் அதினின்றே அறியக் கிடக்கின்றது. "சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது" என்றவிடத்தும் "சிந்தைக்குக் காரணமாகியது எதுவோ அதை அடக்காது விடுத்து காரியமாகிய சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது" என்றே பொருள் கொள்ளல் வேண்டும்.

மும்மலங் களைதல் சித்தமல மறுத்தலே யாதலானும் காரியமாகிய மனதிற்கு காரணமாய் இருப்பது அராகம். அதாவது, இச்சை முதலியனவே யாதலானும், Rudolf Steiner எடுத்துக் காட்டிய உபாயத்தை அறிவுடையார் சிந்திக்கற் பாலதே.

2. மும்மலங்களையும் களையப்பெற்றால்தான் சிவஞானிகளது கூட்டுறவு வரும் என்ற R.S. கருத்தே ஸ்ரீ. மெய்கண்டார் கருத்தும் என்பது "மும்மலங்களையும் களைக" என்றதின்பின் "சிவஞானிகளுடன் கூடுக" என்ற இரண்டாம் கூற்றின் இயைபு நோக்க நன்கு விளங்கும்.

II. ஸ்ரீ. மெய்கண்டார்,

"சிவஞானிகளுடனே கூடுக" அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவ ராகலான். என்றார்.

Rudolf Steiner:— Establish Intercourse Bending with the spirit.

எண்ணம், இச்சை, செயல்களின் பற்று விட்டொழிந்த நீ இப்போது பற்றவேண்டியது ஒன்றுண்டு. அது என்னவென்றால், "உண்மை" அதாவது நினைப்பு மறப்பு என்று உலகர் சொல்லும் விதமன்றி எக்காலத்திலும், உண்மை உன்னிடத்தில் நிகழவேண்டும். நீ அவ்வுண்மையே யாய் நிற்றல்வேண்டும். அறிவினால் தெரிந்திருத்தல் மாத்திரம் போதாது. நீ செய்யும் உலக காரியங்கள் எவற்றிலும் அவ் வுண்மையே காணப்படல் வேண்டும். எப்படி உணவானது உன் உடற்கு இன்றியமையாதது என்று அறிந்து உட்கொள்ளுகிறாயோ அதுபோலவே உண்மையானது உன் ஆன்மாவிற்கு இன்றியமையாதது என்று அறிந்து அறிந்த வழியே உன் வழக்கமும், உன் நோக்கமும், உன் செயலும் அவ் வுண்மையாகவே இருத்தல் வேண்டும். உன் உடலில் உயிர் எப்படி ஒன்றாய்ப் பிரித்தறிய

வாராத நிலையில் நிற்கிறதோ அதுபோலவே நீயும் உண்மையும் ஒன்றாயிருத்தல் வேண்டும். ஞானம் வெளி வேடத்தினால் உண்டாவதன்று. அது மிகவும் நுட்பமாயும், பிறர் அறியாத விதமாயும் உனது எண்ணமும், இச்சையும், செயலும் உள்ளே மாறுதலடையுந் தருவாயில் தானாகவே உண்டாகுங் காரியமாம். இவ்வுலகப் பொருளை இயக்கும் சக்தி உன் ஆசைக்கு நேரே சிறிதும் இல்லை. சற்று அசையவேண்டுமென்று நினைத்து நீ எவ்வளவு ஆசைப்பட்டாலும் ஒரு சிறு துரும்பும் உன் ஆசைக்கு இணங்கி அப்புறம் அசையாது. ஆனால், சூக்கும உலக இயல்பு அத்தன்மைத்தன்று. அங்குதான் உன் எண்ணமும், ஆசையும் மிகு பலமுடையது. மேம்பட்ட பலன் தரக்கூடியது. ஆதலால், உன்னை உண்மைக்கு வசமாக்கி நீ யென்பது கொஞ்சமேனும் தோன்றாது உண்மையேயாய் நிற்றல்வேண்டும். அவ்வாறு நிற்கும் நிலையில் யாவர் எது பேசினும் அவர் சொல்லின் வழியாய் உள்நுழைந்து அவர்களது ஆன்மா முழுமையும் ஊடுருவிச் சென்று உண்மையை அறியும் சம்பந்தம் உனக்கு உண்டாகும். இது பெற்றால்தான் ஞானிகள் உன்னோடு கலந்து பேசும் பாக்கியம் பெறுவாய். அவர்களால் மேலான ஞானமும் அடைவாய்.

இனி, இவ்விருவர் கருத்தாலும் யாம் பெறுவது என்னென்று பார்ப்போம்.

1. முன்னே "நீங்க" என்றதும் பின்னே "கூடுக" என்றதும் ஆன்மாவானது பொய்யாகிய மலத்தை விட்டால் மெய்யாகிய சிவத்தைப் பற்றும். ஒன்றையும் பற்றாது நிற்கும் இயல்புடைத்தன்று. என்ற ஆன்ம இலக்கணம் விளங்கும்.

(2) விளக்கற்றம் பார்த்து நிற்கும் இருள்போல் அறிவற்றம்பார்த்து நிற்பதாகிய மும்மலத் தியல்பு "கூடுக" என்பதினின்று பெறப்படுமாதலான் சீவன் முத்தியில் அஞ்சப்படுவதாகிய பாசத்தின் இயல்பும் விளங்கும்.

(3) காமமுடையார்க்கு கழி காமத்தார் சேர்க்கை இயல்பாயுள்ள காமத்தை அதிகப்படுத்துதற்கு ஏற்ற காரணமாதல்போல ஞான காமிக்கும் ஞானிகளது சேர்க்கையே ஞானத்தை அதிகப்படுத்தும் என்பதும் விளங்கும்.

(4) உள்ளும் புறம்பும் ஒரு தன்மையாகும் உண்மை நிலையே நிலை. அதுவே, ஞானிகளைக் கூடுதற்கு வழி என்பதும் விளங்கும். இதுபற்றியே திருமூலரும் "நினைவதும் வாய்மை மொழிவது மல்லார் கனைகழல் ஈசனைக் காணவொண் ணாதே" என்றார்.

(5) எண்ணம், இச்சை, செயல் உள்ளே மாறுதலடைய வேண்டும் என்றதால், எண்ணம் அல்லது மனம் புறப்பொருளிற் பற்றுவிட்டு ஏகமுகமாகும் இயல்பில் தன்னிலை கெட்டு அறிவு விளங்கப் பெறும். ஆகவே எண்ணம் மாறுதல் என்பது மனங் கெட்டு அறிவு விளங்கப் பெறுதல் எனப்பெற்றாம். பற்று, வெளிப்பொருளில் செல்லுமளவும் ஆசை எனப்படும். உள்ளே உயிர்க்குயிராய் நிற்கும் இறைபால் திரும்புமளவில் பக்தி எனப்படும். ஆகவே இச்சை மாறுதலாவது ஆசை கெட்டு பக்தி விளங்கப் பெறுதல் எனப்பெற்றாம். செயல், யான் எனது என்ற முனைப்பில் செய்யும் பரிபந்தம் ஒருவனைப் பிணிக்கும் வலியுடையதாயும், அம்முனைப்பின்றிச் செய்யுந் தருவாயில் அவனைப் பிணிக்கும் வலியற்றதாயும் நிற்கும். ஆகவே செயல் மாறுதலாவது தனக்கென வொன்றின்றிச் செய்யும் நிலையில் தன் சொலும் பறர் செயலும் இறை செயலே எனத் தன் செயல் கெட்டு அரன்பணி விளங்கப் பெறுதலே எனப்பெற்றாம். ஆகலான் உண்மை ஞானம் உள்ளே மாறுதலடைவதையே குறிக்கும் என்பதாம்.

(6) கூடுக என்றவிடத்து ஒரு கால் பிரிதல் நேருமாதலாலும், நேர்த்த வழி மும்மல வாசனை ஒரோவழித் தாக்குமாதலாலும் அது நேராத வழி காத்தற்கு "தன் வசமழிந்த ஆளாந் தன்மை" யாகிய "வழிபடுக" என்ற மூன்றாங் கூற்றின் இயைபும் "கூடுக" என்ற இரண்டாம் கூற்றினின்றே விளங்கும்.

III. சிவ ஞானிகளையும், சிவலிங்கத்தையும் சிவனென்றே தேறி வழிபடுக. மற்று அவ்விடங்களில் பிரகாசனாய் நின்றே யல்லாத விடத்து அப்பிரகாசனாய் நிற்பவன்.

Rudolf Steiner:— Enlight nment – opening of the spiritual organs.

ஒரு அழகிய உருவமுடைய கல்லையும், ஒரு மனிதனையும் தனித் தனியே உற்று நோக்கு. அதாவது, மன உணர்வினால் வேறு நாட்டமின்றி அதுவதுவாய் நிற்கும் நிலையில் சற்று உறைந்து நில். அப்போது உனது ஆன்ம அறிவின் கண் இருவித உணர்ச்சி உதிக்கும். ஒன்று கல்லினிடமிருந்தும் மற்றது மனிதனிடமிருந்தும் வரும். இப்பயிற்சி முதிர முதிர யாதாமொன்றை நோக்கினவுடன் இவ்வுணர்ச்சி உண்டாகும். இந்த உணர்ச்சியின் முதிர்ச்சியே ஞானக்கண் என்று சொல்லப்படும் அகக் காட்சியும் நிலையாம். அந்நிலையில் கல்லினிடமிருந்து வரும் உணர்ச்சி யானது நீலமும் சிவப்புங் கலந்த நிறத்தோடு கூடியதாக ஒளியாகத் தோன்

றும். மனிதனிடமிருந்து வரும் உணர்ச்சியானது சிகப்பும் மஞ்சளும் கலந்த ஒளியாயிருக்கும். இப்படியே தெரியாதிருந்தன வெல்லாம் தெரியவரும். அதன்பின் உன் உணர்வுக்கு உணர்வாய் உள்ளே ஒளித்திருந்த ஒருவன் வெளிப்படுவான். அவனது பரம அதிசயமான பராக்கிரமத்தின் முன்தான் நீ உண்மையில் சாந்தமுடையவனாவாய். அவனைக் காணாத வரையில் நீ வெளிப் பொருளால் சஞ்சலப் படுத்தப்பட்டே யிருப்பாய். அவன்தான் உன்னை ஆள்பவன். (Ruler=ஈசன்) இவ்வரிய நிலை எய்துதற்கு அடிப்பிடமாவது பெரியோரிடத்து நீ வைத்திருக்கும் உண்மையான பக்தியேயாம். நம்மிலும் மேம்பட்டார் அவர் என்று கருதி அவர்பால் பக்தி செய்யாத வரையில் அவரைப் போல் நாமும் ஞானியாகுதற்கு வழி வேறில்லை. ஞானிகளது அறிவானது எவ்வளவுக் கெவ்வளவு மேல் உயர்ந்து உயர்ந்து தாவிற்றோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் இருதயமானது பக்தியில் மீழ அழுந்தி அழுந்தித் தாழும். உண்மை ஞானம் வேண்டுமானால் தாழ்மை என்னும் ஒரே வாசலின் வழியாகத்தான் நுழைந்து போகவேண்டும். என்றார்.

இனி, இவ்விருவர் கருத்தாலும் யாம் பெறுவது என்னென்று பார்ப்போம்,

(1) தாபர சங்கமங்கள் என்றிரு உருவினின்று "மாபரன் பூசை கொள்ளும்........" என்று இவ்விரண்டு மாத்திரம் சொன்னதை நோக்குமிடத்து கல் சடப் பொருளில் மிகவும் தாழ்ந்தது. ஞானி சித்துப் பொருளில் மிகவும் உயர்ந்தவன். ஆகவே சித்து அசத்து என்னும் இருவகைப் பிரபஞ்சத்திலும் நிறைந்தும் அப்பாலும் கரந்து நிற்கும் சிவத்தினது சர்வ வியாபகம் பெறப்படும். இதனால் பதியியல்பு விளங்கும்.

(2) கல்லைப் போல் அசைவற நிற்கும் சிவத்தினது சொரூப லக்ஷணமும், ஞானிகளைப் போல் ஆங்காங்கு சென்று பக்தர்க்கு அருளும் சிவத்தினது தடத்த லக்ஷணமும் உணர்த்தியது மாகும்.

(3) பக்திவலையிற் படுவோனாகிய எமதிறைவனது முக்தி நெறியும் பக்தி நெறியேயாம் என்பதும் பெறப்படுகிறது.

(4) மற்று அவ்விடத்தில் பிரகாசனும் நிற்றலால் என்றது, சாதாரண கல்லினின்றும், சாதாரண மனிதனி னின்றும் சிவனது சொருபமாகிய ஒளி தோன்றக் காணினும் அது மிகச் சிறிதேயாம். நமது சிவலிங்கம், சிவஞானிகள் முறையே பிராணப் பிரதிஷ்டை, சிவோகம் பாவனை இவற்றால் சிவனது பேரொளிப் பிழம்பால் சுவீகரிக்கப்பட்டு அவ்வொளி

யேயாய் நிற்கும் ஒப்பற்ற விசேடம் பற்றியே சிவலிங்கத்தையும் சிவ ஞானிகளையும் சிவனென்றே தேறி வழிபடுக, என்றார். இதைபற்றித் தானே "கண்ட கோவிற் றெய்வமென்று கை யெடுப்பதில்லையே" என்ற கருத்தினை உடையாராய், நமது சமயாச்சாரியர்கள் தாங்கள் சென்ற இடங்களி லெல்லாம் கோவில் பெரிதாயிருந்தாலும், நல்ல நிலைமையிலி ருந்தாலும் அதன் வெளி நிலைமையைப் பாராட்டாது. உள்ளிருக்கும் சிவ லிங்கத்தில் ஒளியற்றிருந்தால் பாடாது விடுத்தும்; அதன் சமீபத்திலேயே உள்ள இடிந்த சிறு கோவிலாயினும், உள்ளிருக்கும் சிவலிங்கத்தில் ஒளி வீசக்கண்ட காலையிற் பாடியும் சென்றார்கள் போலும். ஈசுர சாந்நித்திய முள்ள கோவில்களை அறியாது புறக்கணித்து விடாது எமதிறைவனை வழி காட்டியாக வந்திருத்தலே சான்றாம்.

(5) உணர்வின் உள்ளே ஒளித்திருந்த ஒருத்தன் வெளிப்படுதற்கு Rudolf Steiner காட்டிய எதுவும் சித்தியாரில் "குறியாதே குறித் தந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில், பிரியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப் பிரபஞ்சப் பேத மெலாம் தானாய்த் தோன்றும்" என்றதும், பொருத்த முடையதேயாம்.

(6) தாழ்மை ஒன்றினால் தான் ஞானமடைய முடியும் என்ற R. S. சொல்லியதும், "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ்பெற லரிது" என்ற சித்தியார் கருத்தும் ஒன்றென்பதும் காணப்படும். இருவர்க்கும் "தாழ்மை" என்பது "மெய்யன்பு" ஒன்றி னையே குறித்திருந்தது.

(7) வழிபடுக என்றதால் வழிபாடு எய்திய பின்னரும் எய்தியது இகந்துபடாமற் காப்பது விதியாதலால் "வழிபடாமையை ஒழிக என்ற நான்காம் சூத்திரின் இயையும் விளங்கும்."

IV. ஸ்ரீ. மெய்கண்டார்:— வழிபடாமையை ஒழிக — இனி இவ்விடங் களில் வழிபடுக என்றது.

Rudolf steiner :— Self sacrifice and unselfish devotion for the expansion of life side everywhere.

அவ்வாறு உன் உள்ளே ஒளித்திருந்த ஒருவனைக் கண்டபோது காதின் உதவி யில்லாமலே கேட்பாய், கண்ணின் உதவி யில்லாமலே காண்பாய், அவன் பேச்சும் குரலும் எங்கும் கேட்பாய். அப்போது அனந்த

பரவசமாவாய். ஒப்பற்ற உள்ளொளியானது உலகமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்றலைக் காண்பாய். நீயும் மாறிப் பிறப்பாய். நீ செய்யும் எத்தொழிலும் உனக்கென்பதின்றி உலகிலுள்ள சர்வ உயிர்களின் பொருட்டேயாகும். நீயும் பிறப்பின்றி எல்லாம் அதுவாய் நிற்கும் நிலையை அடைவாய், என்றார்.

இனி, இவ்விருவர் கருத்தாலும் நாம் பெறுவது என்னென்று பார்ப்போம்.

(1) "வழி படாமையை ஒழிக" என்றது வழி படுக என்பதை வற்புறுத்தியதாயினும், சிவன் முத்திக்கண் காயம் உள்ளவும் பிராரத்தவம் உளதாதலால் தேறி வழிபடும்போதும் மும்மல வாசனையானது முன்னைப் பழக்கம் பற்றி ஒரோ வழி அத்வைதத்தையே தனக்குத் துணையாகக் கொண்டு அதனுள் நுழைந்து "நானே பிரமம்" என்னும் மாயாவாதத்தில் சேர்த்துச் சொல்லாதபடி காத்து "சிவமாக்கி எனை யாண்ட" என்ற சித்தாந்தத்தின் சுத்த அத்துவித நிலை பிறழாதிருத்தல் கருதியேயாம் போலும்.

(2) நிராதாரன் சிவன் ஒருவனே யாதலாலும் முத்தான்மாக்கட்கும் சிவனே ஆதாரமாதலாலும் முத்தியில் ஆன்மா சிவமாகியும், சிவத்தை வழிபட்டே நிற்கும் என்பதும், "உயிர் தானும் சிவானுபவ மொன்றினுக்கே உரித்து" என்ற உண்மையும் விளங்கும்.

(3) காதின் உதவியும், கண்ணின் உதவியும் இல்லாமலே கேட்கவும் பார்க்கவும் கூடுமென்றதும், மாறிப் பிறப்பாய் என்றதும் Rudolf Steiner சொன்னது போலவே ஸ்ரீ. மணிவாசகப் பெருமான் வாக்கினாலும் சொல்லப்பட்டிருக்கிறது.

. . . .

நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு-நாயினேற்கே
காட்டாதனவெல்லாம் காட்டிப் பின்னும்
கேளாதனவெல்லாம் கேட்பித்தென்னை
மீட்டேயும் பிறவாமற்-காத்தாட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே.

(4) "வழிபடாமையை ஒழிக" என்றபோது சிவலிங்கத்தையும் சிவ ஞானிகளையும் மாத்திரம் வழிபடுக என்று கொள்ளற்க. எவ்வுயிரும் பராபரன் சன்னதியாதலாலும் பார்க்குமிட மெங்கு மொரு நீக்கமற நிற்பது சிவமே யாதலாலும் எச்செயலும் எப்பொருட்கும் வழிபாடாகவே இருத்தலவேண்டும் என்பதாம். இதுபற்றியே "அகண்டமுந் தெய்வமே அன் பிற்றொழு" என்றார் ஸ்ரீ. மெய்கண்டாரும்.

இதற்கு மாபாடியக் கருத்து "எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாயினும், அவற்றுள்ளும் அன்பு விளையுமிடத்தில் வழி படுவாயாக" என்றார். அன்றியும் அன்பின் என்றதனை ஏதுப் பொருட்கண் வந்த ஐந்தனுருபேற்ற இயற்பெயராக வைத்துரைப் பாருமுளர் என்றலால், எல்லாப் பொருளும் அவன் வடிவமே வேறல்ல ஆதலால், அன்பினால் எங்குந் தொழு என்பது பெற்றாம். இதுவே Rudolf Steiner கருத்தாதல் காண்க.

இன்னும் "அன்பிற்றொழு" என்ற விடத்து அன்பை ஏதுவாகக் கொண்டு வழிபடுக என்று பொருள் படுதலால் வழிபாடுதான் என்னென்று ஆராய்வோம்.

இங்கு வழிபடுதல் என்பது நமஸ்காரம் புறவழிபாடன்றித் தன் வசமழிந்து அவன் வழியில் நிற்பதாகிய நிலையையே உணர்த்தும்.

நிறைந்த அன்பும் சிவமும் ஒன்றாதலால் "அன்பிற்றொழு" என்றது. இறைவன் எவ்வாறு அருளே திருமேனியாக ஆன்மாக்கட்கு அருளுவதே தொழிலாக உடையானோ அதுபோலவே நீயும் அவனது ஆளாக நின்று நீ அன்பின் வழிப்பட்டது போலவே எவ்வுயிரையும் அன்பின் வழிவரச் செய்தலே அரன்பணியுமாம், வழிபடுதலுமாம் என்ற உண்மையை விளக்கும்.

அன்பர்காள்!

இதுகாறும் சொல்லிப் போந்ததால் மும்மலம் நீங்க வேண்டுமென்பதும், ஞானிகளது சேர்க்கை இன்றியமையாதது என்பதும், சிவஞானிகளையும், சிவலிங்கத்தையும் சிவமெனவே தேறி வழிபட "தெரிவரிய மெஞ்ஞானம் சேர்ந்தவாறே சிவம் பிரகாசிக்கும்" என்பதும், எங்கும் சிவமெனக் கண்டு அன்புருவாகி நிற்றலே சிறந்த முத்தி என்பதும் ஆகிய இவ் வுண்மைகளெல்லாம் ஞானிகள் இருவர்க்கும் ஒப்பமுடிந்த கருத்தாகவும், வழியாகவும், பயனாகவும் இருந்தனவெனக் கண்டோம்.

ஆதலால் நமது சைவ சித்தாந்தத்தின் உண்மையை ஞானிகளே அறிவர் மற்றெவரும் அறியார் என்றே "தவந்தரும் ஞானத்தோர்க் கித் தன்மைதான் தெரியுமன்றே" என்ற சித்தியார் கருத்தும், விளக்கும்.

எவ்வித ஞான நூற்கும் முடிந்த முடிவாயிருப்பது நமது சைவ சித்தாந்தமாம்,

அதிற் பிரதிபாதிக்கப்படுங்க கடவுளோ வெனில், எவ்வெச் சமயத்தினரும் அவரவர் வழிபடும் அவ்வக் கடவுளும் ஒவ்வோர் தத்துவத்தில் தொத்தியிருக்க யிடனாயிருக்கும், எல்லாத் தத்துவங்களையும் கடந்த பேரொளிப் பிழம்பாகியதும், அறிதற்கரியதும், பெறுதற்குரியதும் ஆகிய சுத்த சிவமே, அதன் நிலை அருளே.

இவ்வாறுயர்ந்த பொருளை உணர்த்தற்கு உரியது சாத்திரங் களிற் சிறந்ததாகிய நம் சாத்திரந்தானே புறச்சான்று எற்றுக்கெனின், புறச் சாத்திரத்தில் உண்மை விளங்காத வழி உண்மை விளங்கும். நமது சாத்திரத்தின் மேன்மையை அறிந்து கொண்டாடுதற்கு ஏதுவாகும். அன்றியும், புறச் சாத்திரத்திலும் உண்மை விளங்கிய வழி நமது சாத்திரத்தின் பெருமையை நாமே அறிந்து அதிற் கடைப்பிடிக்கவும் ஏதுவாதல் காண்க. ஈண்டு கடைப்பிடித்தற் பொருட்டே எடுத்துக்கொள்ளப் பட்டது. கால இயல்பை நோக்கியும் அது வேண்டப் படுகிறது.

நம் முன்னோர்க்கு பரம் பரையாய்க் கிடைத்த நல்ல குண மொன்றுண்டு. அதுவே பக்தி, அதாவது, பெரியோர்கள் சொல்லியதில் பரம விசுவாசமும் முழு நம்பிக்கையுமாம். சிறிதும் சந்தேகமின்றி பெரியோர் சொல்வழி நடந்து பயன் அடைந்தார்கள். ஆனால், இப்போது கால வியல்பு எப்படி இருக்கிறது என்றால், யாதொரு காரியத்தைச் செய்யுமுன் அதன் காரணத்தை முதலில் உணர்ந்தா லன்றிச் செய்வதில்லை என்றாயிற்று. "அறிவு வலி, ஆயுள். உரு, ஆகாரம் இவை எல்லாம் செறியும் யுகத்திலுங் கிசைய" வாதலால் இப்போது அறிவிற்குப் பொருத்தமாகாத வரையில் எக்காரியத்திலும் பக்தி அதாவது, பற்றுவருவதில்லை. முன்னே பக்தியினால் அறிவு உதித்தல் இப்போது அறிவினால் பக்தி வளர்தல் என மாறி நிற்கிற நிலையைப் பார்த்தால் அதுவும் இறைவனது திருவிளையாட்டேபோலும்.

"கான் மாறி யாடிய கற்பக" மாதலால் காலத்திற்கேற்ற மாதிரி நிற்பான் போலும்.

"எத்திற நிற்பான் ஈசன் அத்திறம் அவனும் நிற்பன்" ஆதலால் அவன் எவ்விதம் நின்றாலும் பக்தியும் அறிவும் மாறி நிற்கினும் அருள் பாலித்தலே எஃனம்மை கருத்தாகும்.

ஆதலால் பக்தி உடையோர்க்கு பக்தி வழியாலும் அறிவுடையோர்க்கு அறிவு வழியாலும் உணர்த்தி எவ்விதத்திலும் ஒப்பற்ற நமது சைவசித்தாந்தத்தை பரவச்செய்தலே நம்மவர் கடனும். நாமும் அதன்படி நடக்க முயலுதலே நம் முன்னோர்க்குச் செய்யக்கூடியதாகிய ஒப்பற்ற கைம்மாறும்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றென்னு ளெழு பரஞ்சோதி
உள்ளவா காணவந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை யுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை யன்பே.

THIRUVALLUVAR AND FORMALISM.

They are two races of men in the world those that adore the shell and those that seek the kernel, the shadow-hunters and the substance-seekers. The shell-adorers adore the shell, because it has the kernal within, and the kernal-pickers throw away the shell, having their eye on the kernal. The shadow-hunters pursue the shadow, for there is no shadow without substance, and the substance-seekers leave off the shadows in their chase for the substance. The formalists are of the former type and the nationalists represent the latter. Rites and virtuals, customs and usages bulk largely in the eyes of the formalists while sense and season prevail with the rationalists. Tradition and authority are the watchwords

of the former whereas Reason and Experience serve as the touch-stone of the latter.

It is generally beleived that St. Thiruvalluvar is a rationalist and that his canons of conduct are utilitarian and practical. The couplet that is often quoted in support of his utilitarian ethics is his much-maligned definition of veracity or truthfulness. Falsehood may be looked on as truth if it yields guiltless good. [292]. In the ethics of society we come across what are called white lies, which are no lies at all, in as much as he who utters them harbours no sinister intent but launches them out as mere ticklers of humour. The poet's distinction between virtue and vice tells the same tale. What one ought to do is virtue and what one must shun is vice. [40]. Speaking of those that present a saintly appearance, the moralist likens them to cows wrapped in tiger's skins, to fowlers lurking behind the bush, and to the fair *Kunri* Seed with the dark spot at the pointed end. [273, 4, 7]. He condemns matted hair and tonsured head in no light terms because these externalia hide a foul interior, and the sannyasins would do well if they should di-card such foul habits as are censured by the wise men of the world, [280]. The cowl does not make the monk, and a saint in crape is twice a saint in lawn. It is neither the thread nor the *homa* that makes a Brahmin but peace and good-will to all mankind. [30]. The "divinely tall" appearance of a man is of no worth if he has no clear conscience. [272]. A thousand yagas he may perform, and yet if he kills and eats, his yagas are of no consequence whatsoever. [259]. To be but a walking cyclopedia is not enough, but to know how to act in consonance with the world constitutes wisdom. (140). He who knows the world lives and he who is ignorant of it is not deemed to be alive. (214). Learning is not the monopoly of a class, and so the seeker after truth had better sift the grains of it from the flowing utterances of all. [423]. Let him be true to his mind, and

his personal rapport with his mind is above all charity and penance. (295. External cleanliness must be an index to the mental purity, and where the former exists without the latter, it is not valued at all. (298). Causation obtains in the moral world, and the law of sin is inexorable. (318). Pain follows pleasure as night the day. To share what one has with the world and to show mercy to all-these are better than all the maxims of all the codes. 44, [322].

The moralist whose system has turned on the axis of utility and practicality has devoted about fifteen chapters [3, 25 to 38] in all to the greatness of ascetics and the virtues of asceticism. The so-called ascetics are the indigent, who consume the salt and porridge of their neighbours. [1050]. The true ascetic is the protege of the grahasta, and it is a duty of a good house-holder to look after his wants and smoothe his path of virtue. [42, 48, 1046]. Tapas is recognised as a powerful lever in the hands of man to elevate himself. True tapas consists in the control of imperious hunger and in the determinate practice of ahimsa. [241. A *tapasi* can work miracles: he can pull up his friend and pull down his foe. [263] he can get the upper hand of death. [269]. The case of Markandeyar is often cited as an instance in point. Penance [ch. 27] and penitence lead to the renunciation of the world, the flesh, and the devil [ch. 35]. The requisite psychological discipline for attaining the grace of God is the threefold process of dhyana, dharana, and samadhi, or meditation, reflection, and serenity. [357—9]. The exterpation of desire [361], and the nondistinction of mine and thine [246] these form the *pou store* for the spiritually inclined to work out their salvation. To such men whose ambition is high-pitched, their body, a conglomerate of

manifold tatvas, is a heavy burden [345] and herein the poet seems prone to glorify self-mortification, however he might philosophise that the passion-free mind merits heaven. [34]. A Brahmin might forget his Vedas and relearn them, but if he neglects his ansterities, his case is hopeless, beyond all recovery. [134]. To know the Supreme Being, what ever is, and the Good—to have a vision of God, one cannot have it without sitting at the feet of a guru and gleaning his sapience. [355]. It is only then that the wandering mind learns to rid itself of its delusions. illusions, and hallucinations [360] and is yare for crossing the sea of sevenfold birth, bound for the bosom of God. Providence is 'pre-ordinance and first decree, It is putting every spirit to bear the fruit of its own actions, to enjoy pleasure or to suffer pain. All man's learning or his foresight is fruitless against the action of this karmic law. [318]. In the execution of this great law, man is made to feel his littleness, his insignificance when his convictions play at cross-purposes with his actions, when fate makes the worse appear as the better reason and *vice versa*.

The shining monotheists conception of the Supernal Being is anthropomorphic. In the opening chapter of the immortal code which obtained the high encomia of the board of the third Tamil Sangam, the godhead is described as the first and Indivisible, the supremely wise, the *heart-dweller*, the *sense-destroyer*, the Passionless, the Incomparable, the good and the possesser of right noble attributes. Yet in eight out of the ten couplets that make it up, the worship of God's feet is enjoined. On the principle of *Ex pede Herculem*, God is a huge colossus whose feet alone

are within the reach of pure and perfect man. The references to the deities Indra [898], Vishnu [610], Siva [580], Lakshmi [617], and Brahma [1062] would seem to argue his faith in symbology despite his alleged aloofness from particular creeds.

The Excellence of yagas or sacrifices and *santis* or softeners is undisputed. Santis are performed to eradicate all forms of evil, ailments included (442). Yagas are of five kinds, Yagas for the God's, Yaga for the manes, Yaga for man, Yaga for demons and goblins, and Yaga for Brahma. Yagas are performed to propitiate the Gods and Sraddhas to appease the manes (43) and these two are for the Invisible. The best Yaga or sacrifice is for the visible and tangible mankind. It is the entertainment of guests, it is to have an open door (87-88). The gods and manes, the guests and kindness, the post and king have shares, six in all, in the revenues of a *Grahasta*, and the prosperity of royalty is made to pivot on the undeterred progress of Yagas which it is its bounden duty to look to. When tyranny prevails, it upsets the six holy works of the saints and sages, the uninterrupted performance of which spells prosperity and progress to the world 560.

These are all that can be hit upon to uphold the view that the saint Thiruvalluvar is a formalist. But the main stream lies the other way. Universalist as he is, his expressions as a Hindu from his cradle to his grave he had to indent for from the fiscus of the ancient philosophic and theologic lore. A great poet never shuns old-world myths but uses them as hoary media for conveying new truths. He pours new wine in old bottles. The new

wine may savour of the old, but the new wine is new for all that. A thousand years age, the poet of the order of depressed humanity whose work designed for the uplifting of the whole human race without distinction of caste, colour or creed, could not have wholly dispensed with the current coin, the brisk circulating media, nor could he have minted all at once a whole treasury of words and phrases that might adequately express his quintessential wisdom in terse distichs. Apart from the farrage of commentators of diverse races and creeds, the immortal work by itself does not countenance any pharisaical observance but eloquently vindicates the ways of God to aspiring man, the 'arch and roof' of created things. In brief, it tells the reader.

" Cleave thou where to He bid's thee cleave "
And cleave thereto they bond to cleave. (350)

உ

திருச்சிற்றம்பலம்.

திராவிடமதம்.

அவையடக்கம்.

ஒரு நூல் அறங்கேற்றுகையில் (அவை) சபையிலுள்ள புலவர்கள் ஆட்சேபஞ் செய்யாது அடங்கியிருக்கும் வண்ணம் அந்நூலைச் செய்தவர் அறங்கேற்ற ஆரம்பிக்கும்போது தங்களை இழித்துக் கூறும் கூற்றையே அவை+அடக்கம் ஆகக் கருதப்படுகின்றது. யானும் இவ்வுரையை எழுதவாரம்பிக்கும்போதே அவ்வழக்கத்தைப் பின்பற்றவேண்டியிருக்கின்றது. அன்றி மதவிஷயமாய் நான் எழுதப்புகுவது பலருக்கும் இஷ்டமிராதெனவு மறிவேன். எழுதுவதற்கு முன்னர்தானே மதவிஷயமாய் ஒன்றும் எழுதப்படாதென்றும், எழுதுவதும் மிகக்கஷ்டமென்றும், கஷ்டப்பட்டெழுதினும் யாவரும் அதை அங்கீகரிப்பது அதனினும் கஷ்டமென்றும் திராவிட மதமென்பது சரித்திர காலத்திற்கு முற்பட்டதோர் விஷயமென்றும், சரித்திர ஆதாரங் கிடைக்கும்போது ஆரிய மதம் வேரூன்றிவிட்டதென்றும், கஷ்டமான இவ் விஷயத்தை எழுதுவதைப் பார்க்கினும் வேறு விஷயத்தைப்பற்றி எழுதலாமென்றும் என்னை அதைரியப்படுத்தினவரே அதிகமாவர். பாளையங்கோட்டை சைவ சபையார் "திராவிட மதம்" என்னும் விஷயத்தை எனக்குக் கொடுத்து எழுதச் சொன்னபடியால் யானும் மஹா சபையின்கண் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவார் போல என் அற்ப அறிவினை ஆதாரம் பற்றி எழுதி வாசிக்கத் துணிதலுற்றேன். திராவிட மதமென்றொன்று பூர்வீகத்திலிருந்ததென எப்படிச் சொல்வது என்றும் என்ன ஆதாரம் என்றும் நாமே இப்பொழுது விஸ்வாமித்திர சிருஷ்டியைப்போலக் கற்பித்துவிடுவதாவென்றும் பலவாறு வினவுவாருமுளர். அப்படியாயின் கற்பியாத மதம் உலகத்திலெதுவோ தெரியவில்லை. ஆரியர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னர் மதமென்பதே ஒன்றுங் கிடையாதெனில் அது முற்றிலும் தர்க்கத்திற்குப் பொருந்தி வராதென்பது நிச்சயம். குற்றஞ் சொல்வோர் அவர்களே ஓர் விஷயத்தைப்பற்றி யாதொரு குற்றமின்றி எழுதப்புகின் அவற்றின் கஷ்டத்தை அவர்களே யுணரலாமென்று நினைக்கின்றேன்; மதமென்பதே திராவிடர்களுக்குக் கிடையாது என்றும் அது ஆரியரால் பிற்காலத்திலுண்டானது என்றும் வாதிப்போர் அவ்வாரிய

மதத்தையே அனுசரிக்கலாம். தடுப்பாரொருவருமிலர். ஆனால் எம் போன்றார் விசாரிப்பதற்குச் சுதந்தரமுள்ளவர்களாகையால் நிர்ப்பயமாய் ஒன்றை விசாரித்தறிருவர். திராவிடமத ஸ்தாபகத்திற்கு ஆதாரங் கிடைத்தமட்டும் எழுதினேன். கிடையாதவற்றிற்குச் சிற்சிலவிடங் களில் யூகை செய்தும் எழுதியுளேன். யூகையும் அனுமானமுங் கூடா தெனில் அன்னோருக்குச் சமாதானஞ் சொல்ல முடியாது. எம்மதந் தான் முற்றும் சந்தேக விபரீதமின்றித் தக்க ஆதாரத்தோடு நிற்கிறது? ஒன்றுமேயில்லை. நமது தேச சரித்திரமும், மத சரித்திரமும் ஓர் விதத் திலில்லை. பற்பல அபிப்பிராயமுள்ள ஜனங்கள் யாவருமே ஏகோபித்த மாய் ஒப்புக்கொள்ளும்படி சரித்திர வாதாரத்தோடு எழுத எவராலும் முடியாது. அன்றி திராவிடமதம் அல்லது தமிழ் மதம் என்பது திராவி டாது கொள்கை.அதாவது அவர்களது ஆதிகால நடையுடை பாவனை களைக் குறிக்குமே யன்றி வேறில்லை. "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" என்று பதிற்றுப் பத்துப் பதிகத்தாலும், சிலப்பதிகாரம் மணி மேகலை முதலிய வேறு சில நூற்களின் திருஷ்டாந்தங்களாலும், தமிழ் நாட்டிற்கு முற்காலத்திலே 'தமிழகம்" என்னும் தனிப்பெயர் வழங்கின தென்றும், தமிழ் நாடு மற்ற நாடுகளோடு சேராததென்றும், அங்ஙனமே தமிழ் தனக்குரிய "ழ" என்னும் சிறப்பெழுத்தைப் பெற்று தான் பிறி தொரு மொழிகளுட் பிறவாத தனிமொழியென்று காட்டுகிறதென்றும் ஆரியரும் திராவிடர் பலவழியிலும் சிறந்தோர் என்றும், அவர்கள் பழமை யான நாகரிகத்திற்குப் பொருந்திய மதமொன்றிருந்த தென்றும், அம்மதம் ஆரியர் மதத்திலும் விசேஷித்ததென்றும், விவேகிகள் பலரும் விளம்பு கின்றனர். அதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேனேயன்றி வேறில்லை. ஆயினும், நெடுநாட் பழக்கவாசனையினால் பரம்பரையே அனுசரித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், சமயாபிமானிகளுக்குப் பயந்து மதவிஷயத்தில் புதிதாய் ஒன்றைச் சொல்ல அஞ்சுவோரும் அதிகமாயிருக்கின்றனர். இவர்கள் பயத்திற் கனுகுணமாக பழைய தமிழ் நூல்களும் அநேகமாய் அழிந்தும் மறைந்தும் வருகின்றன. இன்னுஞ் சிலகாலம் போயின் யாதாகுமோ தெரியவில்லை. ஆயினும், தமிழ்ப்பழங் குடிகளின் நாகரிக முதிர்ச்சியை மட்டும் விவரித்துச் சொல்ல அஞ்சுவதில்லை. இத்தகை யோர் இத்தமிழகத்திலே ஆதிகாலத்திலிருந்த மதமென்ன என்பதை மட் டும் விவரித்தெழுத என் துணிவதில்லையோ தெரியவில்லை. தமிழருக்கு மதமென்பதே ஒன்றுமில்லையென்பது வெளியாக வேண்டும். நானோ போதுமான தமிழ் நூற் பயிற்சி பெற்றவனுமல்லேன். எனக்கு இவ்விஷ யத்தைப் பற்றி நன்கு யோசித்தெழுத காலமுங் கிடைத்திலது. என் புல்லறிவிற்குத் தோன்றியவாறு அவசரநிமித்தம் பிழைகள் பல நேரிடும் படி எழுதியுமுள்ளேனாகையால் பெரியார்கள் என் பிழைகளைப் பொ றுத்து "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருண் மெய்ப்

பொருள் காண்பதறிவு" என்றபடி நான் சொல்வதிலுள்ள உண்மைப் பொருளை மட்டும் நீரைப் பிரித்துப் பாலையுண்ணும் அன்னம்போல ஆராய்ந்துகொள்ளக் கடவர். இதுவுமன்றி, என் கருத்தைப் பண்டிதோத்தமர்களுக் கறிவிக்கும் பக்ஷத்தில் என்னை அறியாது சேர்ந்துள்ள குற்றங்களை வேறு விதமாய்த் திருத்தி பூர்வீகத் திராவிட மதத்தைப் பற்றி அவர்களே செவ்வனே தக்க ஆதாரங்களோடு ஆங்காங்கு மிகப் பழைய தமிழ் நூல் செய்யுட் பிரமாணங்களை இன்னுஞ் சிறப்பாய் எடுத்துக் காட்டி என் மனோரதத்தை நன்கு நிறைவேற்றுவார்களென்னும் நம்பிக்கையினாலேயே நான் இவ்வியாசத்தை அரையுங் குறையுமாய் எழுதி முடித்திருக்கின்றேனே யன்றி வேறில்லை. "பிழை பொறுப்பது பெரியோர் கடன்."

தமிழர் உபாசிக்கும் கடவுட் பொருளின் இயல்பும், அவர்களது பூர்வீக ஆசார அனுஷ்டானத்தின் உயர்வும்.

பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் மிக்க வீராவேசங் காட்டி அடிக்கடி இந்நாட்டிற்குப் புதிதாய் வரும் அந்நிய வேந்தரோடு போராடியதாலும், இந்நாட்டின் வெப்ப மிகுதியாலும், தேகதிடங் குன்றி மன அடக்கம் பெற்று ஒவ்வொன்றினையும் ஆழ்ந்தறியும் இயல்பினை யுடையராய் மாறி இவ்வுலக அழகைக் கண்டு வியந்து இயற்கையின் தத்துவத்தை உள் நுழைந்து பார்த்து எங்கும் ஒற்றுமையும் அவ்வொற்றுமையை நிலைப்படுத்தற்குரிய ஓர் உயர்ப் பொருளும் இருக்கக் கண்டு இவ்வியற்கையில் மறைந்தும் விரிந்தும் கிடக்கின்ற அவ்வுயிர்ப்பொருளையே கடவுளென் றுன்னித்து அதனை மனத்தால் தியானித்து வழிபட்டு வந்தனர்.

இவ்வுண்மை முல்லைப்பாட்டு முதலிய நமது பண்டைக் காலத்துத் தமிழ் நூற்களின் மூலமாய் வெளியாகின்றது. அக்காலத்திலே எவரும் செய்யுருவை வணங்காது பரம்பொருளை வழிபடுதற்குத் தனியாய் ஓரிடத்தில் மன அமைதியாயிருந்து உபாசித்தும், நமக்கு உள்ளும் புறமும் நின்று நம்மை அசைவித்தும், அறிவித்தும், வருகின்ற சக்தி எதுவென்று விசாரித்தும் வந்துளார் என்பதற் கையமில்லை. இன்பமாய், அரூபமாய் எங்குந் தானாய் விளங்கும் முழு முதற் பொருளைச் சுட்டி இவ்வண்ணம் ஏறக் குறைய நாலாயிர வருடங்களுக்கு முன்னிருந்த ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லியிருக்கும் தெய்வ லக்ஷணத்தையும் அதே காலத்திற் றோன்றிய ஆரிய ஜாதியார் இருக்கு முதலிய வேதங்களில் எழுதிவைத்த தெய்வ நிலையையும், ஒன்றை யொன்று ஒப்பிட்டுப் பார்

போமாயின் திராவிடரது பூர்வீக மதத்தின் நன்னிலை இன்னதென உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு விளங்கும். தொல்காப்பியர் காலம் நாலாயிரமோ, ஐயாயிரமோ சரியாய்ச் சொல்ல முடியாதெனச் சொல்லினும், அவர் நெடு நாட்களுக்கு முன்னிருந்தவரென்பதற்குப் பிழையில்லை. பழங்காலத்திலே கடவுள் தன்மையை நன்குணர்ந்த திராவிடரைப் போல வேறொருவரும் உணர்ந்திருக்கவில்லையென்று சொல்லலாம். திராவிடரைப்போல மற்றவர்கள் உணர்ந்திருக்கவில்லையென்று நாம் சொல்லுவது சரியல்லவென்று வாதிப்பதுமன்றி இத்தகைய அபிப்பிராயங்கள் தர்க்கத்திற்கிடமானதெனச் சொல்வாருமுளர். வேறு சிலரோ ஆரியரும் திராவிடரும் ஒரே ஜாதியினரென்றும், ஆதியில் ஒரே இடத்தில் வசித்தவரென்றும், திராவிடர்கள் மட்டும் எவ்விடத்து நின்றும் வரவில்லையென்றும், ஆரியர் மட்டும் இந்தியாவிற்குப் புதிதாய் வந்தவரென்றும், இருப்பினும் எவர்களை எவர்கள் முன்னர் பார்த்து மத சீர்திருத்தமும் நாகரீகமும் அடைந்தனரெனச் சொல்ல முடியாதென்றும், இருவர் நாகரீகமும் சமான காலமென்றும், எவ்விஷயத்திலும் கால நிர்ணயம் செய்யமுடியாதென்றும் சொல்வாருமுளர். எங்ஙனமாயினு மாகுக.

ஆரியாது பழைய நூலாகிய இருக் வேதத்தை ஆராய்ந் தறியினும் இத்தகைய நல்ல ஆதாரங்கள் கிடைப்பதரிது என்பதிற் பிழை இல்லை. அவர்களோ முதல் முதல் ஆகாயத்தையும், விண்மீன்களையும், சூரியனையும், விடியற்காலத்தையும், பகற்பொழுதையும் தெய்வங்களாகத் தொழுதுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. பூர்வீகத் தமிழ் மதத்திற்குத் தொல்காப்பியமும், மத்திய காலத்திற்குத் திருக்குறள் முதலியவைகளும், சிறந்த பிரமாணங்களாகும். இத்தகைய பண்டைக் காலத்துத் தமிழ் நூற்களால் குறிக்கப்படும் அந்தரங்கப் பொருட்டுப் பிரமாணம் வட நூற்களில் ஆராய்ந்தறிய வேண்டுவதில்லை. ஒவ்வொன்றிற்கும் ஆரிய நூற் பிரமாணங் காட்டியே இடர் படுகின்றார்கள். ஆகையால் மத விஷயத்தில் ஆரியர் செய்தவை யனைத்தும் திராவிடர்களுக்குப் பிரமாணமாகா. ஆரிய சமயாசாரிகளினால் காலானுகூலமாய் உற்பத்தியான சமயங்களனைத்தும் இன்றே மாறினும், அன்றி வேறு பல சமயங்கள் புதிதாய்த் தோன்றினும் இவற்றிற் கெல்லாம் பொதுவாய்ச் சகலத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்ற பண்டை காலத்துத் திராவிட மதம் நித்தியமாயிருக்கு மென்றே நம்பவேண்டி யிருக்கின்றது. ஏனெனில், தமிழ் மதம் சகல மதத்திற்கும் பொதுத் தன்மையிலிருக்கிறதாய் நினைக்கவேண்டி யிருக்கின்றது. இதற்குத் திருக்குறள் ஒன்றே சான்று பகரும். திருக்குறள் ஆராய்ச்சியில் திருவள்ளுவர் மதமென்றொன்றேற்படலாம். அம் மதமே திராவிட மத மெனினும் இழுக்கன்று. ஆரிய மக்கள் நாகரீக விருத்தியன்றி சர்வ வுலகங்களையும், சர்வான்மாக்களையும்,

ஆக்கி அழிக்க வல்ல முழுமுதற் பெருங் கடவுள் ஒருவனுண்டென்று உணராமல் சிருஷ்டிப் பொருள்களாகிய இடி, மழை, மின்னல் முதலிய இயற்கைப் பொருள்களைக் கண்டஞ்சி அவற்றை யெல்லாம் தெய்வமென்று உபாசித்து தங்கள் வலிமையால் பல விலங்குகளைக் கொன்று அவற்றின் முன் வைத்துப் படைத்து வணங்கியுமுள்ளார்கள். தென்னாட்டிலுள்ள தமிழ் மக்களோ இங்ஙனம் ஆரியரைக் குறிப்பிடுங் காலத்திலே மிக நாகரிக விருத்தி பெற்று சர்வ உலகங்களையும், சர்வான்மாக்களையும் இயக்கும்படியான கடவுள் ஒருவனுண்டென் றுணர்ந்து மற்றச் சடப் பொருள்களாகிய எவைகளையும் தொழாமல் இருந்துள்ளார்கள் என்று தெரிகின்றது. பின்னால் தமிழரை ஒருவாறு பின்பற்றியே வடமொழியாளரும் தமிழர் உபாசிக்கும் பரப்பிரமப் பொருளையே தாமும் வழிபடுதற்குரிய முழுமுதற் பொருளென்று நினைத்து எழுதுவாராயினர். இச் சந்தேகம் நிவிர்த்தியாவதற்கு ஆரியரது ஆதி சரித்திரத்தைப் படிக்க வேண்டும். முதலில் அவர்கள் ஆசியாவிலிருந்து பிரிந்து வந்து பலவிடங்களிலும் போய் வசித்தார்கள். அப்படிப் பிரிந்துவந்தவர்களுக்குள் எவர்களுமே மத விஷயத்தில் இந்தியாவிற்கு வந்த ஆரியரைப் போல மஹோன்னதஸ்திதி யடையவில்லை. மேற்றிசையிற் குடியேறிப் பரவின ஆரியர்கள் ஆரம்பத்தில் அங்கங்கே மிருகப்பிராயரா யிருந்தார்கள். ஆரியர் பழைய தோற்றத்திற்கு இது முக்கிய திருஷ்டாந்தமாகும். ஆரிய சந்ததியிற் றோன்றிச் சிதறிய பலரும் முதலில் அநாகரீகமாகவே இருந்துள்ளார்கள். பின்னால் இந்தியாவிற்கு வந்தபிறகே திராவிடக் கூட்டுறவு பெற்று பிரகாசித்துள்ளார்க ளென்பதற் கையமில்லை. நன்னிலையிலிருந்த திராவிடர்களும், புதிதாய் வந்த ஆரியரும், மதக்கொள்கையில் அபிப்பிராய பேதமுடையவராகி தத்தம் கொள்கைகளையே நன்குமதித்து ஒருவர்க்கொருவர் போதித்துக்கொண்டனர். வழக்கத்திற்கு விரோதமான ஜாதிசமய ஏற்பாடுகளும், ஆசாரங்களும், புதிதாய் வந்த ஆரியரால் ஏற்படவே நாட்டிற் பெருங் குழப்பமாக மாறி மத விஷயத்தில் வாதப்பிரதிவாதங்களுந் தோன்றின அக்காலத்தில் புத்தராவதாரமானார். இக்கௌதம சாக்கிய முனிவரை திராவிட வம்சத்திற் றோன்றியவரென்பர் பலர், ஆரிய வம்சத்து க்ஷத்திரியரென்பார் சிலர், திராவிட வம்சமோ, ஆரிய வம்சமோ, தெரியவில்லை யெனினும் கௌதமர் ஆரிய மதத்திற்கு விரோதியென்பதற் கையமில்லை. எங்ஙனமாயினுமாகுக. கௌதமர் திராவிட தேசத்திற் பிறந்தவரென்பதற் கையமில்லை. வடநாட்டிலே ஏறக்குறைய இரண்டாயிரத்தைநூறு வருடங்களுக்கு முன் தோன்றிய கௌதம சாக்கிய முனிவர் திராவிடர்கள் தங்களுக்குரிய நல்லொழுக்கங்களை வழுவாதிருந்தால் சகல துன்பங்களினின்றும் விடுபடுகின்ற "நிர்வாணம்" என்னும் முக்தியை கிடைக்குமென்று போதித்தார். திராவிட மதத்தினருக்குரிய நல்லொழுக்கங்களையே திருவள்ளுவரும் பௌத்த

மதம் பரவியிருந்த காலத்திலே எழுதிவைத்தார். இத்தகைய பல நிதர்சனங்களால் திராவிடர்களின் ஆதிசமயம் பரிசுத்த ஆஸ்திக மதமாகுமென்பதிற் ஐயமில்லை. மாசு மறு அற்ற லௌகீகமெனினும் பொருந்தும். ஜாதி சமய பேதங்களுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் இடமின்றி யாவரும் அபேதமாய்க் கூடி வாழக்கூடிய சமயமெதுவோ அதுவே திராவிட சமயமாகையால் நாகரீகமுடைய இக்காலத்திலும் எவரும் அங்கீகரிக்கும்படியாய் அவ்வளவு தெளிவு பெற்றிருந்திருக்கின்றது. இதை யோசிக்குமிடத்து திராவிட மதமென்பது எக்காலத்திலும் நூதன மதமன்று. எத்தேசத்தாருக்கும், எக்காலத்தாருக்கும், எச்சாதியினருக்கும், எம்மதத்தினருக்கும், சம்மதமாயுள்ள மதமெதுவோ அதுவே தமிழ் மதமென்பதற் காட்சேபனையில்லை. பழைய காலத்துத் திராவிடர்களுக்குள் தங்கள் பூர்வீக மதத்திற்கேற்றபடியே எவர்களோடும் பேதமின்றி உண்டும், பெண்களைக் கொண்டுங் கொடுத்தும், சர்வதேச சகோதரவாச்சல்யங் காட்டியும், ஒரே கடவுளை வணங்கியும், மனச்சான்றுக்கு விரோதமின்றி இகபரமிரண்டிலும் சுகிர்தங்கிடைக்குமாறு நடந்து வந்துளார் என்று நம்பவேண்டியிருக்கின்றது. நான் இவ்வண்ணம் எழுதுவது பெரியதோர் சந்தேகமென்றும், இப்பொழுது புதிதாய்க் கற்பித்தெழுதியதே யன்றி உண்மையல்ல வென்றும், சிலர் சொல்லினுஞ் சொல்வர். இத்தகையோர் எப்பொழுதும் இந்நாட்டில் ஜாதி சமய பேதங்களிருந்ததென்றும், ஒருவர் வீட்டில் மற்றொருவர் உயிர் நீங்கினும் உண்ணாரென்றும் சாதிக்க வேண்டும். அதற்கு ஆதாரமில்லையெனின்; திராவிடர்களின் பூர்வீக நிலை நன்னிலை யென்பதற் கையமென்ன? நாம் பகற் கனவு காண்பதாகவும், திராவிட தேசத்திற்கில்லாத ஏற்றத்தை வரவழைத்துச் சொல்லி மனப்பாலருந்தி மகிழ்வதாகவும், சொல்பவருங்கூட ஜாதி சமயத்தின் விபரீதம் எப்பொழுதும் இவ்வண்ணமே இருந்ததாய்ச் சொல்வதற்கின்றி விழிக்கின்றனர். ஆரியரும் இத்தேசத்திற்குப் புதிதாய் வந்தபோது இத்திருக்குலத்தோர் செய்யும் சமையற் பாகங்களையே உண்டும், எக்குலத்துப் பெண்களையும் கொண்டும் வந்துள்ளார்கள். ஆரியர் நான்கு வருணத்துப் பெண்களையும் கொள்ளலாமென்றும், எக்குலமே யாயினும் கன்னிகைக்குத் தோஷமில்லை யென்றும், பிராமணர் தங்களுக் கனுகூலமாய் வைத்துக் கொண்டிருக்கும் மனு நீதிக்கு முன்னமே திராவிட தேசத்தில் பெண்களை யெங்கும் கொண்டும், கொடுத்தும் வருகிற வழக்கம் இருந்திருக்கவேண்டும். திராவிட தேசத்திலே ஓர் ஜாதி உயர்ந்தது மற்றொரு ஜாதி தாழ்ந்ததென்ற தில்லாதிருந்தபடியினாற்றான், அர்ச்சுனன் பாண்டிய நாட்டுப் பெண்ணைக் கொண்டதற்கும், சீவகன் பல சாதி மாதரை மணந்ததற்கும் ஏதுவாயிற்று. திராவிடரையும் ஆரியரையும் வேறு பிரித்துக் காட்டக் கூடிய ரூபவேறுபாடுள்ள விலாசங்கள் பழைய காலத்திற்றானே நடந்தேறியிருக்குமானால், யாவரும் ஒரே நிறமும் ரூபமுமாக மாறியிருக்குமிக்காலத்

தில் மணஞ் செய்துகொள்வது புன்னும் பொருத்தமுடையதாகவேயிருக்கும். பூர்வம் திராவிடர் தங்கள் தேசத்தில் எவர்களையும் மணஞ்செய்து கொண்டது பொய்யெனில், திருக்குறளில் களவியல் என்னும் காமத்துப் பாலில் பொதுவாய் ஸ்திரீகள் புருஷர்களைத் தெரிந்துகொள்ளும்படியாய்ச் சொல்லியிருப்பது பயனின்றியதாய் முடியும். நாயுடு வீட்டில் நாயுடுவே மணஞ் செய்யவேண்டு மென்றும், வேளாளன் வீட்டில் வேளாளனை விவாகம் செய்யவேண்டுமென்றும், எந்த தர்ம சாஸ்திரத்தில் விதித்திருக்கின்றது? ஆதலால் இப்பொழுதும் நம் பூர்வீக வழக்கத்தின்படியே நடந்து வந்தால் நாம் திராவிட மதஸ்தர்களே ஆவோம். இது நாகரீகமுள்ள எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவென்பதிற் பிழையில்லை. இப்பொதுவான உண்மை ஒவ்வொரு திராவிடன் மனத்திலும் சிலையிலெழுத்தைப்போல பதிந்திருப்பின் நாம் மதச் சீர்த்திருத்தம் பெற்றுப் பிரகாசிப்பதற்கேதுவாகும்.

திராவிட சமய நூல்கள்.

இப்போது தனித் தமிழ் மதத்தைக் குறிக்கக்கூடிய சமய நூல்கள் கிடைப்பதருமையாக விருக்கின்றன. தொல்காப்பிய மென்பது தென்னாடு கடல்கொள்ளப்படுவதற்கு முன்னர் எழுதியதோர் பண்டைக் கால நூலாதலால், அந்நூல் நமக்குப் பிரமாணமாயினு மாகலாம். ஆரியர் இக் கிரந்த காலத்திற்கு முன்னே தென்னாட்டிற்கு வந்து தமிழரோடு உறவாடவுமில்லை. அவர் மதத்தை நிலை நாட்டவுமில்லை. குமரியாற்றின் தெற்கேயிருந்த நாற்பத்தொன்பது நாடுகள் கடலால் மேற்கொள்ளப்பட்டு தமிழ் நாடு பின்னால் பற்பல மாறுதலடைந்துள தென்பதற் கையமில்லை. இவ்வண்ணமாக தமிழுலகின்கண் தென்பெரும் பகுதியே அழிந்து நெடுங் காலங்களிற் றோன்றிய எண்ணிறந்த அரும் பெரும் நூல்களும், இடைச் சங்கமும், முதற்சங்கமும் இருந்த இடமுந் தெரியாமல் மறைந்தன. மிக்க அருமையான தமிழ் நூற்கள் நச்சினார்க்கினியர் காலத்திற்றானே இறந்தொழிந்தன வென்பது எவரறியார்கள். பழைய நூல்களில் சிலவற்றின் பெயர்கள் மட்டும் நமக்கிப்பொழுது தெரிகின்றனவே யன்றி அந்நூல்களின் வரலாறும் இயற்றினவர்களின் பெயரும் நமக்குச் சரியாய் விளங்குவதில்லை. சில புத்தகங்களிலே சில சூத்திரங்கள் மட்டும் காணப்படுகின்றனவே யன்றி அந்நூல்களின் முதல் நடு இறுதி முதலியவைகள் யாவுமே ஒழுங்காய்க் கிடைப்பதில்லை. சில அருமையான தமிழ் நூல்களைப் பற்றிப் பழைய புலவர்கள் தங்கள் காலத்திற்றானே இறந்தொழிந்த தென்று எழுதியுள்ளார்கள். ஆதலால் தமிழ்ச்சமய மின்னதென்று தமிழ் நூல்களின் ஆதாரத்தைக்கொண்டே சந்தேக விபரீதமின்றி எழுதுவது

தமிழ் பாஷா பண்டிதர்களுக்கும் கஷ்டமாகவே யிருக்குமென்பதற் கையப மில்லை. இருப்பினும் திராவிடர்களின் இயல்பைப் பற்றியும், நடை யுடை பாவனைகளைப் பற்றியும் ஒருவாறு சொல்வது கஷ்டமல்லவென்றே கருதுகின்றேன். திராவிட பண்டிதர்கள் பண்டைக் காலத்திற்றானே உலக இயற்கையையும், மனித இயற்கையையும், உள் ஆழ்ந்து பார்த்து தாம் கண்ட அரிய பொருளின் நுட்பத்தின்படி நூலியற்றி இவ்வுலக வியற்கையின் தத்துவத்தை ஆராயும் நூல்களுக்குப் "புறப்பொருளெ"ன்று பெயரிட்டும், மனித இயற்கையை ஆராய்வனவற்றிற்கு "அகப்பொருள்" என்றும் பெயரிட்டுக்கொண்டனர். ஆண் பெண் என்னும் இரு பாலாரையும் சமத்துவமாய்ப் பாவித்து மற்றெல்லாத் தோற்றங்களையும் தனக்குக் கீழாக நிறுத்தித் தான் யாவற்றிலும் மேலாகப் பாவித்துத் தனக்கு வேறொன்றின்றித் தோன்றுவதாய் அறிந்து இன்ப துன்பங்கள் உதிப்பதிற்குத்தானே காரணமென்று தெரிந்து எல்லா வுலகங்களும், எல்லாப் பொருள்களும், தன்னைச் சுற்றிச் செல்வதாய் நினைத்து அன்பின் வடிவமாகிய மனித வியற்கையை இவ்வண்ணம் உயர்த்தி ஆராய்வதே அகப்பொரு ளிலக்கணமாம். இனிப் புறப்பொருள் இலக்கணமென்பதோ மக்கள் இவ்வுலக இயற்கையுடன் பொருந்தி இன்றியமையாத சில கருமங்களைச் செய்து, பலவித முயற்சி வேறுபாடுகளிலும், பிறவிஷயங்களிலும் நுழைந்து ஆராய்ந்து தெளிவதாகும். இந்நூல்களிலே இகபர சம்பந்த விஷயங்களும் அடங்கியுள. அகப்பொருளென்பது வடமொழியிலே யில்லாத நூலாக விருக்கின்றது. ஆறு சாஸ்திரங்களேற்பட்ட காலத்திலே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலிய மற்றுந் தத்துவ விசாரணைகளும் ஆரியருக்கேற்பட்டன. அகநானூறு, அகப்பொருள் வெண்பா முதலியவைகளும் தமிழுக்கே உரியன. வட நூலார் அநேகமாய்ப் புறப்பொருள் சம்பந்தமாகவே ஆதியில் விசாரிப்பவராயிருந்தனர். பின்னர் பற்பல மாறுதல்களடைந்தவராவர். அவர்களது ஞானவிதமான் மாறுதல்களே அவர்களை இப்பொழுது நன்னிலைமைக்குக் கொண்டுவந்துளது. யோசிக்குமிடத்து தமிழருக்குரிய தத்துவ நூல்களே அவர்களுக்குப் போதமான ஆதாரங்களாகும். இத்துடன் சர்வசமயசமரச நீதி நூல்களோ திராவிடத்தில் பலவுள. அதிகமில்லை யென்போர் நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்றபடி நாலடியும் திருக்குறளும் போதும். இதுவுமன்றித் தமிழரின் சுயானுபவ விருப்பத்தை நோக்குமிடத்து இயல் வேதங்களிற் ஆத்ம வைராக்கியத்தை யுடையவர்களென்று சொல்வது மிகப் பொருத்தமுடைத்து. சுயானுபவத்தையே பெரிதாகக் கோருபவர்கள் லிகிதவேதத்தை முக்கியமென்று சார்ந்திருப்பதில்லை. அதை யோர் உபகரணமாகவே கொள்வர். வேதமென்பதை ஆரியரும் அவர்களைப் பின்பற்றிய பல சமயத்தாரும் பரிசுத்த புத்தகமாகக் கருதுகின்றனர். பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு வியாச பகவானால் சிக்ஷிக்கப்பட்டதென்றும், இருப்பினும்

திராவிடர்களும் இத்தகைய உயர்வுகாட்டி வேதமென்றோர் புத்தகத்தை எழுதிவைத்துக்கொண்டிருப்பினும் நாகரிகமான இக்காலத்திலே தர்க்க சாஸ்திரத்திற்கு எதிர் நின்று சர்வஜன அங்கீகாரம் பெறுவது கஷ்டமே. பிரம்ம சமாஜத்தாரும், (Unitarians) கிறிஸ்தவ மார்க்கத்தாரும், சத்தம் வேதப் புஸ்தகங்களை தெய்வீக சம்பந்தப்பட்டெழுதிய தென்றும். அம்சத்தை நிராகரித்துவிட்டார்கள். பௌத்தர், சமணர் முதலியவர்களும் கீர்வாண வேதத்தை நம்புவதில்லை யன்றோ? பூர்வீக திராவிடர்களுக்கு இப்படி எழுதிவைத்துக்கொண்ட அருள் வேதமென்று சொல்லக்கூடிய புத்தகங்கள் எவைகளுமின்றிச் சகல புத்தகங்களுக்கும் ஆதாரபூதமாயிராநின்ற இப் பிரபஞ்சமே ஓர் வேதப் புத்தகமாயிருக்கலாம். இதை நாகரிகமுள்ள இக்காலத்தவரெவருமே சிறப்பித்துப் பேசுவரேயன்றி வேறில்லை. இதனால் அருள் வேதமென்றோர் புத்தகத்தை உயர்வுபடுத்துவதை சரித்திரகாலத்திற்கு முற்பட்டது அல்லது அதன் விவரம் நமக்குத் தெரியாது என்று நாம் நிரூபிக்கவேண்டியதே யன்றி வேறில்லை. நம் பெரியோர்கள் எழுதிவைத்த நற்புத்தகங்களொன்றும் பரம சாதகத்தை நான் குறைவு படுத்திப் பேசவுமில்லை. உணர்வென்னும் உரைகல்லில் உரைத்துப்பார்த்து புத்தகங்களிலே நல்லவை கெட்டவை யுணரவேண்டும்.

திராவிடரது ஆத்ம வேதமாகிய இயல் வேதம்.

ஆத்ம வேதமென்பது நமக்குச் சகல ஞானத்தையும் கற்பிக்கக்கூடிய இப்பிரபஞ்சமே யன்றி வேறில்லை. அது கடவுளைப் பற்றி வாய் திறந்து ஓர் வார்த்தையுஞ் சொல்லாமலே அவனிருப்பைப் பற்றி

---

* பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டு வியாச பகவானால் சிக்கறுக்கப்பட்டதென்றும், இருப்பினும் வேதத்திற்கு சுருதி, மறை, எழுதாக்கிளவி, ஆதி நூல் என்னும் பல பெயர்கள் உளவென்றும், ஓதுவிக்கவும், ஓதவும், கேட்கவும் ஆகாதெனச் சில ஜாதியாருக்கும், பெண்பாலாருக்கும் மறைக்கப்படுவதினால் "மறை" என்றும் ஓதல், ஓதுவித்தல் என்னும் இரு தொழிற்கும் உரியவர் அந்தணராகையால் தங்களை மறையோரென்றும் தெரிகின்றது. வேதத்திற்காதி அந்தமில்லை யென்றால் அது இருப்பவைற்றுள் புராதானமான புத்தகம். அதாவது எழுதின காலம் தெரியவில்லை யென்பதே பொருந்தும். எழுதாக்கிளவி, எழுதொணாமறை என்றதும் ஈசுரனே சொல்லியருளிய தென்பதுவும், ஈசுரனே திருவாய் மலர மற்றவர் எழுதிக்கொண்ட தென்பதுவும், உபசார வழக்கே யன்றி வேறில்லை. விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன்.

ஆயிரம் வாயால் கோஷித்துக் கொண்டாடுகின்றது. இதைவிடக் கடவுளைப்பற்றி விவரித்துச் சொல்ல அபிப்பிராய பேதமுடைய பற்பல புஸ்தகங்களிருப்பினும் விசேஷமல்லவென்றே கருதுகின்றேன். அணுமுதல் பேரு வரையில் சிருஷ்டியெல்லாம் எம்பிரான் மகிமையை வெளிப்படுத்தாநிற்க நமக்கு வேறு சாஸ்திரங்களேன்? வேதங்களேன்? எல்லா வஸ்துவைப் பார்க்கினும் அவர் மயமாகவே காணப்படுகின்றன. எங்குமே அவரது அன்பு. எங்குமே அவரது சக்தி. எங்குமே அவரது புத்தி விசேஷத்துவம் நமக்குப் புலப்படுகின்றன. அவர் இருப்பை நமக்குச் சதா அறிவிக்காத வஸ்து எது? கடவுளிடத்திலிருந்தே திராவிடர்களுக்கும் ஓர் வேத புஸ்தகம் கிடைத்திருப்பதாய்ச் சொல்லிக்கொள்ளினும் அதனால் திராவிடர்க்கோர் பெருமையுங் காணோம். அப்புஸ்தகம், இருக்குமிடபேதத்திற்கும், தேசாபிவிர்த்திக்கும் பாஷையின் விருத்தி, க்ஷயத்திற்கும் தக்கபடி மாறுபட்டுக்கொண்டேயிருக்கும். இதுவுமன்றி, கடவுள் தமது கட்டளையை அல்லது இகபர சம்பந்தமாய் எழுதப்பெற்றிருக்கும் வேதத்தை, ஓர் வகுப்பிற்கும், ஓர் பாஷைக்கும் பொருத்தமாகும்படி ஒருபோதும் வெளியிடார். பட்சபாதங் காட்டி அவர் வெளியிட்டிருப்பினும் காலமாறுதல்களினால் அவ்வேதமும் பற்பல மாறுதல்கள் அடைந்து முடிவில் பயனற்றதாய்ப் போய்விடும் என்பதைக் கடவுளறியாதவரல்லர். ஆரிய வேதம் அங்ஙனமே பல வகுப்பாரின் ஆக்ஷேபத்திற்கும், சந்தேக விபரீதத்திற்கும் இடமாயிருப்பது எவரறியார்கள். ஆகையால் திராவிடர்கள் அருளால் எழுதப்பெற்றதாய்ச் (அல்லது வேறு விதமாய்) சொல்லும் லிகித வேதத்தைப் பார்க்கினும், சுயானுபவமாகிய ஆத்ம வேதத்தை விசேஷமென்று முற்காலத்திற்றானே இனைத் தெழுதிவைத்துக் கொள்ளவில்லை என்பதற் கையமில்லை. தமிழர்களது வேதமோ சகல தேசத்தார்களுக்கும், சகல மதத்தார்களுக்கும், ஸ்திரீ புருஷர்களுக்கும், பண்டித பாமரர்களுக்கும் சகஜமாய் விளங்கும்படியாக இருதயமாகிய ஏட்டில் எழுதப்பட்டிருக்கின்றது. திராவிட வேதமென்பதே சகல மதஸ்தர்களின் தர்மங்களுக்கும் மூலாதாரமாகையால் அவர்கள் பிரபஞ்ச வேதத்தோடிருந்து மனத்திருப்தி அடைந்து வேனக்க நூல்களை மட்டும் விஸ்தரித் தெழுதி கறந்த பால் கறந்தபடி எள்ளத்தனையும் கள்ளமின்றி விள்ளவுரைத்து இகத்திலே சுகத்தையடைய முயன்றனர் என்று தெரிகின்றது. இயல்வேதமென்பது வம்பில் வரவழைத்து நான் சேர்த்துக்கொண்டதே யென்றும், திராவிடர் இயல்வேத முடையவரென்பதற் கோர் அத்தாட்சியுமில்லதென்றும், அவ்வழியாகப் பார்க்கின் ஒவ்வொரு மதத்தினரும் இயல்வேதமுடையாரே யென்றும், பொதுவாய் ஆரியவேதத்தையே திராவிடர்களும் உடையவரென்றும், தனித்தோர் மதத்தை யுடையவர்களென்றும், ஊகிப்பதற்கு ஆதாரமின்றேதல் விட்டுவிடவேண்டுமென்றும், யோசிக்கு மிடத்து மதமே நிராதாரமான விஷயமென்றும், என்னை அதைரியப் படுத்துவோர் அநேக

ரிருக்கலாம். எங்ஙனமாயினுமாகுக, திராவிடர்கள் இப்பொழுதிருக்கும் சமயங்களிலே முன்னாளிலும் சார்ந்திருக்கவில்லையென்பது திண்ணம். * இப்பொழுது நாம் வணங்குகின்ற பிரமா, விஷ்ணு, உருத்திரன் இந்திராதி தேவர்களெல்லாம் ஆரியர் வணங்கிய தேவர்களேயன்றித் திராவிடர்கள் வணங்கிய தெய்வங்களல்லவென்று விசாரணையுள்ள எவர்களுஞ் சொல்வர். இம்மொழிகளும் வடமொழிகளே யன்றித் தமிழ் மொழிகளல்ல. தமிழில் எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குக் கடவுள், இறைவன், ஐயன், ஆண்டவன், முதல்வன் என்னும் பெயர்களே வழங்கற் குரியவை. காலமாறுதலினால் யாவும் தலைகீழாய் மாறிவிட்டது. ஆனால், இப்பொழுது வீரன் முதலிய துஷ்ட தேவர்களை ஆரியரும் வணங்குகின்றனர். சிவப்பாயிருக்கின்ற ஆரியனுக்குக் கருப்பாயிருக்கின்ற தெய்வ வணக்கம் எப்படி வந்ததோ தெரியவில்லை. திராவிடரைத் திருப்தி பண்ணும் பொருட்டேயன்றி வேறென்னை. அப்படியே நாமும் ஆரிய தெய்வங்களை வணங்கினோம். கிருஷ்ணன், விஷ்ணு, இராமர் கருப்பு நிறமே. முருகன் முதலிய கடவுளும் திராவிட தேவர்களே யன்றி வேறில்லை. வாசுதேவன், விஷ்ணு, உருத்திரன் என்னும் ஆரியநாமங்களை வணங்கலாம் கடவுளுக்கு

---

* ஆரியர் வந்தபின் பின்னரே திராவிட சமயத்திலும், அவர்களது சாஸ்திரங்களிலும், தத்துவ ஆராய்ச்சிகளிலும், மதக்கொள்கைகளிலும் கலந்து மத சம்பந்தமான புதுப் புத்தகங்களைப் பெருக்கியிருக்கின்றனர் என்பதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆரியருக்குப் பின்னர் சமணரும், பௌத்தரும், சைவ வைணவர்களும் ஒருவர்பின் னொருவராய்ப் பற்பல புது நூல்களியற்றிக் கடைச்சங்கத்தின் காலத்திற்றானே பல வடசொற்களையும் அவர்கள் மதக் கொள்கைகளையும் அபரிமிதமாய் நுழைத்துவிட்டனர். பிங்கலந்தை முதலிய நிகண்டுகளிலே தெய்வப் பெயர்த் தொகுதியிலும், மக்கட் பெயர்த் தொகுதியிலும், வட சொற்கள் விசேஷித்தும், ஏனைய தொகுதிகளில் வடசொற்கள் குறைந்துமிருப்பதற்கு மதத்தின் விபரீத அபிவிர்த்தி அநேகமாய்ப் பிற்காலத்தில் ஆரியராலேயே செய்யப்பட்ட தென்பதற்கோர் அத்தாட்சியாயினு மாகலாம். சைவ வைணவ சமய நூல்களாகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம் முதலிய நூல்களாலும், பாரத இராமாயணாதி புராணேதிகாசங்களாலும், வடசொற்கள் இன்னும் அதிகரித்தன. ஆதலின் ஆரியர் வந்தபின்பு நமக்குண்டான முக்கிய பிரயோஜனம் வடமொழியின் கலப்பொன்றுதான் என்று தெளியத்தக்கது. தமிழ் முன்னூல்களைப் பார்க்கப் பார்க்க வடசொற்கள் குறைவுபடுகின்றன. இதனால் ஓர் காலத்தில் இத்தமிழகத்தில் தனித் தமிழும், தமிழ் நூற்களும், தமிழ் மதமும் அவர்கள் வழக்க பழக்கங்களும், ஜாதி சமயாசாரங்களும் இருந்திருக்க வேண்டு

எவ் வார்த்தையைச் சொல்லி ஸ்தோத்திரஞ் செய்யினும் குற்றமில்லை. ஆனால் நாம் இத்தகைய பதங்களை வழங்குவோமாயின் சில சமயங்களில் விஷ்ணுருத்திராதி நாமங்கள், பலசமய பேதங்களையும், கொள்கைகளையுங் காட்டி நம்மைப் பிரித்துச் சமயச் சண்டைக்கு ஏதுவாக்குகின்றன. கடவுளை விஷ்ணுவென்று சொல்வோமாயின், அது ஈசுரனானவன் சர்வவியாபி என்னுமோர் உத்தம அர்த்தத்தையே தருவதேயாயினும் மற்றோர் வழியில இதற் கெதிர்மறையாய் விபரீத அர்த்தமாகி சதுர்ப் புஜங்களோடு இலக்குமி சமேதனும் சங்கு சக்ர கதாபாணியாய் நீல மேக சாமள வர்ணனும் வைகுண்டத்தில் ஆதிசேஷன் பேரில் படுத்திருக்கின்ற ஓர் அவதார சரித்திர நாயகனைக் குறிப்பிடுகின்றது. கடவுளைச் சிவனென்று சொல்வதையும் இவ்வண்ணமே சரித்தவிவகாரங்களோடு விவகரிக்கலாம். இவையனைத்தும் தாந்த்ரிக சாஸ்திரங்களென்றும், தத்துவார்த்தங்களுண்டென்றும், சிலர் சமத்காரமான பதில் சொல்லினும் பிரயோஜன மொன்றுங் காணோம். சாதாரண ஜனங்களின் நம்பிக்கையும் இவ்வண்ணமே விபரீத வழியில் வேரூன்றிவிட்டது. அவ்வேரைக் களைந்து எறிவது வெகு கஷ்டமாகவேயிருக்கின்றது. திராவிடர்கள் இவற்றையெல்லாம் நம்பவேண்டு

மென்று எவர் மனத்திற்குத்தான் படாமலிருக்கின்றது. ஆரியமதம் வேரூன்றியபோது கல்வி மேம்பாடுற்றது. ஆரிய முனிவரின் சிஷ்டாசாரமும் ஓங்கியது அக்காலமே. தமிழ் மக்களும் எதார்த்த குணத்தைக் காட்டிப் புதிதாய் வந்தவரைப் போற்றிப் புகழ்ந்தனர். இத்தகைய காரணங்களினால் ஆரியருக் கோர்விதத்தில் தமிழ் நாட்டில் தலைமை ஸ்தானமேற்பட்டது. பூர்வ குடிகளாகிய திராவிடர்களோ தலைமைக்குப் போட்டிபோடாது எதார்த்தமாயிருந்து நாளடைவில் க்ஷீணித்து இறுதியில் ஏவல்செய்து ஜீவிப்போராகவும், விவசாயஞ் செய்வோராகவும் மாறிவிட்டனர். பிராமணரின் பிரயோஜனார்த்தமாக சைவ வைணவ ஆலயங்கள் எங்கும் பெருகின. புராணங்களும், பிரபந்தங்களும் புது வழியில் அதிகரித்தன. லௌகிக வாழ்க்கையைத் திராவிடர்கள் வெறுக்கவாரம்பித்தனர். வர்ணாசாரம், மதாசாரம், புது வழியில் பிரபலித்தன. பூர்வ குடிகளாகிய திராவிடர்களோ ஒரே நிலைமையிலிருந்துவிட்டனர். தமிழ் நாட்டில் ஆரியரால் மதவிஷயத்தில் ஓர் வித ஏற்றமும் மற்றோர் விதத்தில் ஜாதிசமயாபிமானமும் மேலிட்டு பல கெடுதிகளும் வியாபித்தன. திராவிடர்கள் நெடுநாளாய் நாகரிக வளர்ச்சி குன்றி ஒரே தன்மை யடைந்ததற்கு இதுவே காரணம். பழைய திராவிடர்களுக்குள்ள மதநிலைமையை கண்டறிந்துகொள்ள அவ்வப்போது வழங்கி வந்திருக்கின்ற தமிழ்ச் சொற்களின் ஆராய்ச்சியும் அவ்வப்போது பிறந்த தமிழ் நூற்களின் ஆராய்ச்சியும் அவசியமென்பதற் கையமில்லை.

மென்பதற்குப் பூர்வீக திராவிட கிரந்த வாதாரங்க ளொன்றுமில்லை. இருப்பதாகக் காட்டுவாருளரேல் அவர் கொள்கையும் அங்கீகரிக்கலாம். அங்ஙனமின்றி நிராதாரவான விஷயங்களை எப்பொழுதும் நம்பிக்கொண்டிருப்பதற்கு நியாயமில்லை. மானுடருக்கு அறிவு விர்த்தியாவதற் கேற்றபடி விசாரணையும் விரிந்தோங்குமன்றோ? அன்றிக் கடவுளை அறிவதற்கு நமது இயற்கை யறிவே போதுமானது. இதுவுமன்றி, "உலகமே நமது வீடு, நன்மை செய்வதே நமது மதம்" என்றபடி நம்மாலியன்றமட்டும் உண்மையைப் பின்பற்றுவதே நமது கொள்கையா யிருக்கவேண்டும். இன்றேல் இந்த ஜென்மத்தாற் பயனில்லை.

கடவுள் வணக்கம்.

இவ்வுலகத்திலுள்ள பலரும் தத்தம் வருணத்திற்கும, இடத்திற்கும், மதத்திற்கும், அறிவொழுக்கங்களுக்குந் தக்கபடி ஏதோ ஓர் வழியில் கடவுளை வணங்குகின்றார்கள். நாம் மானிடராய்ப் பிறந்ததற்கு முக்கிய பிரயோஜனம் கடவுளைத் தொழுவதைத் தவிர வேறொன்றில்லை. கும்பிடுதல், வணங்கல், தொழுதல், போற்றல் முதலிய பதங்கள் தமிழ்ப் பதங்களே யாயினும், இப் பதங்கள் பிரமோபாசனைக் குரியதான வந்தனம், தியானம், பிரார்த்தனை முதலிய சாதாரண அர்த்தத்தைக் கொடுக்கக்கூடுமேயன்றி வேறில்லை. "விக்கிரகம்" என்னும் பதமே தமிழிற் கிடையாது. அப்படியிருக்க திராவிடனுக்கு விக்கிரக பூஜை எப்படி வந்தது? ஆதலின், விக்கிரகாராதனை பிற்காலத்ததென்பதிற் சந்தேகமில்லை. விக்கிரஹாராதனை யின்றேல் சைவ வைணவ சமயங்கள் கீழே விழுந்துபோமென்று அநேகர் அஞ்சுகின்றார்கள். அதற்காகவே நம்மீது கோபிக்கின்றனர். ஒருவர்க்குப் பயந்து எதார்த்தத்தை யொழிப்பதில் காரியமென்னை? உண்மையைச் சொல்லுமிடத்து ஆரியர் வந்தபின்னரே சைவ வைணவ சமயங்களென்றும், ஆராதனை யென்றும், அபிஷேகங்களென்றும், உற்சவ ஊர்கோலங்களென்றும், தாசி வேசிகளின் ஆட்டபாட்டங்களென்றும், கணக்கற்ற வைதீக பண்டிகைகளென்றும், அவற்றை நடத்த ஓர் தனி வகுப்பினராகிய பிராமண புரோகிதர்களென்றும், அர்ச்சகர்களென்றும், கற்பிதப் புராணங்களென்றும், புராணப் பிரசங்கங்களென்றும், விக்கிரகப் பிரதிஷ்டை யென்றும், கும்பாபிஷேகமென்றும், பற்பல பெயர்களால் மென்மேலும் அதிகரிக்க வாரம்பித்தன. இப்பொழுது "மதம்" என்னும் பெயரால் வீடுகள் தோறும் செலவுகளதிகரித்து

வின் செலவுக்கும் வறுமைக்கும் வழியானதுவுமன்றித் திராவிட தேசமுமுறைமையும் போலியாசாரங்களாகிவிட்டன.* இதுவுமன்றி பழைய காலத்

---

* மதமென்றால் கொள்கை, அறிவு, பெருமை முதலிய நல்ல அர்த்தத்தோடு வெறி, கொழுப்பு, செருக்கு, உட்பகை, பைத்தியம், விகாரம், என்னும் விபரீத அர்த்தங்களுமுள. இந்த அர்த்தங்களுக் கேற்றபடியே திராவிடர்களுக்குள்ளும் வெவ்வேறு மதங்களாய் மாறின. இம்மட்டோ பூர்வம் தொழில் வேறுபாடேயன்றி இந்நாட்டில் ஜாதிகுல வேறுபாடுகளில்லை, சமய பேதங்களுமில்லை. ஆரியர் வருவதற்கு முன்னரே சுகவாழ்விற்கு இன்றியமையாத பல சௌக்கியங்களும், பரிசுத்த ஆஸ்திக மதமும், நல்லொழுக்கமும், நாகரிகமும் பொருந்தியிருந்தனர். ஆதியிற் குடியேறின ஆரியர்கள் மகோன்னத ஸ்திதியிலிருந்த திராவிடர்களிடத்தில் அநேக விஷயங்களைக் கற்றுத் தெளிந்தும், வடமொழியைச் சமயானுகுணமாகத் திருத்திக்கொண்டும், பின்னால் பலவிதத்திலும் அபிவிர்த்தி யடைந்தனர். வடமொழியைத் திருத்தினதும் அப்பாஷையிலே பல புத்தகங்களை எழுதினதும் பொய்யென்று சிலர் சொல்லவுங்கூடும். சைவ சம்பந்தமான அறுபத்துமூன்று நாயன்மார்களும் வைணவ சமயாசாரிகளாகிய பன்னிரண்டாழ்வார்களும் பேசின பாஷை எது? அவர்களிருந்த இடங்களெவை? அவ் விவகாரங்கள்கூட தேவ பாஷையாம், சமஸ்கிருதத்திலிருப்பதற்கு நியாயமென்ன? ஆகையால் திராவிட தேசபாஷையிலுள்ளதையும், தேச விவகாரங்களையும், ஆரியர் எழுதிவைத்துப் பெருக்கிக்கொண்டதும், கற்றுத் தெளிந்ததும் பொய்யெனில் ஒருபோதும் பொருந்தாது. இவ்வண்ணம் திராவிடர்களிடம் ஆரியர் முதலில் கற்றுக்கொண்டதுபோய் பின்னால் அவர்கள் கற்றுக்கொடுப்போராகி சகல ஜாதியார்களுக்கும் குருஸ்தானமாகி எவ்வழியிலும் திராவிடர்கள் கடைத்தேறுவண்ணம் வர்ணாசிரம தர்மமென்னும் நிர்ப்பந்த சட்ட திட்டங்களை யேற்படுத்தி திராவிடருக்கில்லாத பிம்பாராதனை செய்ய வழிகாட்டினார்கள். அவர்கள் இடைவழியிற் கற்பித்த அர்ச்சையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்களே யன்றி இத்தேசத்தார் பூர்வீக நல்ல வழக்கங்களை அனுசரிப்பதில்லை. ஆரியர் வந்துவருவதற்கு முன் சூத்திரனென்னும் பதமே தமிழிலிருந்திருக்கவில்லை, இப்பதம் ஆரியர் முதலில் குடியேறிய தேசத்திலே இருந்த தாழ்ந்த ஜனங்களுக்கு ஒருவாறு இட்டுவழங்கியிருக்கலாம். அப்படிப் பார்ப்பினும் ஆரிய சூத்திரருக்குச் சூத்திரரென்னும் பெயர்பொருந்துமே யன்றி மற்றவர்கட்கு அப்பெயர் பொருந்தாது. திராவிட தேசத்திலே வேளாளர் முதலியவர்கள் நன்னிலையிலிருந்துள்ளார்கள். பள்ளர், பறையர் முதலியவர்கள் இவர்கட்குப் பணி செய்தனர். இப்பறையர் முதலியவர்களுங்கூட இத்தேசத்திலே தாழ்ந்த ஜாதியினரென்பதற்கில்லை.

திலுங்கூட நம் முன்னோர்களால் கட்டப்பட்ட அம்பலங்களென்னும் ஆலயங்களில் அருட்குறி நிறுத்தி வணங்கிய விடமென்று ஒருவாறு தெரிகிறதேயன்றி இக்காலத்திலிருக்கும் மாநுட ரூபங்களைப்போல விக்கிரகங்கள் செய்துவைத்து வணங்கிய இடங்களாய்த் தெரியவில்லையே. முன்னாளில் தமிழ் நாட்டில் கடவுளைத் தொழுவதற்கு அமைக்கப்பட்ட அம்பலங்களிலே கடவுளை வழிபடுதற் கறிகுறியாக நிறுத்தப்பட்ட உருவிற்கு 'கந்து'' என்று பெயரிட்டிருந்ததாய்த் தெரிகிறது. நச்சினார்க்கினியரும் இதற்கு தெய்வமுறையுந் தறி என்று உரைகூறினர். இப்பதத்திற்குக் கட்டுத்தறி, தூண் பற்றுக்கோடு, மாடுபிணைக்குங் கயிறு, யானை அணைதறி முதலிய பல

உயர்ந்தவரே யாவர். இத்தகைய உயர்வு தாழ்வுகளெல்லாம் ஆரியர் காலத்திற்குப் பிற்பட்ட கொள்கை என்பதற் கையமில்லை. அறிந்தும் அறியாதார்போல இன்னும் நாமிருப்ப தென்னை. சூத்திரர்களுக்கென்று அவர்கள் காட்டிய வழியிலேயே யிருந்து மெய்வருந்தித் தேடிய பொருளை அந்தணரென்போர்க்கு மட்டும் தானஞ்செய்து அன்னோர் எவரேயாயினுஞ் சரி. அவர் காலில் வீழ்ந்து அடிபணிந்திருக்க வேண்டுமென்பது அவர்களில் அநேகருக்குக் கருத்தேயன்றி அவர்களுக்குச் சமத்துவமாய் இந்திய அன்னை வயிற்றிற் பிறந்த சகோதரர் சகோதரிகள் யாவருமே இருக்க வேண்டுமென்கின்ற நல்லெண்ணமிருப்பதாய்த் தோன்றவில்லை. அவர்கள் கௌரவம் எந்நாளும் சாஸ்வதமாய் நிலைப்பதற்கே பல கட்டுக் கதைகளாகிய புராணங்களை எழுதி புராண பிரபலத்திற்கும் காரணபூதராயினர். நாகரிகமான இக்காலத்திலுங்கூட அவர்களிற் சிலர் சுயநலங் காரி கற்பித்த வழியே இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். ஆரிய மதாசாரமனைத்தும் வஞ்சனையுடையதல்லவென்றும், கோயில்களிலிருக்கும் பிம்பத்தைப் பிராமணர்களும் பூசிக்கிறார்களேயென்றும், ஆகவால் அர்ச்சை சிஷ்டாசாரமேயென்றும் சிலர் சொல்லக்கூடும். ஆனால் எல்லாப் பிராமணர்களும் அங்ஙனஞ் செய்யவுமில்லை. எழுதிவைக்கவுமில்லை. யாதோ சுயநலங்காரியே சிலர் மட்டும் விக்கிரகத்தைத் தொழுகின்றார்களேயன்றி வேறில்லை. இருப்பினும் பிராமணர்களே மெய் ஞானிகளென்பதற்கு அறிகுறியாக மூன்று வேளையும் பிரமகாயத்திரி மந்திரங்களை ஜெபித்துக்கொண்டு மற்றவர்களையும் அங்ஙனமே செய்யச்சொல்லாது விக்கிரகாராதனை புரியச்சொல்லிவருவது விந்தையன்றோ? திராவிடர் விக்கிரகாராதனைசெய்ய பழைய கிரந்தங்களில் விதிகளொன்றுமில்லை. விதிகளில்லாதபோது விக்கிரகாராதனை யிருந்திருக்க நியாயமில்லை. இருப்பின், நாம் பின்பற்றவேண்டியதே. தொல்காப்பியரும், திருவள்ளுவரும் மற்றப் பெரியோர்களும் ஈசுரனைப் பொதுவாகத் தியானித்தேயுள்ளார்கள். சைவத்தில் நாயன்மார்களும், வைஷ்ணவத்தில் ஆள்வாராதிகளும் சைவ வைவ

வித அர்த்த பேதங்களுள. அக்காலத்து அம்பலங்களிலே ஏதோ ஓர்வித அருட்குறி நிறுத்தி வணங்கியதாய்ப் பாவிப்பதற்கும் சரியான ஆதாரமில்லை. மனிதர்களுக் கியற்கையாய் மனத்தின்கண் உதிக்கும் ஆஸ்திக மதத்திற்கு மூலகாரணமான எண்ணங்களையே ஓர் பற்றுக்கோடாய்க் கொண்டு அதனையே ஆகுபெயராக "கந்து" என்னும் பெயரால் அக்காலத்தில் வழங்கியிருக்கக் கூடும். இவ்வழியாகப் பார்ப்பின் பூர்வீக தேவாலயங்களிலே ஓர் குறியுமின்றி அதாவது தற்காலத்திய நற்பாங்கடைந்த ஞானியார்களைப்போல ஈசுரனைத் தியானிப்பதற் குரித்தான உபாசன மண்டபங்களாக இருந்திருக்கவேண்டும். நாகரிகம் நிரம்பிய பண்டை நாளிலே கோயில்களிலிருக்கும் பிம்பங்களைப் பற்றிப் பாடியிருக்கின்றார்களே. அவைகளே விக்கிரகாராதனைக் கோர் ஆதாரமன்றோ வெனில் அவைகளெல்லாம் ஆரியர் வந்தபின் வெகு காலத்திற்குப் பிற்பட்ட சமீபகால விவகாரமாகையால் ஆதாரமாகாது. இதுவுமன்றி அவர்கள் பிரமக்கியான விசாரணையில்லாத ஞானசூன்யர்களாவென்று சிலர் வினவக்கூடும். அவர்கள் தீர்க்க விசாரணையுள்ளவர்களே யென்று வைப்பினும் அவர்கள் காலத்திலுங்கூட விசாரணை குன்றிய ஜனங்கள் பலரிருந்து அவர்களை அதைரியப்படுத்தியிருக்கக்கூடும். ஜனங்களிருக்கும் நிலைமைக்குத் தக்கபடி பற்பல பாடல்களைப் பாடி காலத்திற்குத் தக்கபடி யிருந்திருப்பார்கள். இருப்பினும் அவர்கள் அருளிச்செய்த சில பாடல்கள் ஆழ்ந்த கருத்தையும், புதை பொருளையும், தத்துவ ஞானத்தையும், பிரமத்தியானத்தையும், நமக்கு எக்காலத்திலும் ஊட்டக்கூடியவைகளா யிருக்கின்றன. ஆதலால் சர்வ சமய சமரசமாக பிரமஞானத்தைமட்டும் நமக்குப் போதிக்கக்கூடிய பாடல்களை நாம் போதிக்கவேண்டும். தீயவைகளை நாம் விலக்கவேண்டும்.

திருவாசகம்.

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றா
னுலகேழெனத் திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

சுந்தரத் தின்பக்குயிலே சூழ்சுடர் ஞாயிறுபோன்று
மந்தரத்தேநின் றிழிந்திங் கடியவ ராசையறுப்பான்
முந்து நடுவு முடிவுமாகிய மூவரறியாச்
சிந்துரச்சே வடியானைச் சேவகனை வரக்கூவாய்"

யம் மக்களைப்போல விக்கிரகங்கள் செய்துவைத்து வழிபடுதலில்லை என்று தெரிகின்றது. காணவுங் கருதவுங்கூடாத முதல்வனுக்கு அவரவர்கள் நினைத்தவாறு உருக்கள் செய்துவைத்து வணங்கல் பொருந்ாதென்று நினைத்து எங்கும் நிறைந்த முதல்வனை ஓர் பிழம்பாகக்கொண்டு வழிபடுவதற் குறிகுறிப்பாக பிழம்புவடிவான சிற்றுருவை நிறுத்தியும், மனத்தின்கண் தியானித்தும் வந்தார்களென்பதைப் பூர்வீக திராவிட கிரந்த பரிசீலனையுள்ளவர் யாவருமே ஒருவாறு ஒப்புக்கொள்ளுகின்றனர். சிற்றுருவை நிறுத்தினார்களென்று சொல்வதை ஈசுர தியானத்திற்கு ஏகதேச உபமானமாகக் கொள்ளவேண்டுமேயன்றி வேறில்லை. அக்காலத்தில் திராவிட மதஸ்தருக்கு நல்லொழுக்கமும் அருட்குணமுமே பிரதான தர்மமாயிருந்தது. உண்மையான திராவிடனுக்கு ஆலயமுமில்லை. கடவுள் வசிக்குமிடங்களென வெவ்வேறு இடங்களுமில்லை. ஈசுரன் வாசஞ்செய்வது அவரவர்களின் மனமேயன்றி வேறில்லையென்று நான் சொல்லக்கூடிய பரிசுத்த நன்னிலையில் இருந்தது. இப்பொழுதும் பூர்வீக ஒழுக்கத்தைப் பின்பற்றக்கூடிய திராவிடன் தன்னிருதய மண்டபத்தை நிலையான நட்பு, நன்றியறிதல், பணிவு, அன்பு, பக்தி, வைராக்கியம். முதலிய தெய்வீகக் கடமைகளாகிய நல்ல வாசனையுள்ள பல புஷ்பங்களினால் அலங்கரித்துவைக்க முயல்வான். ஆரியர் போதனைகளின்பேரில் ஆக்கப்பட்ட ஆலயங்களின்

திருவாய்மொழி.

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

திருமா னான்முகன் செஞ்சடையா னென்றிவர்க ளெம்
பெருமான் றன்மை யாரறிகிற் பார்பேசி யென்
ஒருமா முதல்வா வூழிப்பிரா னென்னையா ளுடையக்
கருமா மேனிய னென்பனென் காதல் கலக்கவே.

இத்தகைய பாடல்கள் அநேகமுள. கிரந்த விஸ்தீரணத்திற் கஞ்சிவிடுகின்றேன். விருப்பமுள்ளவர்கள் திராவிட புத்தகங்களிலே ஆங்காங்கு கண்டு தெளியலாம். திராவிட வேதமெனப் புகழப்படும் திருக்குறளிலே

விசித்திர வேலைகளிலும், மாநுட சரீரமாகிய நமது ஆலயம் கடவுளுடைய அநுக்கிரகத்தினுல் மிக விசித்திரமாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், இந்த இருதயக் கோயிலை எந்நாளும் கெடாமல் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டியது திராவிடரின் முதற் கடமையாகும். வெளி ஆலயத்திற்கு அழிவிருப்பினும் உண்மையான ஆத்மாலயத்திற்கு ஒரு போதும் அழிவில்லை. இவ்வாலயமோ கடவுளினுடைய சொந்தக் கைவேலை யினை ஆலயங்களோ அங்ஙனமல்ல, பாமர ரஞ்சிதமானவை. ஓ! கல்வி கேள்விகளிற் சிறந்த திராவிட சகோதரர்காள்! பழந்தமிழ்க் குடிகளைப்போல் ஈசுரனை ஆத்மாலயத்தில் வைத்து தியான மார்க்கத்தால் ஏன் ஆராதித்தலாகாது? ஆரியரின் மத்தியகால போதனைகளின்பேரில் ஏற்பட்ட சாதி சமயாசாரங்களுக் கெல்லாம் இடங்கொடுத்து மானுஷீகத்திற்குரிய பொது மார்க்கத்தை இழந்து கணக்கற்ற பிரிவுகளாய்ப் பிரிந்து பிறந்த தேசத்திலேயே ஒருவர்க்கொருவர் பகைவர்களாகிப் போராடுவதற்குத் தனித் தமிழ்க் கிரந்தங்களில் ஆதாரமுங் கிடையாது. இருப்பின், பண்டிதோத்தமர்கள் வெளிப்படுத்தி என்கொள்கை தவறெனில் திருத்திக் கொள்ள சித்தமாகவேயிருக்கின்றேன். ஆனுல் பழந்தமிழ்க் குடிகளிலே வீராராதனை யென்பதுமுண்டு. அதாவது, ஆத்மப் பரித்தியாகஞ்செய்யும் வீரருக்கு "வீரகல்" நடுதலும், அக் கல்லுக்குக் கோயிலும், மதிலும், மற்றச்சிறப்புகளும் செய்தலும், மலரும் மதுவும் வைத்துப் படைத்து உற்சவங் கொண்டாடிக் களித்தலும், பத்தினி தேவியாருக்கு ஞாபகார்த்த

சகல மதஸ்தரும் அநுசரிக்க வேண்டிய சமரச ஞானம், சன்மார்க்கப் பிரவர்த்தனம், சர்வஜன சகோதரவாத்சல்யம், சித்த சமாதானம் முதலிய பல சகுணங்களை நமக்குக் கற்பிக்கும்போது அதனினும் தாழ்ந்த கிரந்தங்களின் ஆதாரங்கள் நமக்கேன்! அன்னிய மதப்பற்றேன்! பகையேன்! "திருவள்ளுவர் மதமே" திராவிட மதம். இத்திராவிட மதமே பிரபஞ்சத்தின் சமரச மதம். இத்தகைய நூல்களைப் பின்பற்றுவதினுல் திராவிடர் முதல் யாவருமே ஒரே மதம், ஒரே குடும்பம், என்று சொல்லும்படியான அத்தகைய உத்தம ஒற்றுமையை நமக்குண்டாக்குமே. திருக்குறளின் உட்பொருளும் மற்றச் செம்பொருளான தமிழ் நூல்களின் நற்கருத்துகளும், எல்லாச் சாதியாருக்கும், எல்லாச் சமயத்தினருக்கும் இன்றியமையாத வேண்டற்பாலன. ஜனங்களியல்பு காலங்கடோறும் வேறுபாடடைவதுபோல மதங்களும் அவ்வாறே வேறுபாடடையும் இயல்பினவென்று அறிந்தே திருவள்ளுவர் முதலிய திராவிட மகான்கள் மதவிஷயத்தில் சகல மதஸ்தர்களுக்கும் பொதுவாயிருக்கும்படி சொல்லி யுள்ளார்கள். பூர்வீக திராவிடர்கள் மதமும் இத்தகைய நன்னிலையிலிருக்கும்போது நாம் இடையில் வந்த தகாதவழியை ஏன் பின்பற்றவேண்டும்.

மண்டபம் சமைத்தலும், அன்னோரைப் பத்தினிக் கடவுளென வணங்குதலும், பழந்தமிழர் ஐதிகமே. எனினும் இது முற்றிலும் ஈசுர ஆராதனையைக் குறிக்காது. கற்பைப்பற்றி தமிழிலே மிகச் சிறப்பித்து எழுதப்பட்டிருக்கின்றது. கற்புடைய மகளிரைக் கௌரவித்ததுபோலவே வீரத்தன்மையுள்ளாரையும் கௌரவித்து மிகச்சிறப்பித்தனர். "என்னைமுன்னில்லன்மின் றெவ்வீர் பலரென்னை-முன்னின்று கன்னின் றவர்" என்னும் திருக்குறளினால் பண்டைக் காலத்தில் படைச்செருக்குற்று போரேற்று நின்று பகைவர் வேல் பட்டு வீழ்ந்து கல்லினிடத்தே நின்ற வீரர் அநேகரென்று தெரிகின்றது. ஐயனார், மதுரைவீரன், கருப்பண்ணன், மாரி, வீரி, பிடாரி, காட்டேரி முதலிய துஷ்ட தேவிகளும், தேவர்களுமே திராவிட தெய்வங்களென்றும், பூர்வீக திராவிட மதமும், ஆசாரமும் இத்தன்மையது தானென்றும், கற்றறிந்த விவேகிகளும், சொல்லும்படியான சரித்திர ஞான சூன்யத்திலே திராவிட தேசம் வந்துளது! தற்சமயத்திய தாழ்நிலையை விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன்.

திராவிடர்களின் சுவர்க்க நரக யூகை.

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் இயற்கையறிவையும் நல்லொழுக்கங்களையும் ஈசுரன் அங்கீகரிப்பார்; தீய வொழுக்கங்களை வெறுப்பார் என்னும் நம்பிக்கையும், நன்னடக்கைக்குச் சன்மானமுண்டென்றும், அஃதிலார்க்குத் தண்டனை யுண்டென்றும், நினைக்கும் பரமார்த்த எண்ணமுமே இம்மை, மறுமை யுண்டென்னும் யூகைக்கு ஆதாரபூதமாகும். பசியைத் தீர்க்க ஆகாரமும், தாகத்தைத் தணிக்க ஜலமும், துக்க நிவிர்த்திக்குத் தேற்றுதலும், வேண்டியிருப்பதுபோல நமது நற்குண நற்செய்கைகளுக்கும், நல்ல நடை உடை பாவனைகளுக்கும், தக்க சன்மானிப்பு இகபரமிரண்டினும் வேண்டியதாயிருக்கின்றது. இவ்வுலகத்திலே நாம் அடையக்கூடிய சுகமனைத்திலும் மாசு மறுவற்ற மனத் திருப்தியே பிரதானமென்பதிற் பிழையில்லை. இவ்வுலகத்திற் போதுமான திருப்தியின்மையினால் பலரும் இம்மைச் சுகத்தை அருவருக்கின்றார்கள். இங்கே பூரண சுகம் கிடைக்காததினால் மறுமைச் சுகத்தை மனத்தால் யூகித்துச் சிலர் எதிர்பார்க்க ஏதுவாகின்றது. நமது அறியாமை முழுதும் நீங்கப்பெற்று முதல்வன் அருளோடு ஒற்றுமைப்படுதலே முத்தியின்ப மென்பாரும், மேன்மேலும் சற்குணங்கள் அபிவிர்த்தியாகி கடவுளினது சமீபத்தை அடைவதே மோக்ஷமென மொழிவாரும், முத்தி யென்பதற்கு இன்ப

துன்பங்களை விடுதல் அதாவது எல்லாப் பற்றுகளையும் விட்டு அடையுமிடமெனக் காரணப்பொருளுரைப்பாரும், வீடு என்னும் தமிழ்ப்பெயரின் பொருளும் எல்லாஇன்பங்களையும் விட்டுவிடுவதே மோக்ஷமென்றும் இதைவிட வேறு மோக்ஷமில்லை யென்பாருமாக விருக்கின்றனர். ஈசுரனே சர்வ மங்கள குணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பவர் எவ்வளவுக் கெவ்வளவு நமக்குச் சற்குணங்களுண்டாகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு ஈசுரனுடைய சாமீபத்தை நாமும் அடைகின்றோம். நமக்கு உயர்வும், நிர்மலமான ஆத்மானந்தமும், இகபர சுகமும், பெறுகுவதற்கு நமது நற்குணங்களைத்தவிர வேறு ஆதாரமொன்று மில்லை யென்று இதனால் நன்கு விளங்குகின்றது. ஜீவ சிருஷ்டியானது ஆனந்தத்தைக் கொடுப்பதற்கே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்று பக்த சிரேஷ்டர்களெவரும், சொல்லுகிறபடி நமது செய்கைகளை காலொருவண்ணம் திருத்திக்கொண்டு போகவேண்டும். திருக்குறள் என்னும் திராவிட வேதத்திலே நல்லொழுக்கத்தைத் தவிர வேறு மோட்ச நரகங்களைப்பற்றி விபரீதமா யொன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. வைகுண்டம், கைலாசம், முதலிய ஸ்தல விவரங்களைப் பற்றியும், புராதான எந்த திராவிட நூல்களிலும், நன்கு காணப்படவில்லை. தமிழ்ப் பாஷையில் பொதுவாய்க் கடவுளொருவ னுண்டென்னும், நம்பிக்கைக்குரிய சொற்களும். ஆத்மார்த்தத்திற்குரிய சில சொற்களும், உண்டேயன்றி அந்தக் கரணங்களையும், மனோபாவங்களையும் விவரிக்கும் விசேஷதச் சொற்களில்லை. அதற்கெனப் பல புஸ்தகங்களுமில்லை. மோக்ஷ நரகங்களை உணர்த்தும் சொற்களைத் திராவிடர்கள் அறியார்கள். ஆத்மஞானமுண்டானதாய் நமக்கவுமில்லை. சுவர்க்க நரகம் என்னும் பதங்களும் தமிழல்ல. அதற்குப் பதிலாக நன்மை தீமை யென்னும் யதார்த்த பதங்களுண்டு. எக்காலத்திலும் ஒழுக்கத்திலே பிரக்கியாதி பெற்றவர்கள் திராவிடர்கள் என்பதற் கையமில்லை. திராவிடர்கள் பூர்வீக வாசனை போகாது யதார்த்தவாதிகளாகவே இக்காலிலும் அநேகமாய் இருந்துவருகிறார்களென்று புகழப்படுவதற்கு நாம் சந்தோஷிக்கவேண்டும். ஆகையால் திராவிடர்கள் ஆரியரின் கற்பனை அலங்கார கிரந்தங்களையும் போதனைகளையும் பின்பற்றி வாழ்நாள் முழுவதும் வீணேபோக்கி விபரீத மதவிசாரணையிலிறங்கி இகலோக சுகத்தை முற்றிலும் வெறுக்காமல் நாம் பரிசுத்த லௌகிகர்களாயிருக்க முயலவேண்டும். மாசுமறுவற்ற லௌகீகமும் நம்மை எப்படியோ நேர் வழியில் மோக்ஷமண்டலம் சேர்ப்பிக்கும். பரலோக மோக்ஷத்தில் அநேகருக்குச் சந்தேகமெனினும் பூலோக மோக்ஷத்தில் எவர்க்கும் சந்தேகமில்லையே. நாம் மாநுடராய்ப் பிறந்ததற்கு அதற்குரிய மாநுஷீகக் கடமையை நாம் நன்கு நிறைவேற்றினோம் என்னும் ஆத்ம திருப்தியும் மனச்சந்துஷ்டியும் வேண்டும். இது சாமான்னியமன்று. இத்திருப்தி எளிதிற் கிடைத்தவிடன் வேறு மோக்ஷத்திற்காக முயலவேண்டுவதில்லை. அறியாது செய்த குற்றத்தைக் குறித்த மனம்.

கசிந்துருகி வருந்துவதே மானிடருக்குப் போதுமான நரக தண்டனையென்பதிற் சந்தேகமில்லை. வேறு நரகமென்பதும் வேண்டியதில்லை. மரணத்தறுவாயில் அவரவர் செய்த நன்மை தீமைகளை நினைந்துருகி வருந்தாதவரெவர்? பாவஞ்செய்யும்பொழுதெல்லாம் நம் மனமே நம்மைச் சுடுகின்றது. புண்ணியம் புரியும்பொழுது நம்மை நம் மனமே புகழ்ந்து பூரிக்கச் செய்கின்றது. ஆகவால், சுவர்க்க நரகம் இகத்திலேயே இருக்கின்றது. பிற் சில சமயத்தார் மோக்ஷ மண்டலமென்பது தனித்து எவ்விடமோ இருப்பதாகச் சொல்லி பிரமிக்கச் செய்கின்றார்கள். பூர்வீக திராவிட மகான்களோ ஒவ்வொருவரின் மனத்தின் கண்ணும் சுவர்க்க நரகமிருப்பதாக நினைத்து அவரவர் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடந்து சத்திய காமிகளாயிருக்க முயன்றுள்ளார்கள். இக்காரணத்தாற்றான் சுவர்க்க நரகங்கள் இத்தன்மையுடையன வென்றும், எவ்வெள்ளன வென்றும் விவரமாய்த் திராவிட கிரந்தங்களொன்றும் நன்கு எழுதிவைக்கவில்லை. புண்யாத்மாக்களும், பாபாத்மாக்களும் வசிக்குமிடங்களை சுவர்க்க நரகமென்று ஆரியசமயாபிமானிகள் சொல்வார்களாயின் அஃது இப்பிரபஞ்சத்தைத் தவிர வேறு எவ்விடத்திலிருக்கின்றதோ தெரியவில்லை. * பூர்வீக திராவிடர்களைப் பின்பற்றிய பௌத்தர், சம

---

* ஆரிய சமயாசாரத்தைப் பின்பற்றியபின் நமக்குச் சுவர்க்க நரகத்தைப் பற்றிய விநோத வர்ணனைகளும், புராணேதிகாச ஆதாரங்களும் பல ஏற்பட்டன. நரகமென்றும் பாதாள லோகத்திலே கருத்த முகமும் பருத்த விழிகளும், உறுத்த பார்வையும், சிவந்த கண்களும், வளைந்த தந்தங்களும், வெடித்த சொற்களும் உடைய இரக்கமென்பது எள்ளத்தனையுமில்லாத எமபடர்கள் பலர் உளரென்றும், அன்னோர் பாவிகளாகிய நம்மை வெட்டுவித்தும், குத்துவித்தும், அடிப்பித்தும், அவயவப் பழுது செய்வித்தும், விஷ ஜெந்துக்களை விட்டுக் கடிப்பித்தும், நெருப்பிற் காய்ந்த எண்ணெய்க் கொப்பரையிற் போட்டுப் பொரித்தும் இன்னும் இவ்விடத்தில் எழுதொணாத பலவித இம்சைகளைச் செய்தும், செய்வித்தும் வருவரென்று பௌராணிகர் எழுதிவைத்துள்ளார்கள். இத்தகைய பயங்கரமான வர்ணிப்புகளும் வேண்டியதே எனவும் இன்றேல், உலகத்தினர் பயப்படார்களெனவுஞ் சொல்வாருமுளர். பாலகரையும் அறியாக் குழந்தைகளைப் பாவித்துப் பூச்சிக்காட்டுவதுபோல் பொய்க் கட்டுக்கதைகளைக் கற்பித்து அச்சுறுத்துவது சரியல்லவே. எப்படிப் பார்ப்பினும் இப் பயங்கரமான வர்ணிப்புகள் பாமரரஞ்சிதமேயன்றிப் பண்டிதரஞ்சிதமாகாதென்பதுதிண்ணம். பூர்விகத் திராவிடக் கிரந்தங்களிலிருந்து இத்தகைய ஆதாரங்களெடுத்துக் காட்டுவாரிலர். தருமத்தினின்று தவறியவர்களுக்குத் தக்க தண்டனை செய்து தர்மத்தைக் காத்தலைக் கட

னர் முதலிய பற்பல சமயத்தார்களும் காட்சியிலுள்ளது இவ்வுலகமொன்றே, ஆதலால் நமக்கு நரகமும், நரகாக்கினியும், எமபடர்களும், எவுதத்கர்த்தாக்களும் நம்மைத்தைவிட்டு வேறெவ்விடத்திலேயோ யிருந்து இம்சிப்பதாய் நினைத்து பீதிகொள்வதில்லை. திராவிட சமயத்தின் மோக்ஷ நரக முடிபுகளும் இவ்வண்ணமே பூர்வத்திலிருக்த நீரிலே உதிக்கும் நீர்க்குமிழிகள் நீரிலே நின்று நீரிலே ஒடுங்குதல்போல் இப்பிரபஞ்சத்திலுதிக்கும் பல்கோடி ஜீவராசிகளும் இப்பிரபஞ்சத்திலேயே யிருந்து ஒடுங்கிவிடுகின்றன. இவ்வாதாரத்தைக்கொண்டு பூர்வீக திராவிடர்களும் இப்பிரபஞ்சத்தையே சுவர்க்க நரகமென யூகித்தலில் பிழை யாதோ தெரியவில்லை. எனினும், முற்றிலும் உலகாயிதராய் இருந்தனரென் றியம்புதற்கில்லை. மரணத்திற்குப் பின் நிலைமையைப் பற்றிச் சிந்தித்துக் கற்பனைக் கிரந்தங்களெழுதிவைத்துக்கொள்ளவில்லையென்பது மட்டும் நன்கு விளங்குகின்றது.

திராவிடரின் உண்மை நூல்களும், ஆரியரின் கற்பித நூல்களும்.

மநுஸ்மிருதி, பாரத இராமாயணாதி, இதிகாச புராணங்கள், ஜோதிடம், சதுர்வேதம் முதலிய நூல்கள் ஓர் விதத்தில் வஞ்சனையாகவும், மற்றோர் விதத்தில் ஒருதலைச்சார்பாகவும், ஆங்காங்கு ஆரிய மதத்திற் கனுகுணமாக புனைந்துரைத்த அதனால் இதுகாறும் ஜீவித்தவரும் ஆரியர்களைப் போல இத்தேசத்தின் பூர்வ குடிகளாகிய திராவிடர்கள் மற்றும், சகலவர்க்கோதி ஓர் ஜாதி சமயப் பற்றுகளை விசேஷித்துக் கூறும் நூல்களை இயற்றாது பொதுஜன பிரயோஜனார்த்தமாகப் பாடுபட்டு நீதி சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், சங்கித சாஸ்திரம், தாவரவர்க்க சாஸ்திரம்

துரோண யுத்தத்தில் தர்மனென்றே பெயரென்றும், இவன் மகனை தர்மராஜனுக்கு வந்தறிவித்தானென்றும், இத்தகையோனுங்கூட ஓர் சமயம் உபயார்த்தமாய் "அசுவத்தாமா இறந்தான்" என்று பொய் சொன்னதால் நரக வேதனையைத் தன் கண்களால் சென்று காணும்படி நேரிட்டதென்றும் சொல்லாநின்ற அகத்த புராண வரலாறுகள் போன்றவைகள் ஆரிய நூல்களிலே எங்கும் பரக்கக் காணலாமேயன்றி திராவிட கிரந்தங்களிற் காண முடியாதாகும்.

முதலிய நல்ல பயனுள்ள சாஸ்திரங்களை மட்டும் விவரித்தெழுதி சுதேசத்திற்கு நன்மை செய்தன்மையால் ஆரியரினும் இத்தேசப் பூர்வ குடிகளாயுள்ள திராவிடர்களே நாகரிகமுடையவர்களென்பதற் கையமில்லை. மத்திய காலத்திலெழுந்த பௌத்தமத முதலிய சமயங்களை ஸ்தாபித்தவர்களும், அதை உலகெங்கும் வியாபிக்கச் செய்தவர்களும், அநுஷ்டித்தவர்களும், இத்தேசத்தவரே யன்றி ஆரியரல்லர். ஆரியமத விரோதிகளாகிய பௌத்தர்கள் நல்ல நூல்களும் இயற்றியுள்ளார்கள். சாங்கிய மதஸ்தாபனராகிய கபிலரென்பவர் மதவிஷயமாய் ஒருவரோடொருவர் தர்க்கிக்கும் காலத்தில் வாதவிஷயமாய் இருபக்ஷங்களிலும் நேரும் ஒழுங்கின்மையைக் கண்டு அவற்றைச் சீர்திருத்த தர்க்க சாஸ்திரமென்னுமோர் அரிய நூலை எழுதிவைத்தார். இவ்வருமையான சாஸ்திரத்தை வர்த்தக விஷயமாய் அடிக்கடி இத்தேசத்திற்கு அக்காலத்தில் வந்துகொண்டிருந்த கிரீக் தேசத்தார் தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோயினர். அத்தேசத்துத் தத்துவ சாஸ்திரியாராகிய சா[illegible]ஸ் என்பவர் இந்நூலைக் கற்றுணர்ந்து தன்னுடைய சிஷ்யர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். பின்னர் அவர்கள் மூலமாய் உலகவியாபகமாயிற்று. இம்மையின் சுகமே மோக்ஷமென்றும், துக்கமே நரகமென்றும், இருப்பினும் அநித்தியமான இப் பிரபஞ்சத்தின் சுகவாழ்க்கையின் பொருட்டு ஒருவரை யொருவர் வஞ்சியாமலிருக்கவேண்டுமென்றும் இத்தேசவாசியாகிய அசோகமகாராஜா என்னும் ஸ்ரீமான் நீதி சாஸ்திரத்தை முதன்முதல் நவீனமாய் எழுதிவைத்தார். இத்தகைய நல்ல நீதிபோதங்களை பௌத்தமத காலத்தில் எங்கும் எவர்க்கும் ஒழிக்காமல் வெளிப்படுத்தப்பட்டது. இங்ஙனமே உண்டுறங்கொள்வதற்கு நளமகாராஜா பாகசாஸ்திரத்தையும், உல்லாசமாய்க் காலம் போக்க இராவணன் சங்கீத சாஸ்திரத்தையும் எழுதிவைத்ததாய்த் தெரியவருகின்றன. ஆரியர் இங்ஙனமே முற்றும் நன்மை தரும் வழியில் புத்தகங்களெழுதினதாய்த் தோற்றவில்லை. அதிகமாய் ஜாதிப்பற்றுக் காட்டியேயுள்ளார்கள். பற்பல கலைக்கியானங்களிலும், சிற்ப சித்திர வித்தைகளிலுங்கூட திராவிடர்கள் பிற்பட்டவர்களல்ல. திருஷ்டாந்தமாக ஆரியர் இத்தேசத்துச் சிற்பிகளைக்கொண்டு பல ஆலயங்கள் கட்டிவைத்தார்களே யன்றி அவர்களேயாவது அவர்கள் யுக்தி புத்தியின்படியாவது ஒன்றையுங் கட்டிவைத்ததாய்க் காணப்படவில்லை. இதுவுமன்றித் தென் தேசத்திலிருப்பதுபோல வட தேசத்தில் பெரிய கோவில்களுமில்லை. விசித்திரக் கட்டிடங்களுமில்லை. மேலும் அவைகள் சமீப காலத்திற் கட்டியவே யன்றி திராவிட தேசத்திலிருப்பவைகளைப் போல மிகப் புராதனமுடையதன்று. யவனர் (கிரேக்கர்) முதலியவர்கள் திராவிட தேசத்தில் தொழிலாளிகளாய் அமர்ந்து வேலை செய்ததுவும் உண்டெனினும், அவர்களை வேலையாட்களாய் வைத்துக்கொண்ட திராவிடரின் புத்திவன்மையே விசேஷித்திருக்கலாமே யன்றி வேறில்லை. சிற்பம்

என்னும் பதங்கூட தமிழ்ப் பதமேயன்றி ஆரியபதமல்ல. சிற்பவல்லவர்கள் புத்திவன்மையைக் காட்டிய சட்டங்களும் இத்தேசத்திலிருக்கின்றதேயன்றி வேறிடங்களிலில்லை. ஆகையால், இத்தேசக் குடிகள் பூர்வ காலந் தொடங்கி சிற்ப சித்திரத் தொழில்களிலும், பிறவிஷயங்களிலும், நாகரிகமும் நற்பாங்குமுள்ளவரென்றும் ஜாதி சமயபேதம் பாராட்டாதவரென்றும், ஆரியர் வந்தபின்னரே சீரும் சிறப்பும் ஒருங்கே இழந்தனரென்றும் சொல்வதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் பலவுள. ஒருவர் கல்வி நிலையிலும், மற்றொருவர் தாழ் நிலையிலும் இருக்கவேண்டுமென்பது திராவிடரின் கருத்தாயிராது. அவர்களெழுதிய நூல்களிலொன்றிலேனும் தங்களை உயர்த்தியாவது, மற்றவர்களைத் தாழ்த்தியாவது, ஆரிய மதத்தைக் கண்டித் தெழுதியாவது இல்லாமலிருப்பதே திராவிடரின் பெருமை இத்தன்மைத் தென்பதற்கோர் திருஷ்டாந்தமாகும். திக்குசலிய ஆரிய வேதாகமங்களிலோ திராவிடர்களைத் தாசர்களென இழிவுபடுத்தியெழுதியிருப்பதோடுகூட அவர்கள் ஆடுமாடுகளும், செல்வமும் நாசமடைய வேண்டுமென கடவுளைப் பிரார்த்தித்திருப்பதாகவும் தெரிகின்றன. திராவிடர்கள் நூலெழுதிய காலத்தில் ஆரியர்கள் இவ்விடத்திற்கு வரவேயில்லையாதலின் திராவிடர்கள் ஆரியதூஷணை செய்யாதிருப்பதற்குச் சிலர் சொல்லுகிறபடி இது வோர் காரணமாயிருப்பினுமிருக்கலாம். ஆரியர் இத்தேசத்திற்குக் குடியேறிய பின்னர் ஜாதி துவேஷத்தால் கற்பித் தெழுதப்பட்ட இராமாயணமென்னுங் கிரந்தத்தில் இலங்கையை ஜெயித்த இராமனையும், பாரதத்தில் பிரஸ்தாபிக்கின்ற கிருஷ்ணன் முதலிய குறுநில மன்னர்களையும், சிவன், விஷ்ணு முதலிய மற்றப் பேர்களையும், வணங்கும்படியாய்க் கற்பனைக் கிரந்தங்களெழுதினர்கள். திராவிடப் பெண்கள் கைம்மையுறாயின் கணவன் மீதுள்ள அன்பினால் உடன்கட்டையுமேறியிருக்கலாம். இவ்வியல்பை வரவின் நிமித்தம் ஆரியர் விருத்தி செய்துகொண்டனர். இந்தப் பெண்கள் எவர்களாயினுஞ் சரி தெய்வசங்கல்பமாகக் கைம்பெண்களாயின் அதை யோர் ஆதாரமாய் வைத்து அவர்கள் தங்கள் சொத்துக்களை பிராமணர்களுக்கு தானங் கொடுத்து உடன்கட்டை யேறும்படி விதோபதேசஞ் செய்யப்பெற்றனர். * ஆரியர் போதித்தபடியே பாமர[illegible] நமது

---

* அவ்வுடன்கட்டையேறின சிற்சில இடங்களிற்றுவே அழகிய கோயில்களைக் கட்டி இறந்த சாதாரண மானிடர்களைத் தெய்வீகமாக்கி எவரும் வணங்கவேண்டுமென்று போதித்த அவைகளால் வரும் வரும்படியைக்கொண்டு சுகமாய் ஜீவிக்கவும் ஆரம்பித்தனர். மதுரை, திருப்பதி, திருவொற்றியூர் திருவண்ணாமலை, முதலிய திவ்யஸ்தலங்கள் இவ்வனம் உடன்கட்டையேறின ஸ்தானங்களாகக் கருதுகின்றனர் சிலர். ஸ்ரீராமர்,

கோயில்களும் பழக்கவழக்கங்களும் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்க வேண்டுமென்று மர்க்கடப்பிடியாய்ச் சாதிப்பது மதிநுட்பிகளுக்கழகல்லவென்றே நினைக்கின்றேன். நமது கோயில்கள் நியாயமான வழியில் பலருக்கும் அநுகூலமாகவுமிருக்கவேண்டும். இப்பொழுது சுமார் பாடல்பெற்ற

ஸ்ரீ கிருஷ்ணபகவான், கஞ்சி வரதராஜர், தில்லை கோவிந்தராஜர், திருப்பதி வெங்கடாசலபதி, மதுரை சோமசுந்தர பாண்டியன், காசிவிஸ்வநாதர், திருவொற்றியூர் தியாகராயர், பழனி செங்கல்வராயர் முதலியவர்கள் ஓர் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மாநுடர்களேயன்றித் தெய்வங்களல்ல. இராஜா ராயர், பாண்டியன் முதலிய பதங்களே இதற்குப் போதிய சான்றாம். கைப்புண்ணிற்குக் கண்ணாடியேன்? பிற்காலத்தவர் இத்தகையார்கள் பேரில் சற்கவிகள்பாடி பின்னுஞ் சிறப்பித்து அவர்கள் இருந்தவிடத்திற்கு ஸ்தலபுராணங்கள் என்னுமோர் பெரும் பெயரையுண்டாக்கி இறந்துபோன மனிதர்களைக் கடவுளவதாரமென்றும், இன்னின்ன காரணங்களுக்காக அவர்கள் அவதரித்தார்களென்றும், அவர்கள் உயிரோடிருக்கும்போது மாநுடருக்கு மிஞ்சின பல அற்புதக் கிரிகைகளைச் செய்தார்களென்றும், கற்பிதக் கதைகளால் விவரித்து திராவிட தேசத்திலுள்ள பூர்விக தத்துவ விசாரணைக்கு இடையூறுண்டாக்கினர். நாம் இங்ஙனம் ஆரியர் வருவதற்கு முன்னும் பின்னுமுள்ள பூர்விக திராவிட சரித்திரவரலாற்றைப்பற்றி எழுதும்போது இத்தேசத்திலிடையில் வந்த சைவ வைணவ சமயாபிமானிகள் திராவிட தேசத்தின் சரித்திர வுண்மையை மட்டும் கிரகிப்பது தர்மமேயன்றி வீணே என்பேரில் மதாவேசத்தால் உண்டாகும் ஓர்வித அசூயைக்கு இடங்கொடுத்துக்கொள்வதினால் பயனொரு சிறிதுமில்லை. யாதொரு மதாவேசத்தால் தூண்டப்பெற்றும் மனச்சான்றுக்கு விரோதமாய் வேண்டுமென்றேனும் எழுதவுமில்லை. இப்பொழுதிருக்கும் கோயில்களையெல்லாம் இடித்து யாவருமே நாஸ்திகராக வேண்டுமென்பதல்ல, சமநிலைச் சித்தமுடையவர்களும், தத்துவ விசாரணையுள்ளவர்களும் நமது கோயில்களைப் பலவாறு நாகரிகமுள்ள இக்காலத்திலே உபயோகப்படுத்தலாம். கோயில்களெல்லாம் சமாதியென்பது என்கருத்தல்ல, தற்காலத்திலே பஜனை மடங்களும், பிரம்மோபசமாஜ மண்டபங்களும் கட்டப்படுவதைப்போலவே சில கோயில்கள் ஈஸ்வராராதனைக்கென்றே கட்டியிருக்கலாம். யாவும் தேவாலயங்களே யெனினும் சிலவற்றை நாம் சமாதியென்று எடுத்துக்காட்டுவதற்கு ஆதாரங்களுள, நாம் முற்குறித்தவைகளுக்கு ஸ்தல புராணங்களில் ஆதாரமில்லையென்பாராயின் புராண கற்பனையினால் உண்மை ஒருக்கால் மறைக்கப்பட்டிருப்பினும் இருக்கக்கூடும். நமது கொள்கையை ஒப்புக்கொள்ளாத சைவ வை

சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டும் விஷ்ணு ஸ்தலங்கள் நூற்றெட்டுமிருக்கின்றன. இவைகளால் எவ்வெவ் வழிகளில் நமக்குப் பயனுண்டாகின்றன? இவைகளின் தற்கால உண்மை நிலை. பரிகாச ஆஸ்பதமாய் நமது அருமையான பணமும் சிறுகச் சிறுக பாழாகின்றது * ஆகையால்

வை ஸ்தலங்கள் யாவுமே சுயம்பாகவே உண்டானவைகளென்று சொல்லியுஞ் சொல்வர். ஆனால், சுயம்பாய் உண்டான கோயில்கள் என்பது மட்டும் மனப் பூசைக்கும் தர்க்கத்திற்கும் பொருந்தி வராது. ஆங்காங்குள்ள சைவ வைணவ ஆலயங்கள் மனிதர்களால் வருந்தி கட்டப்பட்டு அவைகளிலே கடவுளைப் பிரதிஷ்டை செய்வித்துப் பூசிப்பது இரகசியமான விஷயமல்ல. தேவ தச்சனால் கோவில்களுண்டாகி, கோபுரங்கள் மண்டபங்கள், மதில்கள், நந்தனவனங்கள் முதலிய யாவுமே சிற்பசாஸ்திரப்படி அமைந்து விடுதல் முற்றிலும் அசம்பவம்.

* நம் பணம் பாழாகிறதென்றால் எச் சைவ வைணவனுக்குத்தான் கோபமுண்டாகாதென்று சிலர் நினைக்கக்கூடும். சினமுண்டாக்கவேண்டுமென்பது நமது கருத்தல்ல. சரித்திர விருத்தாந்தத்தைச் சொல்லுகிறோமே யன்றி வேறில்லை. ஆரிய மதத்தை நிலைநிறுத்த பலவித தந்திரோபாயங்கள் செய்யப்பட்டன வென்பதை ஞாபகப்படுத்துகிறோமேயன்றி வேறில்லை. ஆரியர் இங்ஙனம் என்ன முயற்சி செய்தும் பலர் பௌத்தர்களாகவே யிருந்தமையால் யாவரையும் ஆரிய மதத்திற்கிழுக்கப் பின்னும் தாந்திரீக ஆகமாதி கிரந்தங்களை விஸ்தரித் தெழுதுவாராயினர். சிவபெருமான் பார்வதி தேவியாருக்குச் சல்லாப ரூபமாய்ப் போதித்ததாய்ச் சொல்லப்பட்டிருப்பதுவும், புத்தர் தமது சீடர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்வதுவும், இவைகளை அநுசரித்து சைவ வைணவ சமயத்தார் பலரும் எழுதிய புத்தகங்களும். தாந்திரீக கிரந்தங்களுக்கு நிதர்சனங்களாகும். இவற்றினுதவியினால் நம் நாட்டில் பிற்காலத்தில் விக்கிரகாராதனையும், நித்திய நைமித்தியாதி பூஜைகளும், இரதோற்சவங்களும், வேசிகள் நடனமும், வேடிக்கை விநோதங்களு மதிகரித்தன. கோயில்களுக்கு ஆடையாபரணம், மேளதாளங்கள், மனிதர்களுக்கிருக்கிறபடியே சுவாமிகளுக்கும் மனைவி. மக்கள், படுக்கை, வாகனம் முதலிய வைபவங்களும் அதிகரித்தன. வல்லபாசாரிகளுடைய கோவிலென்னும் ஸ்தலத்தில் சுவாமிக்கு எட்டுத் தடவை பூஜை ஆவதுண்டாம். காலையில் மங்கள சேவை, அதாவது இராத்திரி தூங்கின சுவாமியைப் படுக்கைவிட்டெழுப்பி ஸ்நானமும், ஆடையாபரண அலங்காரமுஞ் செய்த பின்னர் வணங்கல். அதன் பின்னர், எட்டுமணிக்குச் சிங்காரச் சேவை, அதாவது சுவாமிக்குத் தைலக்காப்பிட்டு அபிஷேகஞ் செய்வித்து. வஸ்திராபரணாங்

நான் கூறியவற்றைப்பற்றி ஆழ்ந்து ஆலோசித்துப் பாருங்கள். சரியா யாயின் ஒப்புக்கொள்ளுங்கள். உண்மை யறிய முயலுங்கள். ஓ! திராவிட சகோதரர்களே!! முற்குறித்த பௌராணிகக் கொள்கைகளை நியாயமின்றி ஏன் நம்பவேண்டுமோ தெரியவில்லையே என்று உங்களுக்கே படலாம். பழந் தமிழ்க் குடிகளெழுதிய நூல்களொன்றிலேனும் இவ்வா வம் ஏதாவது எழுதப்பட்டிருப்பதாய் ஏற்படாது. தற்சமயத்து பழக்கமே

தரிப்பித்துச் சிங்காசனத்தின்பேரில் வைத்துப் பின்னர் வணங்குதலாகும். மத்தியானம் சுவாமி பசுக்களை மேய்த்துக்கொண்டு இடையரோடு கூடி வனத்திற்கு மாடு மேய்க்கப்போகும் பாவனை. அதன் பின்னர் இராஜ போக சேவை. அதாவது மாடுகளை மேய்த்துக் களைத்துவந்த கிருஷ்ணனுக்குச் சகல போஜனங்களையும் வைத்துப் படைத்து வணங்குதலாகும். அதன் பின்னால் மூன்று மணிக்கு உண்ட களைப்பாறச் சற்றுப் படுத்துறங்கி இளைப்பாறுஞ் சேவை. இதன் பின்னர், சுவாமிக்குச் சிற்றுண்டி வைத்து பூஜித்தல், உலாத்தல் முதலிய திவ்ய சேவைகளுமுள. இவையெல்லாம் ஆனபின்னர் மாலையில் சுவாமிக்கு இராத்திரிக்கேற்ற வுடை தரித்து பூஜித்தலென்பதாகும். எட்டாவது சேவை சயனம். கிருஷ்ண விக்கிரகத்தைப் படுக்கவைத்துப் பக்கத்தில் தாம்பூலாதிகளை வைத்துப் பூஜித்தலாகும். ஆரிய உபதேச மகிமையால் நமக்கேற்பட்ட தென்னிந்திய தேவாலயங்களிலும் இத்தகைய சேவை யுண்டு. நமது தென்னாட்டின் சரித்திர விவகார சேவைகளின் பெருமைகளை நான் விவரிக்காமலேயே அவரவர்களே யூகித்துக்கொள்ளுமாறு விட்டுவிடுகின்றேன். இவ்விடத்திலும் சைவ வைணவக் கோயில்களிலிருக்குஞ் சுவாமிகள் பள்ளியறைக்குச் சென்றபின் மறுநாள் அவ்வறை யெல்லாம் கமகம வென்று வாசனை வீசுதல் அற்புதம் அற்புதமென்பர். அத்தர், பன்னீர், சென்ட், புனுகு சவ்வாது பலவித புஷ்ப வகைகள் முதலியவைகளைப் போட்டிருப்பின் கம கம வென்று மணக்கக் கேட்பானேன்? இதில் தெய்வீகப் பெருமை யென்ன விருக்கின்றது? இவ்வண்ணம் கோயில்களில் தினத்திற்குப் பல பூஜைகளிருப்பதுவுமன்றி, வார உற்சவம், மாத உற்சவம் வருஷோற்சவங்களும் பலவுள. நம் தேசத்தில் எங்குமே இத்தகைய வேடிக்கை விநோதங்களை அதிகரித்து வருகின்றன. சில விடங்களில் கடவுளை மனிதர்களிலும் மிக்க கேவலமாய்ப் பாவித்து வணங்கி வருகின்றனர். இன்னும் கேள்வியிலும் வதந்தியிலும் இருக்கிற விஷயங்களை யெல்லாம் எடுத்து விவரிப்பின் பெருகுமென விடுகின்றேன். ஆரியரால் முற்றும் கெடுதியென்றியம்புவதற்குமில்லை. அவர்களால் எங்குமே கோவில்கள், கட்டடங்கள், கோபுரங்கள், அவைகளால் சிற்பத்தொழில் வளர்ச்சி

விசேஷமென்பது சரியன்று அப்படியாயின் மாறுடர் நியாயத்தைப் பின் பற்றவேண்டியதே யில்லையென்பேன். திராவிடர்கள் ஆரியர் காட்டிய வழியைப் பின்பற்றி இயற்கைக்கு விரோதமாய் எத்தனை நாள் இருப் பரோ தெரியவில்லை. கடல் யாத்திரை, இருதமதி விவாகம், மறுமணம், உசிதமான மதத்தொழிலையும் செய்தல், ஜாதிப் பிரிவுகளின்றி யிருத்தல் முதலிய திராவிட பூர்விக வழக்கங்களையே ஆரிய பண்டிதோத்தமர்களும் சிஷ்டாசாரமே யென்று சபைகள் கூடிப்பேசி அனுஷ்டிக்கவும் போகின் றார்கள். இப்பொழுது அத்தகைய தோற்றங்களுமுள. அப்படியிருக்க நாமேன் கண்மூடிகளாயிருந்து அவர்கள் காட்டிய தகாத வழியில் இருத் தல் வேண்டும். ஆரியர் இங்ஙனம் பற்பல மாறுதலடைவதிலும் நாம்

நிர்பசால்திராபிமானம், பலவித வாத்தியங்கள், அவைகளால் ஓர் விதத் திலுண்டாகும் சங்கீத ஞானம், அதன் பயிற்சி முதலியனவைகள் உண் டாகியதும் ஓர் விதத்திலுண்மையே. இதற் கெதிர்மறையாக திரா விட தேசத்தில் மூட பக்தியும், சாதி சமயத் தொல்லைகளும் பிறவும் விருத்தியானதையும் நாம் ஒழிப்பதற்கில்லை. பழைய காலத்து குருகுல மன்னர்களுக்குப் பிராமணோபதேசமே குருவுபதேசமாக விசேஷித்தி ருந்தபடியால் சொன்னதை யெல்லாம் நம்பினார்கள். இக்காலத்திலும் அங் ஙனமே நம்பவேண்டுமென்கிற நியாயமொன்றுமில்லை. பிராமணர்களைப் பூர்விக திராவிட அரசர்களும் பிறரும் அன்போடாதரித்து வந்ததற்குப் பிரதியுபகாரமாக அவ்வரசர்கள் இறந்தபின் அவர்களைப் பிராமணர்கள் தெய்விகமாக்கிவிட்டார்கள். இப்பொழுது ஒருவரும் நம்மை தெய்விக மாக்கமாட்டார்கள். ஓர் அரசனிருந்தால் அவன் பிரத்தியக்ஷ தெய்வ மென்று எங்கும் ஏத்தி போற்றி அவர்கள்பின்சந்ததியார்களைக் கொண்டு அவர்கள் பெயரால் கோவில்களைக் கட்டுவித்து அவற்றிற்குவேண் டிய மானியங்களையும் விடச்செய்து அவைகளின் வரும்படியைத் தாங்க ளநுபவித்து தங்கள் பின் சந்ததியாரையும் அநுபவிக்கச்செய்து இறந்த ராஜாக்களிய கடவுளுக்கு அவரவர் சரித்திர விவகாரங்களையொட்டி யாம் முன்னமே கூறியவண்ணம் விவாகமென்றும், சுபசோபனங்களென்றும், பள்ளியறைக்குச் செல்லுதலென்றும், காலை மாலை போஜனமென்றும், நகர் சோதனைக்கு வருகிறாரென்றும். உற்சவ ஊர்கோலங்களென்றும், அர்ச்சனை அபிஷேகங்களென்றும், சுவாமி தரிசனமென்றும், தரிசனஞ் செய்துகொள்ள இவ்வளவு பொருள் காணிக்கை கொடுக்கவேண்டுமென் றும், நித்திய நைமித்தியாதி பூஜைகளாகிய இன்னின்ன கிரியைகளுக்கு இன்னின்ன பதார்த்தங்கள் வேண்டுமென்றும் விதிவிலக்குகள் ஏற்படுத் திப் பொருளைக் கிரகிப்பாராயினர்.

சந்தோஷங்கொள்ளவேண்டும். ஆரியரது இம் மாறுதல்களினால் திராவிடரும் ஆரியரும், ஆசார அநுஷ்டானங்களிலும், தொழில்களிலும், சமத்துவமேற்பட்டு நம் தேசத்திலெங்குமே ஜாதி சமய பேதமின்றி ஒரு தாய் வயிற்றிற் பிறந்த மக்களைப்போல ஒற்றுமைப்பட்டு வாழ்வதற்கேதுவுண்டாகும். இப்பொழுதிருக்கிற நமது ஞானமெல்லாம் உண்மையில் பழக்கத்தில் ஒடுங்கி யிருக்கிறதேயின்றி வேறில்லை. சிலசமயம் நம்கொள்கை சிறுவர் விளையாட்டை ஒத்திருக்கின்றது. நாம் செய்யும் விவாகங்கள் தானதருமங்கள் வைதீக ஆசாரங்கள் யாவுமே விநோதத்தை விளைவிக்கின்றன. பிறப் பிறப்பில்லாதவனுக்குக் கிருஷ்ணஜயந்தி, ஸ்ரீராம நவமி என்று பல பிறப்புற்சவங்களும், ஊரும் பேரும் தாயுந் தந்தையும் இல்லாதவனுக்கு வருடந்தோறுந் தவறாது சீதா கல்யாணம், பார்வதி கல்யாணம், ருக்மணி கல்யாணம் என்று பல விவாக மகோற்சவங்களுஞ் செய்து அதற்கேற்றபடியே அவ்வப்போது பிராமண சன்மானமும் நடத்தி இங்ஙனம் பல விநோத வழிகளில் பொருளைப் போக்கி திராவிட தேசத்தின் பூர்வீக நாகரிகத்திற்குப் பிற்பட்டே போய்க்கொண்டிருக்கின்றார்கள். இதுவுமன்றி, நம்மில் கற்றவர்களி லநேகர் ஆரியர்கள் யாவருமே சத்திய வர்த்தனரென்று பிற்காலத்தில் நம்பி வைதீக வேடதாரிகளாய் ஸ்தல புராணங்களிலே பொழுதைப்போக்கி, அந்தாதி, கோவை, கலம்பகம், மாலை முதலிய பிரபந்தங்களைப் பாடி அவற்றில் அநீதிகளையுங்கலந்துரைத்து ஒருவரையொருவர் இகழ்ந்து, தேசப் பொதுநன்மைக் குழைக்கும் நல்லுணர்ச்சியை யிழந்துபோனார்கள். பழையபடி நீதிசாஸ்திரங்களிலும், தத்துவசாஸ்திரங்களிலும் திராவிடர்க ளெப்போது காலங்கழிப்பாரோ அறியேன். திராவிடர்களுக்கும் ஆரிய வேதாகமங்களுக்கும் யாதொரு சம்பந்தமில்லை. தமிழர்க்கு வேதமென்பதொன்றில்லை. திராவிடர்கள் எத்தகைய இலக்கணமுடைய வஸ்துவை முதலில் கடவுளென வணங்கி வந்தனர்? அவர்களது பூர்வீக உண்மைச் சரித்திர வரலாறென்ன? இகபர சம்பந்தமாய் அவர்களெழுதிய யதார்த்த நீதி நூல்களெவை? என்று இவைகளைத் தீர விசாரித்து எது உண்மையோ அதையன்றோ பின் பற்றுவது உசிதமாகும். "திராவிடரின் உண்மை நூல்களும், ஆரியரின் கற்பித நூல்களும்" என்றுமோர் மகுடமிட்டு எழுதினதைப் பார்த்து, சிலர் சீற்றங்கொள்ளினும் கொள்ளக்கூடும். குற்றமே சொல்லப்படாதென்பது சிலர் கொள்கையாயிருக்கின்றது. ஆனால், எனது கொள்கை அதுவன்று. குணத்தைக் கொண்டாடுதலும், குற்றத்தைக் கடிந்துகொள்ளுதலும் என்னியல்பாகும். குற்றத்தைச் சொல்லாவிட்டால் பின்னர் திருந்துவதெப்படி? இவ்வத்தியாயம் ஆரிய மதாபிமானமுள்ள சிலருக்கு வெறுப்பாயிருப்பினும் சமநிலைச் சித்தமுள்ளாரெவர்க்குமே வெறுப்பின்றி விருப்பமாயிருக்குமென்று நம்பி எழுதியிருக்கின்றேன். நானெழுதுவ

தெல்லாம் பிரமாணமேயெனினும் ஜனங்கள் பலர் அநுசரிக்கும் கொள்கைக்கு விரோதமாய் ஒன்றும் எழுதப்படாதென்பாருமுளர். இக்கொள்கை சரியானதென்று எனக்குத் தோற்றவில்லை.

திராவிட மதத்தின் மேன்மையும், தற்காலத்திற்கேற்ற சன்மார்க்கோபதேசமும்.

பூர்விக திராவிட சமயத்தைப் பற்றிச் சுருக்கிக் கூறுமிடத்து தற்சமயத்தில் பரவிவரும் பிரமசமாஜ கொள்கைக்கு ஒருவாறு ஒப்பிட்டுச் சொல்லலாம். ஆரியரின் உண்மையான சமயம் பிரம்ம சமயமாயிருக்கலாமென்று வங்கநாட்டிலும் பிறவிடங்களிலும் பலர் சொல்வதைப்போலவே பூர்விக திராவிடர்களின் கிரந்தங்களின்படி அவர்கள் கொள்கையும் யதார்த்த சுவரூபத்தில் இருக்கலாமென்று நினைக்கின்றோம். சிலர் அல்லவென்று ஆக்ஷேபித்துச் சொல்லவுங்கூடும். எங்ஙனமாயினுமாகுக. எம்மதமும் நாகரிகப்படுவதற்கேற்றபடி வெளியாடம்பரம் அதிகமாகி எப்படியோ ஓர் விதத்தில் முன்னுக்குப் பின் விரோதமாய் விஸ்தியாசப்பட்டுவிடுகின்றது. திருஷ்டாந்தமாக ஆரிய மதமே பற்பல விதமாக விஸ்தீரணப்பட்டுள்ளன. ஓர் விதத்தில் மூடபக்திக்குரிய அர்ச்சனை முதலிய வழக்கங்களை வி[illegible], மற்றோர்விதத்தில் ஞானமார்க்கத்திற்குரிய வேதாந்த உபதேசங்களும், இன்னுமோர் வழியில் தத்துவ சாஸ்திர விசாரணைகளும், மற்றுமோர் வழியில் மத விஷயத்தில் மனித இஷ்டப்படி விருப்புதற்கு இடங்கொடுக்கின்ற சுதந்தரமும், காலங்கள்தோறும் அடைந்த பற்பல மாறுதல்களும், ஆரியமதத்திலிருப்பது எவரறியார்கள். இதனால் நீதியும், நன்னெறியும், தெய்வ பக்தியும், சிறந்திருந்தும், மத்தியில் வந்த ஆரியமத ஆடம்பரங்களினால் உண்மை மூடப்பெற்ற பூர்விக திராவிட மதத்தை விவேகிகள் வெறுத்துவிடுவது சரியல்ல. எம்மதமாயினும் சரி உண்மைக்கும், ஜன ஒற்றுமைக்கும் பொருந்தியதாயிருக்கவேண்டும். சரித்திரத்தை அனுசரித்துப்பேசின் இத்தென்னிந்தியாவும் மதவிஷயத்தில் பற்பல மாறுதல்கள் அடைந்துள்ளன. முதலில் உண்மைக்காதாரமான திராவிட மதமும் அதன்பின் பௌத்த ஜைனமதங்களும், அவைகள் ஒருவாறு நீங்கி ஓங்கியபின் சைவத் திரு

முறைகளும், வைணவத் திருமொழிகளும், ஓங்கி வளர்ந்த பின்னர் கொஞ்சக்காலத்திற்குள் வேதாந்த விசாரணைகளும், பின்னர் சித்தாந்த எத்தாடுகளும் ஏற்பட்டு பூர்வீக திராவிட மதம் மறந்தே போய்விட்டது. இத்தனை மாறுபாடுகளுக்கும் இத்தமிழகமே ஜென்ம பூமியாயிருந்து வருவதின் சரித்திர வரலாற்றுக்கு நாம் சந்தோஷிக்கவேண்டும். தென்னிந்திய மத சரித்திரத்தை விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன். சரித்திரத்தில் பிற்போக்கடைந்திருக்கும் மதங்களே நமக்கிப்பொழுது பெரிதாயிருக்கின்றது. நியாயமிருப்பின் அங்கீகரிக்கவேண்டியதேயாகும். இன்றேல், சரித்திரத்தின்படி உண்மைக்கு உடன்பாடான இயற்கை மதமாகிய திராவிட மதத்திற்குத் திரும்பவேண்டியது நியாயமென்றே தோன்றுகின்றது. திராவிட மதத்திலே யாவும் நீதிபோதனைகளாகவே யிருக்கின்றன. அம்மதத்தில் வெளிவேஷ ஆடம்பரங்களொன்றுமில்லை. யதார்த்த ஸ்வரூபமானது அம்மத போதனையின்படி நீதிநூற்களே நமது குரு. அந்நீதிநூற் போதனைகளே நாம் கொள்ளவேண்டிய குருவுபதேசம். தத்துவ சாஸ்திரங்களே நாம் பாராயணம் பண்ணத்தக்க வேதம். கல்வியே நாம் எந்நாளும் பழகவேண்டிய சாதனை. நன்மை புரிதலே நமது மதம். நன்மையாளர் வசிக்குமிடங்களே நாம் செல்லத்தக்க ஆலயம். நன்மையே நாம் தொழும் தெய்வம். நன்மைசெய்து உலக முவக்கப் பெறுதலே நாம் அடையத்தக்க முக்தி; இவை எல்லா மதத்திற்கும் பொது விதியெனச் சிலர் சொல்லினும் இப்பொழுது வேரூன்றி விட்ட ஆரிய மதத்திலே அல்லது ஆரிய மத அவலம்பிகளாகிய மதாபிமானிகளிடத்திலே இக்கருத்து வெளிப்படையாக விருப்பதில்லை. மநுக்குலத்தவர் யாவரும் ஒன்றென்றும், சுவாமியைத் தொழுதற்குச் சகலருக்கும் சுதந்தரமுண்டென்றும் ஆரியர் பகிரங்கப்படுத்தவில்லை. இதுவுமன்றி ஆரிய ஜாதியார் சுயநலங்கோரி மத விஷயத்தில் எழுதினதெல்லாம் மற்றச் சாதியாருக்குச் சட்டதிட்டமாய் மாறின. திராவிட கிரந்தங்களோ அங்ஙன மெழுதவுமில்லை. விலக்கி வைக்கவுமில்லை. இவ்விஷயம் சாதாரண ஜனங்களுக்குத் தெரியாமையினாலேயே பிற்காலத்தில் தமிழ்நாட்டிலும் மலையாளக் கரையிலும், ஆந்திர தேசத்திலும், ஆரிய மத ஆதரணையின்மையால் நம்மிற் பலர் மகமதியராகவும், கிறிஸ்தவராகவும், வேறு பல மதஸ்தர்களாகவும் மாறினர். இருப்பினும், அங்கங்கே அவர்கள் இன்றும் தங்கள் பூர்வீக பாஷைகளையே பேசி இந்து நடை யுடை பாவனைகளை அனுசரித்தும் வருகின்றனர். அந்தோ! ஓர் ஜனசமூகம் இங்ஙனம் சின்னபின்னமாகச் சிதறுண்டுபோனதை நினைத்தால் வயிறு பற்றி யெரிகின்றது. நாகரிகப்பட்ட இக்காலத்திலுங்கூட ஆரியமதம் பிரிந்துபோனவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. இந்தியாவில் ஓர் ஜாதியா, ஓர் மதமா, என்று எவரும் இகழும்படி இடம்பெற்றிரு

